REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஓகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 88 இல. 198 | August 21,Friday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil
இப்போது பரபரப்பான விற்பனையில்...
ஓகஸ்ட் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!


# எந்தவொரு சக்திக்கும் அடிபணியாது சுபிட்சத்தை நோக்கிய பயணமே இலக்கு

## நாட்டின் இறைமை, மக்களது பாதுகாப்பு சகல வழிகளிலும் உறுதிப்படுத்தப்படும்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

எந்தவொரு சக்திக்கும் அடிபணியாது நாட்டின் இறைமையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்து நாட்டை சுபிட்சத்தை நோக்கி கொண்டு செல்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையின் காரணமாக இம்முறை பொதுத் தேர்தலில் மக்கள் உற்சாகமாக எமக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கு தொடர்ந்தும்

### புதிய பாராளுமன்ற ஆரம்ப தின கொள்கை பிரகடன உரையில் ஜனாதிபதி கோட்டாபய



சேவை செய்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். எக்காரணத்தினாலும் அந்த எதிர்பார்ப்புகள் வீண்போவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை நேற்று (20) ஆரம்பித்து வைத்து ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பாரம்பரியங்களுக்கு முன்னுரிமையளித்து எளிமையாக நடைபெற்றது. அணிவகுப்பு ஊர்வலம் 04

## நம்பிக்கையுடன் வழங்கிய பொறுப்பை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுவேன்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

தம் மீது நம்பிக்கை வைத்து வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உச்ச அளவில் செயற்படப்போவதாக புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மக்களுக்கு பொறுப்புக் கூறும் சிறந்த முன்மாதிரியான பாராளுமன்றத்தை உருவாக்குவதற்கு அனைத்து உறுப்பினர்களதும் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதிய சபாநாயகராக பதவி ஏற்ற பின்னர் பிரதமர் மற்றும் கட்சித் தலைவர்களின் 04

## பக்கச்சார்பின்றி நடுநிலையாக செயற்படும் ஆளுமை நிறைந்த புதிய சபாநாயகர்

### பிரதமர் மஹிந்த சபையில் பாராட்டு



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பக்கச்சார்பின்றி நடுநிலையாக செயற்படும் ஆளுமை புதிய சபாநாயகருக்கு இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

09 ஆவது பாராளுமன்ற முதலாவது அமர்வு நேற்று நடைபெற்றது. முதல் அம்சமாக சபாநாயகர் தெரிவு நடைபெற்றது. புதிய சபாநாயகர் தெரிவின் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர்,

புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியான அவர், 1983 இடைத் தேர்தலில் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.

அவர் நாட்டின் மூன்றாவது பிரதிநிதியாக உள்ளார். 04

## புதிய சபாநாயகருக்கு இ.தொ.கா. பாராட்டு



புதிய சபாநாயகருக்கு இ.தொ.கா சார்பில் பாராட்டு தெரிவிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

புதிய சபாநாயகருக்கு கட்சித் தலைவர்கள் பாராட்டு தெரிவித்தனர். இதன் போது உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இளம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். 04

## சபையின் மாண்பு, எம்.பிமாரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரை



**லோரன்ஸ் செல்வநாயகம். ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்றத்தின் மாண்பையும் எம்.பிக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டுமென ஈ.பி.டி.பி தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மேலும் குறிப்பிட்டதாவது,

பொருத்தமான ஒருவர் சபாநாயகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுன்றத்தின் மாண்பையும் எம்.பிக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவீர்களென நம்புகிறோம். 04

### புதிய பாராளுமன்றத்தில் உயர் பதவிகள்;

## சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய





### குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 09 ஆவது பாராளுமன்றத்திற்கான புதிய சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டார். நேற்றைய தினம் நடைபெற்ற ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தனவும் 04


## புதிய சபாநாயகருக்கு தமிழ் எம்.பிக்கள் பலரும் வாழ்த்து

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

இரு தரப்பிற்கும் செவிமடுத்து பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்களை பேணி செயற்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்புத் தலைவர் 04










## ராஜிதவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



2014 ஆம் ஆண்டு முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தை குத்தகைக்கு விட்டு அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்திமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் 04

## சகல இனத்தவரும் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியலமைப்பு

### உருவாக்க வேண்டுமென்கிறார் அதாவுல்லா



சகல இனத்தினரும் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா எம்.பி. தெரிவித்தார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், 04

### தேசியப் பட்டியல்

## ரணில் எடுத்துள்ள அதிரடி தீர்மானம்



ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலைவர் ஒருவரை நியமிக்கும் நெருக்கடி தீரும் வரையில், தேசியப் பட்டியல் உறுப்பினரை தெரிவு செய்வதை நிறுத்தி வைக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 04

## மனசாட்சிக்கு அடிபணிந்து செயலாற்ற சஜித் அழைப்பு



ஜனநாயக ரீதியில் பதிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

09ஆவது பாராளுமன்ற அமர்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 04

## நல்லாட்சி அரசாங்கம் என்னை திட்டமிட்டு சிறையில் அடைத்தது

### பாராளுமன்ற கன்னி உரையில் பிள்ளையான்



**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

நல்லாட்சி அரசாங்கம் என்னை திட்டமிட்டு சிறைப்படுத்தியிருக்கின்றது. ஐந்து வருடங்கள் நான் சிறைவாசம் அனுபவித்துள்ளேன் என பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் 04

## திருத்தங்கள் மேற்கொள்கையில் இருதரப்பு உடன்பாடு அவசியம்

### மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



இரு தரப்பு உடன்பாட்டுடன் சகல திருத்தங்களும் இடம்பெற வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தெரிவித்தார். புதிய சபாநாயகர் தெரிவையடுத்து கருத்துத் தெரிவித்த அவர்,

மு.கா சார்பில் எமது பாராட்டை தெரிவிக்கிறோம். உங்களுக்குக் கிடைக்க வேண்டிய கௌரவம் கிடைத்துள்ளது. 04



மக்களிடம் பணம் பெற்று நோட்டீஸ் அடித்து விளம்பரம் போட்டு வெற்றிபெற்ற ஐயா.. மக்களுக்கு ஒரு வார்த்தை நன்றி கூட சொல்லல பார்த்தியே....

அவரோட அலுவல் முடிஞ்சுது.. இனி அஞ்சு வருஷத்துக்கு ஒரு பிரச்சினையுமில்ல, அதுக்குப் பிறகு சுத்திக்கொண்டு வருவர்–தானே, வரட்டும் ஒரு கை பாப்போம்...

### கன்னியமர்வுக்கு

## படகில் வந்திறங்கிய பாராளுமன்ற உறுப்பினர்

வரலாற்றின் முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினரொருவர் பாராளுமன்ற அமர்விற்கு படகில் வந்ததாக தெரியவருகிறது.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் கன்னியமர்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியிருந்த நிலையில் புதிய பாராளுமன்ற உறுப்பினரான மதுர விதானகே இவ்வாறு படகில் வந்து வரலாற்றில் 04

## பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தார்மீக கடமை ஐந்து ராஜபக்ஷக்களின் கைகளில்

### தேச பிதாவின் கௌரவத்தை பாதுகாப்பது கடமை என பிரதமருக்கு சங்கரி கடிதம்



ஐந்து ராஜபக்ஷக்களுக்கும் இணைந்து பிரச்சினைகளை கையிலெடுத்து அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் தார்மீக கடமை காணப்படுவதாக தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் நேற்று (20) எழுதியுள்ள கடிதத்திலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக் கடித்ததில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“நீங்கள் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டதற்கு எனது உளங்கனிந்த வாழ்த்துகள்.

இப்பதவி தங்களுக்கு புதிதல்ல என்பதையும் அனைவரும் அறிவோம். 04

# 9வது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு














2020 ஓகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.15 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.24 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் வைகாசி 16

ராகுகாலம் : பகல் : 10.22 – 11.52வரை
சுபநேரம் : காலை : 5.52 – 7.22வரை
யோகம்: மரணசித்த யோகம்
நட்சத்திரம்: மகம் ந. இரவு 3.42 வரை
திதி: சப்தமி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk



ஆளும் கட்சி பிரதம கொரடாவாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார், அவர் பாரா ளுமன்ற கட்டட தொகுதி அலுவலகத்தில் கடமை பொறுப்பேற்பின் போது...



அமைச்சர் ஜொன்ஸ்டன் சபை முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து கடமைகளை பொறுப்பேற்கும் போது பிடிக்கப்பட்ட படம்.

*விமான நிலைய புனரமைப்பு*

## சில நிறுவனங்களுக்கு வழங்கும் பணம் இடைநிறுத்த பணிப்பு

**அமைச்சர் பிரசன்ன பணிப்பு**

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கட்டுநாயக்க விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் உரிய நேரகாலத்துக்கு பணிகளை நிறைவு செய்யாத நிறுவனங்களுக்கான கட்டணச் செலுத்தல்களை இடைநிறுத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, விமான நிலைய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தொடர்ந்து கால அவகாசத்தை கோரும் நிறுவனங்களுக்கு கால அவகாசத்தை வழங்க வேண்டாமெனவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளின் வளர்ச்சி தொடர்பில் ஆராயும் விசேட கூட்டமொன்று அமைச்சர் பிரசன்ன ரனதுங்க தலைமையில் நேற்று நடைபெற்றது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் அமைக்கப்படவுள்ள

04

# ஜனாதிபதியின் கொள்கை உரை மீதான விவாதம் இன்று

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கொள்கை விளக்க உரை மீதான விவாதம் இன்றைய தினம் (21) சபையில் நடைபெறுமென கடற்றொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றைய தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்றது.

இதன்போது எதிர்க்கட்சியினர் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான விவாதத்திற்கு இரண்டு நாள் விவாதம் கோரியுள்ள நிலையில் அவர்களுக்கு விவாதத்திற்காக ஒரு நாள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இன்றைய தினம் அந்த விவாதம் நடைபெறும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, அரசாங்கம் உடனடியாக வரவு செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க போவதில்லையென்றும் இந்த வருடத்தின் எஞ்சிய காலத்திற்கு குறை நிரப்பு பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான விவாதம் எதிர்வரும்

04

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 130.15 | 136.92 |
| கனடியன் டொலர் | 137.69 | 143.74 |
| யூரோ | 216.22 | 224.66 |
| ஜப்பான் யென் | 1.7156 | 1.7950 |
| சிங்கப்பூர் டொலர் | 132.94 | 138.76 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 239.63 | 248.18 |
| சுவிஸ் பிராங்க் | 199.12 | 207.58 |
| அமெரிக்க டொலர் | 183.68 | 188.48 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

## வெளித் தரப்பினரின் அழுத்தம் இன்றி செயற்பட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம் ஷம்ஸ் பாஹிம்**



புதிய சபாநாயகர் வெளித் தரப்பினரின் அழுத்தமின்றி செயற்பட வேண்டுமென ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க எம்.பி தெரிவித்தார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மேலும் குறிப்பிட்டதாவது,

சபாநாயகர் பொறுப்பிற்கு தகுதியான ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சகல எம்.பிக்களின்

04

# கிழக்கின் ஆட்சியை முஸ்லிம் காங்கிரஸே நிர்ணயிக்கும்

**கல்முனை விசேட நிருபர்**



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வகிபாகம் என்பது ஆட்சியை நிர்ணயிக்கின்றளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென அக்கட்சியின் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காக உழைத்த கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு மருதமுனை சமூக வள நிலையத்தில் (19) கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம் றகீப் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்; பொதுத் தேர்தல்

04

# முன்னாள் சீ.ஐ.டி பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு தொடந்தும் விளக்கமறியல்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகரவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதவான் நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதவான் மஞ்சுள கருணாரத்னவால் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர பொலிஸாருக்கு அவதூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த நிலையில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் வாஸ் குணவர்தனவுக்கு உதவிய குற்றச்சாட்டில் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் வாஸ் குணவர்தன, கம்பஹா கலேகொஹேனயில் உள்ள ஒரு வீட்டில் பதுக்கிவைத்திருந்த துப்பாக்கியை கைப்பற்றியிருந்த புலனாய்வு அதிகாரியான ஷானி அபேசேகர, அதனை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு வழங்காது மறைத்து வைத்து முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் வாஸ் குணவர்தனவுக்கு உதவியிருந்த குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டிருந்தார். இதேவேளை, ஷானி அபேசேகரவுடன் கைது செய்யப்பட்டிருந்த உப பொலிஸ் பரிசோதகர் ரோஹண மெண்டிஸையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய இருவரையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

## சகல மக்களின் உரிமைகளையும் மதிக்கக் கூடிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்



சகல மக்களின் உரிமைகளையும் மதிக்கக் கூடிய அரசியலமைப் பொன்றை உருவாக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாட் பதியுதீன் எம்.பி தெரிவித்தார்.

புதிய சபாநாயகர் தெரிவை தொடர்ந்து வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றிய அவர்,

எமது கட்சி சார்பில் சபாநாயகருக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம். எமது காவலனாக செயற்படுவீர்களென

04

# நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்க சபாநாயகர் வழிகாட்ட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்கு சபாநாயகர் வழிகாட்ட வேண்டுமென சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்.பி தெரிவித்தார்.

புதிய சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவானதையடுத்து கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

இங்கு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்கு சபாநாயகர் வழிகாட்ட வேண்டும். உங்கள் தலைமைத்துவம் பாராளுமன்றத்தின் எதிர்கால செயற்பாடுகளுக்கு முக்கியமானது. புதிய எம்.பிக்களுக்கு பல விடயங்களை கற்கக்கூடிய இடம் இது. புதிய சபாநாயகருக்கு முழு ஒத்துழைப்பும் வழங்குவேன்.

தேசிய சுதந்திர முன்னணி தலைவர் அமைச்சர் விமல் வீரவங்ச

கடந்த காலத்தில் பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் அதிருப்தி அடைந்திருந்தார்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் சகலரும் பாராளுமன்றத்தை கௌரவமாக பார்க்கும் நிலை உருவாக வேண்டும்.

1987 இல் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் போது மனசாட்சிப் பிரகாரம் செயற்பட்டு அரசில் இருந்து வெளியேறியவர் மஹிந்த யாப்பா.உங்களை போன்றவர்களின் தெரிவு பாராளுமன்றத்திற்கு கௌரவமாகும்.

பிவிதுரு ஹெல உருமய

04

# 30 வருட அரசியல் அனுபவம் மிக்க புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

**சபை நிருபர்கள்**

புதிய சபாநாயகரான மஹிந்த யாப்பா அபேவர்தன 30 வருட அரசியல் அனுபவம் மிக்கவர்.

1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி மாத்தறை பிரதேசத்தில் பிறந்த மஹிந்த யாப்பா அபேவர்தன, தனது ஆரம்பக் கல்வியை தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலயம் மற்றும் மாத்தறை ராகுல வித்தியாலயத்திலும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் கொழும்பு, பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுக் கொண்டுள்ள அவர் இந்தியாவின் சண்டிகார் முகாமைத்துவ நிறுவனத்தில் முகாமைத்துவம் தொடர்பில் விசேட கற்கையையும் மேற்கொண்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டு ஹக்மன தேர்தல் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி முதன்முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.

கடந்த 23 ஆண்டுகளாக பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து பதவி வகித்து வரும் மஹிந்த யாப்பா கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு 80,895 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.

மஹிந்த யாப்பா அபேவர்தன தென் மாகாண சபையின் முதலமைச்சராக பதவி

04

# தேசிய விளையாட்டுப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தனவை அமைச்சர் நாமல் ராஜபக்ச நியமித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு மஹேல ஜயவர்தன பேரவையின் தலைவராக தொடரும் வகையில் இந்த நியமனத்தை அமைச்சர் நாமல் ராஜபக்ச வழங்கியுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்வுசக்கு விளையாட்டு கொள்கை, நாட்டில் விளையாட்டுகளை வளர்ப்பது மற்றும் முன்னெடுக்கப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் இந்த குழு ஆலோசனை வழங்க வேண்டும்.

அதேபோன்று இக்குழுவின் முக்கிய உறுப்பினராக இலங்கை அணியின் மற்றுமொரு முன்னாள் தலைவர் குமார சங்கக்காரவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

04

# திணைக்களங்களின் கீழ் இருக்கும் வட பகுதி காணிகள் விளை நிலங்களாக மாற்றப்படும்

*அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்*



வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்களின் பிடியில் பயன்பாடின்றிக் சிக்கிக் கிடக்கும் காணிகளை விடுவித்து நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய செய்கையை மேம்படுத்துவதே தமது நோக்கமென்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடலுணவு மற்றும் நன்னீர் உள்ளிட்ட நீரியல் வளம் சார்ந்த உணவு வகைகளில் இந்த நாட்டை தன்னிறைவு காணச் செய்வதும், ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்து அதிகளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதுமே தமது இலக்கு எனவும் தெரிவித்துள்ளார்.

9 ஆவது பாராளுமன்ற கன்னி அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் பாராளுமன்றில் (20) உரையாற்றிய

04

## சபையின் மாண்பு,...

கட்சி சார்பில் எமது வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம் என்றும் குறிப்பிட்டார்.

## புதிய சபாநாயகருக்கு...

மக்களின் பெரும்பான்மை ஆணை கிடைத்துள்ளது. இ.தொ.கா சார்பில் எமது பாராட்டை தெரிவிக்கிறோம் என்றார்.

## ரணில் எடுத்துள்ள...

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினரை நியமிப்பதில் தாமதம் ஏற்படுமென அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## ராஜிதவுக்கு எதிராக...

செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் அவருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## திருத்தங்கள் மேற்கொள்ளுபோது...

கடந்த காலத்தில் பல மறுசீரமைப்புகள் இடம்பெற்றன. இரு தரப்பு உடன்பாட்டுடன் சகல திருத்தங்களும் இடம்பெற வேண்டும். அரசியலமைப்பு பேரவையின் தலைவராகவும் தெரிவாகியுள்ளீர்கள். சபாநாயகருக்குறிய பொறுப்பை சரிவர நிறைவேற்றுவீர்களென எதிர்பார்க்கிறோம்.

## பிரச்சினைகளை தீர்ப்பதற்கான...

2007ஆம் ஆண்டு மாசி மாதம் 04ஆம் திகதி காலி முகத்திடலில் 59ஆவது சுதந்திரதின விழாவில் நீங்கள், என்னையும் டக்ளஸ் தேவானந்தாவையும் குறிப்பிட்டு ஆற்றிய உரையின் பகுதியை தங்களுக்கு ஞாபகமூட்டுவதற்காக இங்கே தந்துள்ளேன். 'தமிழ், இஸ்லாமிய மக்களின் உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. அத்துடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர்கால உலகத்தை வளம்பெற வைக்க வேண்டும், என்று மொறகஹாகந்த மகா சமுத்திர திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது நான் கூறியதை, மீண்டும் வற்புறுத்தி கூறுவது யாதெனில், பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதற்கு மிகப்பொருத்தமான ஆயுதம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதே.

அதற்கு தற்போது தென்னிலங்கை சிங்கள மக்கள் தயாராகிவிட்டார்கள். விடுதலைப் புலிகளின் வெறித்தனமான வேண்டுகோளிற்கு இடமளியோம். இருப்பினும் நாம் நியாயமாகவும் நேர்மையாகவும் நடப்பின் குறைந்தபட்சம் திருவாளர்கள் ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் இசைந்து செயற்பட வேண்டும்' என கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## படகில் வந்திறங்கிய...

இடம்பிடித்துள்ளார். இது தொடர்பில் கோட்டே நகரசபையின் முன்னாள் நகர முதல்வரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மதுர விதானகே கூறுகையில், ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கமைவாக தியவன்னா ஓயா அபிவிருத்தி செய்யப்பட்டது. இதனால் இன்றைய தினம் பாராளுமன்றத்துக்கு படகில் வரமுடிந்தது. அத்துடன் கொழும்பு நகர வீதிகளில் வாகன நெரிசலை குறைப்பதற்காக நீர் ஓடைகள் மூலம் போக்குவரத்து செய்வதில் பொது மக்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

## சில நிறுவனங்களுக்கு... 03ஆம் பக்க தொடர்...

இரண்டாவது ஓடுதளம் மற்றும் பயணிகள் போக்குவரத்து முனையத்தி அபிவிருத்திகளை முன்னெடுப்பது குறித்து இந்தச் சந்திப்பில் ஆழமாக ஆராயப்பட்டது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரண்டாவது ஓடுதளத்தை அமைக்கும் பாரிய அபிவிருத்தித்திட்டத்தை விரைவாக முடிப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இந்த அபிவிருத்தி திட்டத்திக் மூலம் புதிய பயணிகள் போக்குவரத்து முனையமொன்றும் உருவாக்கப்படுமென அமைச்சர் இதன்போது மேலும் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதியின் கொள்கை...

வியாழக்கிழமை(27) மற்றும் வெள்ளிக்கிழமை (28) நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கின் ஆட்சியை முஸ்லிம்...

முடிந்த கையோடு கிழக்கின் ஆட்சியை பொதுஜன பெரமுன கைப்பற்ற வேண்டுமென்ற உறுதிப்பாட்டை பஷில் ராஜபக்ஷ வெளியிட்டிருக்கிறார். கிழக்கு மாகாணத்தில் பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிகளாக இருக்கின்ற பிள்ளையான், கருணா, அதாஉல்லாஹ் என்று அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்த வாக்கு வங்கியானது ஐக்கிய மக்கள் சக்தி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளின் ஒட்டுமொத்த வாக்கு வங்கியை விட குறைவாகவே இருக்கிறது.

இந்நிலையில் நடைபெறப்போகும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் எமது முஸ்லிம் காங்கிரஸின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## நாட்டில் சிறந்த அரசியல் கலாசாரத்தை...

தலைவர் அமைச்சர் உதய கம்மம்பில,...

பலமான அரசு உருவாகியுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு நெருக்கமான ஆணை கிடைத்துள்ளது.மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் புதிய யாப்பு உருவாக்கப்பட வேண்டும்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,...

பாரிய அரசியல் மாற்றத்தின் பின்னர் பலமான அரசு உருவாகியுள்ளது.

கடந்த காலத்தில் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் மக்களின் இறைமைக்கும் குந்தகம் ஏற்பட்டது.அது மாற்றப்பட்டுள்ளது.

## 30 வருட அரசியல் அனுபவம் மிக்க புதிய...

வகித்ததுடன் அவர் சுகாதாரம், கலாசார விவகாரங்கள், தேசிய பாரம்பரியம், நீர்ப்பாசனம், வர்த்தகம், பாராளுமன்ற விவகாரம், விவசாயம் போன்ற பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1987 ஆம் ஆண்டில் கோப் குழுவின் உறுப்பினராக பணியாற்றியவர்.

## வெளித் தரப்பினரின் அழுத்தம் இன்றி...

ஆதரவுடன் தெரிவாகியுள்ளார். வெளித் தரப்பினரின் அழுத்தமின்றி செயற்பட கடந்த கால சபாநாயகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பாராளுமன்றத்தை பலவீனப்படுத்த இடமளிக்கக் கூடாது. உங்கள் அரசியல் வாழ்வில் பதவிக்கு அப்பால் நின்று முடிவு எடுத்துள்ளீர்கள்.

## சகல மக்களின் உரிமைகளையும்...

எதிர்பார்க்கிறோம். அரசியலமைப்பை மாற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது.கடந்த காலங்களிலும் அரசியலமைப்பு மாற்றங்கள் நடந்துள்ளன. ஒரு சாராரையோ கட்சியையோ இனவாதிகளையோ திருப்திப்படுத்துவதற்கன்றி சகல மக்களின் உரிமைகளையும் மதிக்கக் கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

## தேசிய விளையாட்டுப் பேரவைக்கு...

தேசிய விளையாட்டு பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் விபரம் வருமாறு,

மஹேல ஜயவர்தன (தலைவர்), ஜூலியன் போலிங், குமார் சங்கக்கார, டிலந்த மலகமுவ, கஸ்தூரி செல்வராஜா வில்சன், சுப்புன் வீரசிங்க, ரொஹான் பெர்னாண்டோ, ருவான் கெரகல, சஞ்ஜீவ விக்கிரமநாயக்க, மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹோட்டி, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, ரோவேனா சமரசிங்க, யஸ்வந்த் முத்தெட்டுவேகம, ஏ.ஜே.எஸ்.எஸ்.எதிரிசூரிய, தியுமி அபேசிங்க (குழு உறுப்பினர்கள்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## திணைக்களங்களின் பகுதி...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் எம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு நாமும் கடுமையாக உழைத்து, ஒத்துழைப்பு வழங்குவதே எமதும் முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

அந்தவகையில், எமது புலம்பெயர் உறவுகளுக்கு ஓர் அழைப்பினை விடுத்திருந்தேன். அதாவது, இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன். எமக்கு முந்திய ஆட்சிக் காலத்தில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்தவர்வகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் போன்று எதிர்காலத்தில் இடம்பெறாது என்ற உத்தரவாத்தையும் வழங்கியுள்ளேன் என்றார்.

## எந்தவொரு சக்திக்கும்...

போன்ற அம்சங்கள் நிகழ்வில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதியை புதிய சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்த்தன மற்றும் பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக ஆகியோர் வரவேற்றனர்.

பிரதான வாயிலில் பாடசாலை மாணவிகள் மங்கள கீதம் இசைத்து ஜனாதிபதியை வரவேற்றனர்.

ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் புரட்சியொன்றை ஏற்படுத்திய ஒரு முக்கிய தேர்தலாகும். வரலாற்றில் முதற் தடவையாக விகிதாசார முறைமையின் கீழ் நடைபெற்ற தேர்தல் ஒன்றில் 2/3 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையுடன் ஸ்திரமான ஆட்சியொன்றை அமைக்கும் வாய்ப்பு அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. இந்த மக்கள் ஆணையை வழங்கிய நாட்டுப்பற்றுடைய மக்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவைகளை வழங்குவதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தல் முதல் பாராளுமன்ற தேர்தல் வரையான காலம் எமக்கு மிகவும் சவால்மிக்க ஒரு காலப்பகுதியாக இருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த ஒரு பொருளாதாரத்தையே நாம் பொறுப்பேற்றோம். இதற்கு மேலதிகமாக எமக்கு இக்காலப்பகுதியில் முழு உலகையும் ஆட்கொண்டிருந்த கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. நோய்த் தொற்று நிலைமை பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெளிநாடுகளினதும் பாராட்டைப் பெற்றது. இந்த ஒன்பது மாதக் காலப் பகுதியில் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நாம் நாட்டை நிர்வகித்த முறைபற்றி நாட்டு மக்கள் தெளிவுடன் உள்ளார்கள் என்பதை கிடைத்துள்ள மிகப் பெரும் மக்கள் ஆணை எடுத்துக் காட்டுகிறது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் தனது பதவிக்காலப் பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து வளப்படுத்துவதாகவும் தான் உறுதியளித்திருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அரச நிர்வாகத்திற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தான் முன்னணி பௌத்த பிக்குகளைக் கொண்ட ஆலோசனை சபை ஒன்றை அமைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். தொல்பொருள் பெறுமதிவாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கும் பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பௌத்த சமயத்திற்கான முன்னுரிமையை உறுதி செய்யும் அதேநேரம், இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதுவும் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கை உறுதி செய்யப்பட்டு சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்று மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று தான் உறுதியளித்தவாறு பொதுவான மக்கள் வாழ்க்கைக்கு தடையாக உள்ள பாதாள உலக செயற்பாடுகள், போதைப் பொருள் பிரச்சினை போன்ற சமூக சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு இருப்பது மக்களின் நம்பிக்கை மேம்படுத்துவதற்கு காரணமாகியுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார்.

'நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாடு குறித்து பெருமையடைகிறேன். எனக்கு எனது நாடு பற்றிய ஒரு தொலை நோக்குள்ளது.

எமது நோக்கம் வினைத்திறன் மிக்க பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்கப் பண்பாடான சமூகத்தைக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதாகும்' எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மக்களுக்கு உறுதியளித்த சுபிட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக தன்னுடன் ஒன்றிணையுமாறு அனைவருக்கும் நட்புக் கரம் நீட்டி அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

## நம்பிக்கையுடன்...

வாழ்த்துக்களையடுத்து அதற்கு நன்றி தெரிவித்து உரையாற்றும் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 09 ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக என்னை தேர்ந்தெடுத்தமைக்கு நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் இந்த உயரிய சபையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஏனைய அனைத்து கட்சித் தலைவர்களும் எனக்கு வாழ்த்து தெரிவித்தனர். அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இந்த உயர்ந்த பதவியின் சுயாதீனத்தை கவனத்திற்கொண்டு எந்த பாரபட்சமும் இன்றி விசேட இலட்சணங்களைப் பாதுகாத்து எனக்கு நீங்கள் வழங்கியுள்ள பொறுப்பை உச்ச அளவில் மிக நேர்மையாகவும் வினைத்திறனுடனும் அதை நான் மேற்கொள்வேன்.

சபாநாயகர் பதவியில் எனது அனைத்து செயற்பாடுகளையும் சாத்தியமாக முன்னெடுத்துச் செல்வதற்கும் மக்களுக்கு பொறுப்புக் கூறும் முன்மாதிரியான பாராளுமன்றத்தை உருவாக்குவதற்கும் உங்கள் அனைவரதும் முழுமையான ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

இந்த காலகட்டங்களில் மக்களின் பெரும் கவனத்தை ஈர்த்துள்ள கொரோனா வைரஸ் பாதிப்பைக் கட்டுப்படுத்தி அரசாங்கம் தற்போது நாட்டில் அபிவிருத்தியை முன்னெடுத்து வரும் நிலையில் சபாநாயகராக பொறுப்பேற்றுக்கொண்டமையைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் சுபிட்சம் தொடர்பில் பாராளுமன்றத்தில் செயற்பாடுகளை சிறந்த பயனுள்ளதாக முன்னெடுப்பதற்கு செயற்படுவேன்.பாராளுமன்றத்தின் சுயாதீனத்தை பலப்படுத்தி சட்டவாக்கத்திற்கிணங்க பாராளுமன்ற செயற்பாடுகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்கள் நிலையியற் கட்டளைகளுக்கிணங்க சட்டவாக்கத்தைப் பலப்படுத்தி முறையான சபை பொறிமுறையை முன்னெடுத்துச் செல்ல அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பூரண ஒத்துழைப்பை அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெற்றுக் கொடுப்பார்கள் என நம்புகின்றேன். பாராளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் ஒத்துழைப்புக்கிணங்க சட்டவாக்கத்தை பலமாக முன்னெடுக்க முடியும் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அரசியல் முரண்பாடுகள் தற்காலிக சிக்கல்கள் நாட்டில் நிலவும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து முடிந்த வகையில் மக்களின் இறைமையை பாதுகாக்கின்ற வேற்றுமையில் ஒற்றுமை என்ற வகையில் எப்போதும் மக்கள் எதிர்பார்க்கும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இலங்கையின் தனித்துவத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்பதற்கு நாம் திடசங்கற்பம் பூணுவோம் என்றும் புதிய சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

## பக்கச்சார்பின்றி நடுநிலையாக...

தெற்கிலிருந்து சபாநாயகராக தெரிவாகியுள்ளது குறித்து பெருமையடைகிறோம். சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான அவர் பாராளுமன்ற சம்பிரதாயங்களை நன்கறிந்தவர். மாகாண முதலமைச்சராகவும் மாகாண ஆட்சி முறையை நன்கறிந்தவர் அவர். பல அமைச்சு பதவிகளை வகித்துள்ளார்.நிர்வாகத் துறையில் பாரிய அனுபவம் கொண்டவர். பக்கச்சார்பின்றி நடுநிலையாக செயற்படும் ஆளுமை அவருக்குள்ளது.

## சபாநாயகராக மஹிந்த...

பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் அத்துடன் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஒன்பதாவது பாராளுமன்றம் நேற்றுக் காலை 9. 30 மணிக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தலைமையில் கூடியது.

அதனையடுத்து ஜனாதிபதியின் செய்தியை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க சபையில் அறிவித்ததுடன் அதனைத் தொடர்ந்து 9ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகருக்கான பெயர்களை முன்மொழியுமாறு சபையில் கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன சபாநாயகர் பதவிக்கு பொதுஜன பெரமுன கட்சியின் மாத்தறை மாவட்ட எம்.பி. மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை முன்மொழிந்தார். மஹிந்த யாப்பா அபேவர்தனவின் பெயரை வழி மொழியுமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க கோரியபோது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளரான ரஞ்சித் மத்தும பண்டார அதனை வழிமொழிந்தார்.

சபாநாயகர் பதவிக்கு வேறு பெயர்கள் பிரேரிக்கப்படாததால் மஹிந்த யாப்பா அபேவர்தன ஏகமனதாக சபாநாயகராக தெரிவு செய்யப்படுவதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் சபையில் அறிவித்தார்.

அதனையடுத்து அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் எழுந்து சென்று அவரை அழைத்து வந்து சபையின் பலத்த வரவேற்புக்கு மத்தியில் சபாநாயகர் ஆசனத்தில் அமர வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையடுத்து அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் சபாநாயகருக்கு கட்சிகளின் தலைவர்கள் தமது வாழ்த்துக்களை சிறு உரைகள் மூலம் தெரிவித்துக் கொண்டனர்.

வாழ்த்துக்களுக்கு பின்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பிரதி சபாநாயகராக ஒருவரின் பெயரை முன்மொழியுமாறு கோரியதையடுத்து அமைச்சர் மஹிந்த அமரவீர ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கேகாலை மாவட்ட எம்.பியான ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயரை முன்மொழிந்தார்.

அதனை இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வழிமொழிந்தார். வேறு பெயர்கள் முன்மொழியப்படாததால் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பிரதி சபாநாயகராக சபாநாயகரால் அறிவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவிக்கு ஒருவரின் பெயரை முன்மொழியுமாறுசபாநாயகர்கோரியதையடுத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அங்கஜன் இராமநாதனின் பெயரை அப்பதவிக்காக முன்மொழிந்ததுடன் இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க அதனை வழிமொழிந்தார்.

வேறு பெயர்கள் முன்மொழியப்படாததால் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

## புதிய சபாநாயகருக்கு...

இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், மேலும் குறிப்பிட்டதாவது,

த.தே.கூ சார்பில் உங்களுக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம்.உங்கள் தெரிவிற்கு எமது பாராட்டுக்கள். இரு தரப்பிற்கும் செவிமடுத்து பாராளுமன்ற சம்பிரதாயங்களை பேணி செயற்பட எமது தரப்பு உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்றார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி,

உங்கள் பாராளுமன்ற வரலாறு வர்ணமயமானது.பல அமைச்சு பதவிகள் வகித்துள்ளீர்கள்.மனசாட்சிக்கு பயந்து செயற்படக் கூடியவர் நீங்கள்.உங்கள் கட்சி மனசாட்சிக்கு முரணாக செயற்பட்ட போது அதற்கு எதிராக வாக்களித்துள்ளீர்கள்.பல்இன, மத, மொழி பேசும் நாட்டில் அதன் யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

புளொட் கட்சி தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி,,

எதிரணி சிறிதாக இருந்தாலும் இரு தரப்பையும் சமமாக மதித்து நடுநிலையாக செயற்பட வேண்டும். தேசியப் பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் வாயிலாக நியாயமான தீர்வு காண வேண்டும். தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி பேசும்,...

பக்கச் சார்பின்றி சபையின் கௌரவத்தை மதிக்கும் வகையில் புதிய சபாநாயகர் செயற்பட வேண்டும். மக்கள் ஆணை மதிக்கப்பட வேண்டும்.அதற்கு உரிய இடம் வழங்க வேண்டும் என்றார்.

## சகல இனத்திவரும் சுதந்திரமாக...

சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான நீங்கள் சபாநாயகராக தெரிவானதை வரவேற்கிறோம்.சிரேஷ்ட எம்.பியான பிரதமர் மஹிந்த ராஷபக்ஷ,முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் தெரிவான இந்த பாராளுமன்றத்தில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவாகவில்லை.

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு அவசியமானது.சகல கட்சிகளின் வாயிலாகவும் மக்கள் இந்த எதிர்பார்ப்பை வெளியிட்டுள்ளனர். பயங்கரவாதத்தை ஒழித்தது போன்று இனவாதத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.பலமான அரசாங்கம் உருவாகியுள்ளது.பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றி உகந்த அரசியலமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.சகல இனத்தினரும் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியலமைப்பொன்றை எந்த வெளிநாட்டு தலையீடுமின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

## மனசாட்சிக்கு அடிபணிந்து...

இதன்போது புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேர்வர்தனவுக்கு வாழ்த்து தெரிவித்து தொடர்ந்தும் உரையாற்றிய அவர், “மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்ற நீங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்றுள்ளீர்கள். இதேபோன்று பாராளுமன்ற செயற்பாடுகளிலும் உங்களுக்கு அதிக அனுபவமும் உண்டு.

உங்களது தலைமையில் பாராளுமன்ற செயற்பாடுகள் பக்கச்சாற்பற்ற முறையில் முன்னெடுக்கப்படும்” என மேலும் தெரிவித்தார்.

## நல்லாட்சி அரசாங்கம்...

(பிள்ளையான்) நேற்று தெரிவித்துள்ளார்.

09ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்று நடைபெற்றது. புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிற்கு பாராளுமன்றத்தில் வாழ்த்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் என்னை அவர்களுக்குச் சேவை செய்வதற்கென பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்துள்ளனர்.

இந்த பாராளுமன்ற அமர்வில் வந்து நான் கலந்து கொள்வதற்கும் பல தடங்கல்களும் தாமதங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் அனுமதி கோர வேண்டும். இப்படி ஒரு சூழலில் என்னால் மக்களுக்கு சேவையாற்ற முடியாது.

எங்களுடைய நாட்டில் சமூக முரண்பாடுகள் நடந்து முடிந்திருக்கின்றன. நாம் இந்த சமூக முரண்பாடு, ஆயுத போராட்டங்கள் காரணமாக 16 வயதிலே விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து போராடியவன்.

ஆனால் அந்த அமைப்பின் நோக்கங்கள், கொள்கைகள் பிழைத்ததன் காரணமாக அதிலிருந்து விலகி ஜனநாயக ரீதியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆரம்பித்து இன்று பல விடயங்களை செய்திருக்கின்றோம்.

இந்த நிலையில் இப்போது வட பகுதி மக்களும் தென்பகுதி மக்களும் இணைந்து பலமான ஒரு அரசாங்கத்தை அமைத்திருக்கின்றனர். இந்த அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் நான் ஒத்துழைப்பு வழங்குவேன். மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பத்தை இந்த உயரிய சபை தமக்குப் பெற்றுத் தர வேண்டுமென்றும் சிவனேசதுரை சந்திரகாந்தன் நேற்று தெரிவித்தார்.

அதேவேளை, எந்தச் சிக்கலுமின்றி ஒவ்வொரு முறையும் தாம் பாராளுமன்றத்திற்கு வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மக்கள் எனக்கு பெருமளவு வாக்களித்து இம்முறை பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளனர். இப்போதும் பெரும் தடைகளுக்கு மத்தியிலேயே பாராளுமன்றம் வர நேர்ந்தது.

எமது மக்களுக்கு சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பத்தை இந்த உயரிய சபை எனக்குப் பெற்றுத் தரவேண்டும். சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு மாவட்ட உயர்நீதிமன்றத்தில் பாராளுமன்றம் வருவதற்கு ஒவ்வொரு தடவையும் அனுமதி கோர வேண்டியுள்ளது. அது தொடர்ந்தும் சாத்தியமானதல்ல.

நான் ஒவ்வொரு முறையும் பாராளுமன்றம் வருவதற்கு சட்டத்தரணியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவிக்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 9 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு

# ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் கொள்கை பிரகடன உரை



ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் இலங்கை தேர்தல் வரலாற்றில் புரட்சியொன்றை ஏற்படுத்திய ஒரு முக்கிய தேர்தலாகும். ஸ்திரமான ஆட்சியொன்றை ஏற்படுத்துவதற்காக 2/3 அதிகாரத்தை பெற்றுத் தருமாறு நாம் மக்களிடம் கேட்டிருந்தோம்.

வரலாற்றில் முதற் தடவையாக விகிதாசார முறைமையின் கீழ் இடம்பெற்ற தேர்தல் ஒன்றில் 2/3 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் ஆணையை ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணிக்கும் அதன் நட்பு அணிகளுக்கும் பெற்றுத் தந்த நாட்டுப் பற்றுடைய மக்களுக்கு நான் முதலில் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

சர்வஜன வாக்குப் பலம் நாம் அனைவரும் மதித்துப் பாதுகாக்க வேண்டிய ஜனநாயக உரிமையாகும். எனவே இந்த தேர்தலில் தமது பெறுமதியான வாக்கினை பயன்படுத்திய அனைத்து இலங்கை வாக்காளர்களுக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கிறேன்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் 69 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மிகப்பெரும் மக்கள் ஆணையை வழங்கியது என்மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகவாகும். அந்த நம்பிக்கையை காப்பாற்றுவேன் என நான் வழங்கிய உறுதிமொழியை இதுவரையிலான எனது செயற்பாடுகளின் மூலம் நிரூபித்திருக்கிறேன்.

ஜனாதிபதி தேர்தல் முதல் பாராளுமன்ற தேர்தல் வரையான காலம் எமக்கு மிகவும் சவால்மிக்க ஒரு காலப்பகுதியாக இருந்தது. வீழ்ச்சியடைந்திருந்த ஒரு பொருளாதாரத்தையே நாம் பொறுப்பேற்றோம். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் நாம் சிறுபான்மையான ஒரு அரசாங்கத்துடனேயே செயற்பட வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக எமக்கு இக்காலப்பகுதியில் முழு உலகையும் ஆட்கொண்டிருந்த கொவிட் 19 நோய்த் தொற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. கொவிட் 19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் உலகின் முக்கிய நாடுகள் கூட முடங்கியிருந்த நிலையில் அந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு எமக்கு இயலுமானது. நோய்த் தொற்று நிலைமை பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெளிநாடுகளினதும் பாராட்டைப் பெற்றது.

இந்த ஒன்பது மாதக் காலப் பகுதியில் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நாம் நாட்டை நிர்வகித்த முறைபற்றி நாட்டு மக்கள் தெளிவுடன் உள்ளார்கள் என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு கிடைத்துள்ள மிகப் பெரும் மக்கள் ஆணை எடுத்துக்காட்டுகிறது. அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்டு வரும் மாற்றத்திற்கு மக்கள் மதிப்பளித்து வருகின்றனர்.

மக்கள் பிரதிநிதிகளாக பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கிறோம். மக்களின் இறைமையை பாதுகாப்பதற்கு அப்போது தான் முடியுமாக இருக்கும்.

எமது நாட்டு அரசியலமைப்பின் பிரகாரம் எனது பதவிக்காலப் பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும், பௌத்த சாசனத்தை பாதுகாத்து வளப்படுத்துவதாகவும் நான் உறுதியளித்திருக்கின்றேன். அதற்கு ஏற்ப அரச நிர்வாகத்திற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நான் முன்னணி பௌத்த பிக்குகளைக் கொண்ட ஆலோசனை சபை ஒன்றை அமைத்துள்ளேன். அதேபோன்று தொல்பொருள் பெறுமதிவாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கும் எமது பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கும் நான் விசேட செயலணி ஒன்றை அமைத்துள்ளேன்.

பௌத்த சமயத்திற்கான முன்னுரிமையை உறுதிசெய்யும் அதேநேரம், இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாக பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதுவும் மக்களுக்கு தற்போது தெளிவாகியுள்ளது. எமது பாரம்பரிய மரபுரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்கும் கிராமிய கலைகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் காரணமாக நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போது மக்கள் மத்தியில் நாட்டின் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கை பெருமளவு வீழ்ச்சியடைந்திருந்தது. எமது அரசாங்கத்தின் முக்கிய கொள்கை நாட்டின் பாதுகாப்பாகும் என்பதை உறுதி செய்து பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் துறையை மறுசீரமைத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தை போக்கி நாட்டின் பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். எந்தவொரு பிரஜைக்கும் தனதும் தனது குடும்பத்தினதும் பாதுகாப்புப் பற்றி எவ்வித அச்சமும் இன்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்றை நாம் மீண்டும் ஏற்படுத்தியிருக்கிறோம்.

நான் உறுதியளித்தவாறு பொதுவானமக்கள்வாழ்க்கைக்கு தடையாக உள்ள பாதாள உலக செயற்பாடுகள், போதைப்பொருள் பிரச்சினை போன்ற சமூக சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு இருப்பது மக்களின் நம்பிக்கையை மேம்படுத்துவதற்கு காரணமாகியுள்ளது.


நாம் உறுதியளித்தவாறு ஒழுக்கமான, பண்பாடான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்பி வருகின்றோம். இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தில் தெளிவானதொரு மாற்றத்தை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அரச நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பதற்காக அதுவரையில் இருந்துவந்த சம்பிரதாயங்களை மாற்றி நிபுணர் குழுவொன்றின் ஊடாக தகைமைகளை கண்டறிந்து நியமனங்களை மேற்கொள்ளும் முறையான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குடும்பத்தினர், நண்பர்கள், தனக்கு வேண்டியவர்களை நியமிக்காது தொழில் வல்லுனர்கள், தொழில் முயற்சியாளர்கள், கல்வியியலாளர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் கொள்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

அதேபோன்று நாம் உற்பத்தி பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளுக்காக அதிக விலையை பெற்றுக் கொடுத்துள்ளோம். ஏற்றுமதி பயிர்களை மீள் ஏற்றுமதி நடவடிக்கைக்காக இறக்குமதி செய்வதை நிறுத்தியும், இந்த நாட்டில் பயிரிட முடியுமானவற்றை இறக்குமதி செய்வதை முழுமையாக நிறுத்தியும் சுதேச விவசாயிகளை பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். விவசாயிகளுக்கு தேவையான உரத்தினை இலவசமாக வழங்கினோம். நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டிருந்த விவசாயக் காணிகளில் மீண்டும் பயிரிடுவதற்கு மக்களை ஊக்குவித்தோம். இவை அனைத்தின் ஊடாகவும் நாம் இந்த நாட்டின் விவசாயத்துறைக்கு புத்தெழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

நாம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் சுதேச தொழில் முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டு வரிச் சலுகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம். வியாபாரத் துறையை வலுவூட்டுவதற்காக வட்டி விகிதத்தை குறைத்தோம். உள்நாட்டு வர்த்தகர்கள், தொழிற்துறையாளர்களை பாதுகாப்பதற்காக போட்டித் தன்மை வாய்ந்த இறக்குமதிகளை மட்டுப்படுத்தினோம்.

இந்த தேர்தலில் மக்கள் உற்சாகமாக எமக்கு ஆதரவு வழங்கியிருப்பது இந்த வகையில் எங்களைப் பற்றி அவர்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நம்பிக்கையே காரணம் என்பது தெளிவனதாகும். நாம் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக்கு தொடர்ந்தும் சேவை செய்வோம்.

**நான் மக்களிடம் சென்று நேரடியாக அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்தேன். மக்கள் முன் வைத்த கோரிக்கைகளில் மிகப் பெரும்பாலானவை பொதுத் தேவைகளேயன்றி தனிப்பட்ட தேவைகள் அல்ல. சுதந்திரம் பெற்று 72 வருடங்களின் பின்னரும் மக்களின் பெரும்பாலான சாதராணமான தேவைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை. பல ஆண்டுகளாக தாம் வாழ்ந்து வரும் காணிகளுக்கு உரிய உறுதிகள் கிடைக்கப்பெறாத மக்கள் உள்ளனர். நாம் அவர்களுக்கு உரிய முறைமைகளின் படி உறுதிகளை வழங்குவோம். உரிய மாற்றீடுகள் இன்றி பல பரம்பரைகளாக வாழ்ந்து வந்த, தாம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலங்களில் இருந்து எவரையும் வெளியேற்ற மாட்டோம்.**



மக்கள் வழங்கிய ஆணையை மிகச் சரியாக புரிந்துகொள்வது இங்கு முக்கியமானதாகும். என் மீதும் பிரதமர் உள்ளிட்ட புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாம் மதிக்கிறோம். மக்கள் இவ்வளவு பெரிய மக்கள் ஆணையை அரசாங்கத்திற்கு வழங்கி இருப்பது எதனை எதிர்பார்த்து என்பது பற்றி நாம் அறிவோம். எக்காரணத்தினாலும் அந்த எதிர்பார்ப்புகள் வீண்போவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

மக்கள் வாக்குகளினால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதி ஒருவரின் அடிப்படை பொறுப்பு மக்கள் சேவையாகுமென்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்த அனைத்து பதவிகளும் பொறுப்புக்களே அன்றி வரப்பிரசாதங்கள் அல்ல என்பதை நினைவில் வைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

நான் இந்த தேர்தலில் எமது அணியை பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து அபேட்சகர்களுக்கும் ஆதரவு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் சுற்றுப் பயணம் செய்தேன். அரசியல் கூட்டங்களுக்குப் பதிலாக இந்த சுற்றுப் பயணங்களின் போது நான் மக்களிடம் சென்று நேரடியாக அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்தேன். மக்கள் முன் வைத்த கோரிக்கைகளில் மிகப் பெரும்பாலானவை பொதுத் தேவைகளேயன்றி தனிப்பட்ட தேவைகள் அல்ல. சுதந்திரம் பெற்று 72 வருடங்களின் பின்னரும் மக்களின் பெரும்பாலான சாதராணமான தேவைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை.

பல ஆண்டுகளாக தாம் வாழ்ந்து வரும் காணிகளுக்கு உரிய உறுதிகள் கிடைக்கப் பெறாத மக்கள் உள்ளனர். நாம் அவர்களுக்கு உரிய முறைமைகளின் படி உறுதிகளை வழங்குவோம். உரிய மாற்றீடுகள் இன்றி பல பரம்பரைகளாக வாழ்ந்து வந்த, தாம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலங்களில் இருந்து எவரையும் வெளியேற்ற மாட்டோம்.

யானைகள், மனிதர்கள் மோதல் இன்று பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு தீர்வொன்றை கண்டறிவதற்கு தற்போது நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டிருப்பது நிலையான தீர்வொன்று தேவை எனும் காரணத்தினாலாகும்.

நாடளாவிய ரீதியில் நம்ப முடியாதளவு அதிக சதவீதமான மக்கள் குடிநீர் இன்றி கஷ்டப்படுகின்றனர். நாம் இந்த மனிதாபிமான பிரச்சினையை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். ஒரு தேசிய கொள்கையாக அடுத்து வரும் சில ஆண்டுகளில் அனைத்து பிரதேசங்களுக்கும் குடிநீரை பெற்றுக்கொள்ள நாம் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்போம்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வி பெறுவதற்கான பொருத்தமான பாடசாலைகளை பெற்றுத் தருமாறு கோருகின்றார்கள். போதுமானளவு தேசிய பாடசாலைகள் இல்லாத குறை எல்லா இடங்களிலும் உள்ளது. பெரும்பாலான பாடசாலைகளில் பெருமளவு குறைபாடுகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, போதுமானளவு விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வாசிகசாலைகள், விளையாட்டு வசதிகள் இல்லாமை பற்றி அடிக்கடி கூறக் கேட்கிறோம். பொருளாதாரத்திற்கு வினைத்திறனான பங்களிப்பை வழங்குவதற்காக விஞ்ஞான, தொழிநுட்ப பாடங்களை கற்குமாறு நாம் பிள்ளைகளிடம் கூறினாலும் அதற்கான அடிப்படை வசதிகள் பெரும்பலான பாடசாலைகளில் இல்லை.

இந்த நாட்டின் அனைத்து பிள்ளைகளுக்கும் தாம் விரும்பும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு உதவுவதற்கும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் செலவுகள் எதிர்காலத்திற்காக செய்யப்படும் முதலீடாகும். புதிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ள அமைச்சுகளின் ஊடாக நாம் இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிப்போம்.

கிராமிய வைத்தியசாலைகளில் வளங்களும் வசதிகளும் மிகக் குறைவாக உள்ளன. வைத்தியர்கள், தாதிகள் மற்றும் ஏனைய வைத்தியசாலை ஊழியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. சில பிரதேசங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இலவச சுகாதார சேவைகளை மக்களுக்கு வழங்கும்போது ஏற்படும் இந்த நிலைமைகளை நாம் இல்லாமல் செய்வோம்.

ஆயுர்வேத மருத்துவத்தையும் சுதேச வைத்தியத் துறையையும் முன்னேற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதிக அந்நியச் செலாவணியை செலவு செய்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு பதிலாக பல மருந்துகளை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நடவடிக்கையை நாம் ஆரம்பித்துள்ளோம். மருந்து இறக்குமதியின்போது இடம்பெறுகின்ற பெரும் ஊழல் செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் காரணத்தினால் தான் மருந்து உற்பத்திக்கு தனியான இராஜாங்க அமைச்சொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டின் மக்களில் அதிகளவானவர்கள் இன்றும் சுயதொழில்களை செய்வதன் மூலமே வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக உள்ளனர். அவர்கள் கேட்பதெல்லாம் உரிய காலத்திற்கு நீரையும் உரத்தையும் பெற்றுத் தருமாறு மட்டுமேயாகும். இந்த கோரிக்கைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அந்த வகையில் நாடளாவிய ரீதியில் குளங்களை புனரமைப்பதுடன், நீர்ப்பாசன அபிவிருத்திக்கு விரிவான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் முன்னெடுப்போம்.

(08ஆம் பக்கம் பார்க்க)

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 01

**குறள் தரும் சிந்தனை**

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்

ஒருவன் அறம் செய்ய தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தை செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.

## புதியதொரு அரசியல் கலாசாரத்தை பிரதிபலித்த பாராளுமன்ற அமர்வு

ஜனநாயக விழுமியங்களை நீண்ட காலமாகப் பின்பற்றி வரும் இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் மிக முக்கியத்துவமிக்க ஸ்தாபனமாக விளங்குகின்றது. அந்த வகையில் ஒன்பதாவது பாராளுமன்றத்திற்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது. அத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் அங்குரார்ப்பண அமர்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் காலையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இவ்வமர்வை உத்தியோகபூர்வமாக தொடக்கி வைக்கும் வகையில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஜனாதிபதியின் பிரகடனத்தை சபையில் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 9வது பாராளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது. இதன் போது சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன சபாநாயகர் பதவிக்கு மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை முன்மொழிந்தார். அதனை ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார வழிமொழிந்தார். அதனூடாக மஹிந்த யாப்பா எம்.பி போட்டியின்றி சபாநாயகரானார்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆதரவுடன் தெரிவான சபாநாயகரை அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் கைகளைப் பற்றி அழைத்துச் சென்று அக்கிராசனத்தில் அமரச் செய்தனர். இது பிரித்தானிய பாராளுமன்ற முறைமையிலிருந்து பின்பற்றப்படும் ஒரு சம்பிரதாயமாகும். அதனைத் தொடர்ந்து சபாநாயகர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதோடு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் சத்தியப் பிரமாணம் செய்தனர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளதும் தலைவர்கள் சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றினர். அதன் பின்னர் பிரதிச் சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாபிட்டியவும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதனும் போட்டியின்றித் தெரிவாகினர்.

இந்த அங்குரார்ப்பண அமர்வு நாட்டிற்கே முன்னுதாரணம் அளிக்கும் வகையில் அமைந்திருந்ததோடு, மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்படவும் வழிவகுத்திருக்கிறது.

அதாவது கடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைத்துள்ள போதிலும், சபாநாயகர் தெரிவின் போது ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒற்றுமையுடன் செயற்பட்டிருக்கின்றது. அத்தோடு பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்கள் பிரதித் தலைவர் பதவிகளுக்கான தெரிவுகளிலும் எதிர்க்கட்சி ஆளும் தரப்புக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளது. இவை 'நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கு நல்லதொரு சமிக்ஞை' என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தல் காலங்களில் கட்சிகள் ரீதியில் பிரிந்து நின்று அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும், நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தவும் நாட்டை அபிவிருத்தி செய்யவும் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படுவது அவசியம். அதன் முக்கியத்துவத்தை சபாநாயகர் தெரிவில் இருதரப்பினரும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேநேரம் இத்தேர்தலில் 81 புதிய முகங்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள போதிலும் இந்நாட்டில் பல தடவை ஆட்சிபீடம் ஏறியுள்ள ஐ.தே.க.வின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அக்கட்சி சார்பாகப் போட்டியிட்ட எவரும் தெரிவாகவில்லை. அத்தோடு பாராளுமன்றத்தில் 42 வருடங்கள் தொடராக அங்கம் வகித்ததோடு பல தடவைகள் பிரதமர் பதவியை வகித்துள்ள ரணில் விக்கிரமசிங்கவும் இத்தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளார். நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாக செயற்பட்டதன் விளைவையே ஐ.தே.க சந்தித்திருக்கிறது என்பது தான் மக்களது அபிப்பிராயம். அத்தோடு அக்கட்சிக்கு ஒரு தேசியப்பட்சியல் ஆசனம் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் அதற்கும் இன்னும் பெயர் குறிக்கப்படாத துரதிர்ஷ்ட நிலைமையும் நீடிக்கிறது.

இவ்வாறான பின்னணியில் 73 வருட அனுபவத்தை கொண்ட ஐ.தே. கவின் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் 9வது பாராளுமன்ற அங்குரார்ப்பண அமர்வு நாட்டு மக்களுக்கு முன்னுதாரணம் வழங்கும் வகையில் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கையின் பிரகடனத்திற்கேற்ப நாட்டை கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான புதிய அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. இவ்வாறான சூழலில் ஒன்பதாவது பாராளுமன்ற அங்குரார்ப்பண நிகழ்வில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி பேதம் பாராது நடந்துகொண்டிருப்பது புதிய அரசியல் கலாசாரத்தின் தொடக்கமாகக் கருதப்பட வேண்டும். இந்நிலைமை தொடர்ந்தும் நீடித்துநிலைக்க வேண்டும் என்பது தான் மக்களது எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கேற்ப செயற்படுவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# கொழும்பு மாவட்டத்தில் தொடர்மாடி வீடுகள் நிர்மாணிக்கும் புதிய திட்டம்



கொழும்பு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாக உள்ள காணிகளில் பல்வேறு தொடர்மாடி வீடுகள் நிர்மாணிக்கும் புதிய திட்டங்கள் பற்றி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரேணுகா பெரேரா வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்தவிடம் எடுத்துக் கூறினார்.

புதிதாக நியமிக்கப்பட்ட வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுரத்த வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்கள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலின் போது அதிகார சபையின் தலைவர் பின்வரும் புதிய திட்டங்களை இராஜாங்க அமைச்சருக்குத் தெளிவுபடுத்தினார்.

மருதானை 797 வத்தையில் உள்ள காணியில் தொடர்மாடி வீடுகள், கண்டி குண்டசாலையில் உள்ள அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் வீடுகள் நிர்மாணித்தல், மொரட்டுவை சொய்சாபுரவில் உள்ள காணியில் தொடர்மாடி வீடுகள் நிர்மாணித்தல், மட்டக்குழி காக்கைதீவில் உள்ள காணியில் தொடர்மாடி வீடுகள் நிர்மாணித்தல், கம்பஹா மாவட்டத்தில் அதிகார சபைக்குச் சொந்தமான இரண்டு காணித் துண்டுகளில் வீடமைப்புக் கிராங்கள், கொழும்பில் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைமைக் காரியாலய ஊழியர்கள் செத்சிரிபாயவுக்கு இடமாற்றப்பட்ட பின்னா் தலைமைக் காரியாலயத்தின் காணியில் 30 மாடிகள் கொண்ட சொப்பிங் மோல், ஆடம்பர வீடுகள், வியாபார நிலையங்கள், வாகன தரிப்பிடங்கள் அமைத்தல்.

அத்துடன் தற்பொழுது இந்திய அரசாங்கத்தினால் வடக்கு மாகாணத்தில் 600 வீடுகள் 300 மில்லியன் ருபா செலவிலும் மாத்தறை, ஹம்பாந்தோட்டை, காலி மாவட்டங்களில் 600வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசாங்கம் நிர்மாணப் பணிகள் முடிந்த பின்னரே அதற்குரிய நிதியை வழங்கி வருகின்றது. கடந்த கால ஆட்சியின் போது மொனறாகலை, கொழும்பு, ஹம்பாந்தோட் டை போன்ற மாவட்ட அலுவலகங்க ளில் பல்வேறு நிதிமோசடிகள், ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. அவை குறித்து உள்ளக கணக்காய்வாளர்கள் அதிகாரிகளினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அதற்கமைவாக ஹம்பாந்தோட்டை முன்னாள் மாவட்ட முகாமையாளர் உட்பட 4 அதிகாரிகள் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளனர். ஹம்பாந்தோட்டையில் காணி கொள்வனவு செய்தலில் 600 மில்லியன் ருபா மோசடி இடம்பெற்றதையடுத்தே இவ் விவகாரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வீடுகள் நிர்மாணிக்கவென 338727 வீடுகளுக்கான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை மீள அறவிடுவதில் அதிகாரிகள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதுவரை 30வீதமே அறவிடப்பட்டுள்ளது. இக்கடன்களை மீள அறவிடுவதன் மூலம் மேலும் பல குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்களை மாவட்ட அதிகார சபைகள் மூலம் வழங்க முடியும்.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர் ஆரம்பித்த சகல வீடுகளும் முற்றாக நிர்மாணிக்க முடியாமையினால் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. இவ்வீட்டுப் பயனாளிகள் மிகுதி வீட்டுக் கடன்களை கோரி அடிக்கடி தலைமைக் காரியாலயத்திற்கு வந்து முறையிடுகின்றனர். நாடு முழுவதில் 2500 வீட்டு உரிமைப்பத்திரங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் ஒக்டோபர் முதல் வாரத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தில் பிரதமர் தலைமையில் உறுதிப்பத்திரங்களையும் உரிய வீட்டுரிமையாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ரேணுகா பெரேரா இங்கு உறுதியளித்தார்.

**அஸ்ரப் ஏ சமத்...**

# ரணில், சஜித் ஆகிய இருவருமே ஐ.தே.கவுக்கு ஏற்பட்ட நிலைமைக்கான காரணகர்த்தாக்கள்



'வடக்கிலும், கிழக்கிலும் உள்ள வாக்காளர் வங்கிகளை வலுப்படுத்துவதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிக அக்கறை காட்டத் தீர்மானித்துள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளதையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர அண்மையில் எமக்கு விசேட பேட்டியொன்றை வழங்கினார்.

**கேள்வி: நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் தேர்தல் பெறுபேறுகள் பறறிய உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** இம்முறை தேர்தலில் 14 சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்தை இனி நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். இது ஒரு நீண்ட பயணமாகும். இந்தப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டால்தான் மக்களின் நன்மதிப்பை நாம் பெறலாம். அத்துடன் கிடைத்திருக்கும் ஆணைக்கும் நீதியாக நடந்து கொள்வதாக அமையும்.

**கேள்வி: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணம், நுவரெலியா, களுத்துறை என்ற மூன்று மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட்டது. அவ்வாறு தனித்துப் போட்டியிட்டமை எதிர்பார்த்தவாறு அமைந்ததா?**

**பதில்:** ஆம். பல வருடங்களுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். தேர்தல் மாவட்டத்தில் அமோகமான வெற்றியைப் பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக யாழ்ப்பாணம் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளதையே இது காட்டுகிறது. எனவே எதிர்காலத்தில் நாம் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுடனான பிணைப்பினை வலுப்படுத்திக் கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கிறோம். மற்றைய மாவட்டங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீதான ஈர்ப்பு அதிகமாக இருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பின்வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர**

**கேள்வி: கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றும் நோக்கம் எதுவும் இல்லையா?**

**பதில்:** இல்லை. அவ்வாறான மாற்றத்துக்கான தேவை ஏற்படவில்லை.

**கேள்வி: நீங்கள் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தீர்கள். அன்மைய தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட மோசமான தோல்விக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

**பதில்:** அதன் தலைமைத்துவம்தான். ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய நிலைக்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகிய இருவருமே காரணம் என்றுதான் நான் நினைக்கிறேன்.

**ரஜித ஜாகொடஆரச்சி...**
**தமிழில்: என். ராமலிங்கம்**

# வைத்திய நிபுணர் ஹசந்த தம்பாவித்தவுக்கு பேராசிரியர் மௌனகுருவின் வாழ்த்துகள்

எட்டு வருடங்களாக மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலையில் மிகச் சிறந்த சத்திரசிகிச்சை நிபுணராகப் பணி புரிந்து கொழும்பு பிரதான வைத்தியசாலைக்கு இடம்மாறிச் செல்கின்றார், நண்பர் ஹசந்த தம்பவித்த.

நண்பர் என்பதனை விட அவரை நான் என் மகன் என்பேன். ஆம் எனக்கும் அவருக்குமான உறவு ஓர் தந்தை_ மகன் உறவுதான். என் மகன் சித்தார்த்தனை விட மூன்று வயது இளையர் அவர்,

ஆறு வருடங்கள் அவருடன் தொடர்ச்சியாகப் பழகும் வாய்ப்பும், கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவையில்(Council) ஒன்று சேர்ந்து ஆறு வருடங்கள் பணிபுரியும் வாய்ப்பும் கிடைத்தது.

பேரவை விவாதங்களில் எப்போதும் அவர் உண்மையின் பக்கம் நிற்பார். பாதிக்கப்பட்டோருக்காகக் குரல் தருவார். அவர் முடிவுகள் சரியாக இருக்கும், அணுகுமுறை நிதானமாக இருக்கும்.

சில அநாவசிய விவாதங்களை ஒரு புன்சிரிப்போடு கடப்பார். ஒரு முறை மாணவர் –நிர்வாக முரண்பாடு ஏற்பட்டு கிழக்குப் பல்கலைக்ழகம் பல மாதங்கள் மூடப்படிருந்த வேளை,

மாணவரிடம் பேசி அவர்களை சமாதானப்படுத்தும் வேலையை எம்மிடம் தான் பேரவை ஒப்படைத்திருந்தது.

இருவரும் அதற்கான பல திட்டங்களை வகுத்தோம்.மாணவர்களிடம் பல தடவைகள் பேசினோம்.மாணவர்கள் பக்கமும் நியாயம் இருந்ததை நாம் தெளிவாகத் தெரிந்து கொண்டோம்.

அவர்கள் நியாயத்தை புரிந்து கொண்டு அவர்களின் பிடிவாதத்தைத் தவிர்க்க நாம் சில பொறிமுறை வழிகளைப் பேரவைக்குச் சமர்ப்பித்தோம்.

இறுக்கம் தளர்ந்தது. பல்கலைக்கழகம் சுமுகமாக இயங்கத் தொடங்கியது. மாணவர் மகிழ்ந்தனர்.

அப்போது அவர் மாணவருடன் பேசிய வகையினை, பிரச்சினையைக் கையாண்ட விதத்தினை அவதானித்தேன். மிக முதிர்ச்சியான அணுகல்கள்.

அவர் நன்றாகத் தமிழ் பேசுவார். தமிழ் மக்களின் பண்பாடு, கலை, சமூகம் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார். சிங்கள தமிழ் நாடக, இசை, சினிமா பற்றி நாம் இருவரும் ஆழமான உரையாடல்கள் நிகழ்த்தியுள்ளோம். அவற்றில் அவருக்குப் பாண்டித்தியம் இருந்தது. இவ்வகையில் அவர் வழமையான ஏனைய சாதாரண டொக்டர்மாரிடமிருந்து வேறுபட்டிருந்தார்.

அழகான இரண்டு குழந்தைகளும் அருமையான மனைவியும் அவருக்கு வாய்த்த கொடைகள்.

பௌத்த மதம், இந்து மத பற்றி நாம் நிறைய உரையாடியுள்ளோம். அவரை மட்டக்களப்பு வைத்திய சங்கம் தமது ஒரு வருடத் தலைவராகத் தெரிந்து கௌரவித்தது.

தலைமை ஏற்பு விழாவில் அவர் என்னையும் உபவேந்தர் பேராசிரியர் ராகல் அவர்களையும் சிறப்பு விருந்தினராயும் பிரதம விருந்தினராயும் அழைத்துக் கௌரவித்ததுடன் எனது நாடகமான 'புதியதொரு வீடு' நாடகத்தின் சில பாடல் காட்சிகளையும் அங்கு காண்பிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அதில் பாடசாலை மாணவர்களே பங்கு கொண்டனர்.




அவர்களை அவர் அங்கு உபசரித்த விதம் அவர் கலைஞ மீது வைத்த மதிப்பைக் காட்டியது. அவர் பிரியாவிடை பெற என் வீடு வந்தார்.

"அழகான உங்கள் மட்டக்களப்பும், அருமையான உங்கள் மட்டக்களப்பு மக்களும், சுவையான உங்கள் மட்டக்களப்பு உணவும் என் நினைவுகளில் என்றும் இருக்கும்" எனச் சொல்லிச் சென்றார். மிகவும் வயது போன தன் தாய், தந்தையருடன் அவர்களது இறுதிக் காலத்தில் ஒன்றாக இருக்க செல்வதாக அவர் கூறிய போது அவரது ஸ்தானம் என் மனதில் மேலும் இறுக்கமானது.

"சென்று வாருங்கள், மகிழ்ச்சியாக இருங்கள்" என நாம் விடை தந்தோம்.

"எப்போதும் என்னுடன் தொடர்பாக இருங்கள்" என அவர் கூறி பிரியாவிடை பெற்றார். வாழ்த்துகள் ஹசந்த தம்பவித்த! சென்று வருக, செல்லும் இடமெல்லாம் சிறப்பாகப் பணி புரிக!



# எம்.பிக்களுக்கான செலவினங்கள் அனைத்தும் மக்களின் வரிப்பணம்

**இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடி அறுபத்திரண்டு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்காகும். (1,62,63,874). அதில் ஒருகோடி பதின்மூன்று இலட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்று பதினொரு (1,13,84,711) பேர் வாக்களித்துள்ளார்கள்.**

மேலே குறிப்பிட்ட வாக்குகள் மூலம் 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் அமைச்சரவை அமைச்சர்களாக 25 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.இராஜாங்க அமைச்சர்கள் 39பேரும் உள்ளார்கள். பொதுமக்களின் வாக்குகளால் பாராளுமன்றம் செல்லும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் பல உள்ளன.

அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் 54,285 ரூபாவாகும். பிரதி அமைச்சருக்கு மாத சம்பளம் 63,500 ரூபாவாகும். இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களுக்கு சம்பளம் 65,000ரூபாவாகும். சபாநாயகருக்கு 68,500ரூபா, பிரதமருக்கு 71,500என குறிப்பிடப்பட்டுள்ளது.

அவை தவிர காரியாலய கொடுப்பனவு மற்றும்போக்குவரத்து கொடுப்பனவாக ஒரு இலட்சம் ரூபா மாதம் வழங்கப்படுகிறது. சொந்த தொலைபேசிக்கு மாதமொன்றுக்கு 50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு, காரியாலய தொலைபேசிக்கு(நிலையான மற்றும் கைத்தொலைபேசி) 50,000ரூபா ஒதுக்கப்படுகின்றது. இலவச தபால் கொடுப்பனவாக வருடமொன்றுக்கு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

அமைச்சர் தவிர அவருடைய தொடர்பாடல் செயலாளருக்கும் 18 லீற்றர் பெட்ரோலுக்கான பணமாக 17 ஆயிரத்து 440 ரூபா வழங்கப்படும். அமைச்சின் செயலணியினருக்கு 5 வாகனங்கள் வழங்கப்படும். பிரதியமைச்சர்களுக்கும் அவரது செயலணியினருக்கும் 3 வாகனங்கள் வழங்கப்படுகின்றன. அமைச்சு செயலணியில் உயர் பதவி வகிப்பவர்களுக்கு ரூபா 30 ஆயிரம் வழங்கப்படும். அவர்களுக்கு தொலைபேசிக்கான கொடுப்பனவும், எரிபொருளுக்கான கொடுப்பனவும் வழங்கப்படும்.

அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதிசொகுசு வாகனங்களை வாங்குவதற்காக தீர்வையற்ற அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்படுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் திடீர் மரணமடைந்தால் அல்வது பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக திடீரென மரணமடைந்தால் அவருக்கான நஷ்டஈடாக 50 இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. அதைத் தவிர 20 இலட்ச ரூபா காப்புறுதியும் வழங்கப்படுகின்றது. மற்றும் சொகுசு வீடு ஒன்றும்அவர்களுக்குக் கிடைக்கின்றது.

பாராளுமன்றத்தில் பகல் நேர உணவுக்காக 150 ரூபாவே அறவிடப்படுகின்றது. அவர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக தலைநகரில் உள்ள பிரதான பாடசாலைகளில் இடம் வழங்கப்படுகின்றது. வி.ஐ.பி வெளிநாட்டுப் பயணங்கள், இலவச விமான அனுமதிச் சீட்டுகள் மற்றும் உயர்தர ஹோட்டலில் தங்குவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இறுதியாக வீட்டிற்கு செல்லும் வேளையில் ஓய்வூதியமும் வழங்கப்படுகின்றது.

பாராளுமன்றத்துக்கு வரும் இவர்கள் அனைவரும் சுகபோக வாழ்க்கையை பொதுமக்களின் வரிப்பணத்தால் பெறுவதை மறந்து விடக் கூடாது.இவர்கள் இவ்வாறான வரப்பிரசாதங்களை 1977ஆம் ஆண்டுக்குப் பின்னரே பெற்றார்கள்.

1977 ஆம் ஆண்டு 5/6 பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற வருகையை ஊக்குவிக்க கொடுப்பனவு ஒன்றை வழங்கத் தீர்மானித்தது. 1977ஆம் ஆண்டு 500 ரூபாவாக இருந்த அத்தொகை தற்போது 2,500 ரூபாவாக அதிகரித்துள்ளது. 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினருக்கு மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக கொடுப்பனவே வழங்கப்பட்டது.

"நான் பாராளுமன்ற பணிக்கு 1965 ஆம்ஆண்டே சென்றேன்.1990 வரையும் நான் அங்கு பணியாற்றினேன். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 1977 க்கு முன்னர் சம்பளம் வழங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக கொடுப்பனவே வழங்கப்பட்டது. தபால் கட்டணம், தொலைபேசி கட்டணம், செயலணியினருக்கான செலவு, விருந்துபசார செலவு என்பவற்றிற்கும் கொடுப்பனவே வழங்கப்பட்டது. அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டது. அன்று அநேகமானோர் புகையிரதத்திலேயே பாராளுமன்றத்திற்கு வருகை தந்தனர். அமைச்சராக இருந்த விஜயானந்த தஹநாயக்க உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெறவில்லை. அதற்குப் பதிலாக ரயிலிலேயே அவர் பாராளுமன்றத்துக்கு வருகை தந்தார். அவருக்கு முதலாம் வகுப்புக்கான அனுமதிச் சீட்டு இருந்தும் அவர் மூன்றாவது வகுப்பிலேயே பயணம் செய்தார். அவ்வேளையில் அவர் சாதாரண மக்களுடன் உரையாடியபடியே தனது பயணத்தைத் தொடர்ந்தார்.



## நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு சேவையாற்றுவதே பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையாய கடமையாக இருக்கட்டும்

அன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த டி. பீ. எம். ஹேரத், பியசேன தென்னக்கோன் போன்றோரும் ரயிலிலேயே வந்தார்கள். கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு நடந்தே சென்றார்கள். பாராளுமன்றக் கூட்டத்திற்கு வந்ததற்காக அவர்களுக்கு விசேட கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று பாராளுமன்றத்துக்கு வருகை தராமல் இருக்கவில்லை" என 25 வருட காலமாக பாராளுமன்ற ஹன்சார்ட் அறிக்கை தயாரிப்பாளராக கடமையாற்றிய பிரேமச்சந்திர அல்விஸ் தெரிவித்தார்.

இவ்வேளையில் ஹபராதுவ தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான டி. எஸ். குணசேகர அனுமதிப் பத்திரமின்றி ரயிலில் பிரயாணம் செய்ததற்காக அபராதத் தொகையும் விதிக்கப்பட்டதாக செய்தி ஒன்றும் வந்தது.

அன்று 50 மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்குமிட செலவாக 50 ரூபா வழங்கப்பட்டது. பின்னர் சிராவஸ்தியில் தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதால் அதுவும் நிறுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் 1977ம் ஆண்டுக்குப் பின்னர் 1977 இலக்கம் 1 என்னும் சட்டத்தின் கீழேயே வழங்கப்பட்டது. ஆனால் அந்த ஓய்வூதியம் பாராளுமன்ற உறுப்பினருக்கே தவிர, அவர்களது குடும்பத்தாருக்கு அல்ல. பின்னர் அது 1990 இலக்கம் 47 எனும் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வு பெற்றுவ் செல்லும் வேளையில் அவருக்கு அவரது அடிப்படை சம்பளத்திலிருந்து மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியமாக வழங்கப்படும்.

ஐந்து வருடத்துக்கு அதிகமும் 15 வருடத்துக்கு குறைவான காலமும் பாராளுமன்றத்தில் இருந்த உறுப்பினர் ஒருவருக்கு அவரது ஓய்வூதியமாக அவரது ஆரம்ப சம்பளத்திலிருந்து மூன்றில் இரண்டு பங்கு வழங்கப்படும். அதைத் தவிர வாழ்க்கைச் செலவாக 3500 ரூபாவும் , 10000 ரூபா, 15000 ரூபா என மூன்று மேலதிக கொடுப்பனவுகள் ஓய்வூதியத்தில் சேர்க்கப்படுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் தேவையில்லை என என். எம்.பெரேரா பாராளுமன்றத்தில் எதிர்ப்புத் தெரிவித்தார். அன்று அவர் 'எம். பி பதவி என்பது மதிப்புக்குரிய சேவை' என்று குறிப்பிட்டார். ஆனால் அமைச்சுப் பதவியில் இருந்து விலகி கிராமத்துக்கு சென்றவர்களில் மிகவும் சிரமமான வாழ்க்கையை நடத்தியவர்களும் உள்ளனர். சிலர் தங்கள் கையில் உள்ள பணம் மற்றும் சொத்துக்களை விற்று அரசியல் செய்தார்கள்" என ஹன்சாட் அறிக்கையாளர் பிரேமச்சந்திர அல்விஸ் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இறக்குமதி வாகன அனுமதிப்பத்திரம் 1977ம் ஆண்டுக்குப் பின்னரே கிடைத்தது. அதற்கு முன்னர் அநேகமானோர் தங்களது சொந்த வாகனங்களையும், உத்தியோகபூர்வ வாகனங்களையும் பாவித்தார்கள் .ஜே.ஆர்,ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்த காலத்திலேயே பாராளுமன்ற உறுப்பினருக்கு பஜரோ வாகனத்திற்கான இறக்குமதி அனுமதிப் பத்திரம் கிடைத்தது.

1982 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளமாக ரூபா ஒரு இலட்சம் வழங்கப்பட்டது . அதைத் தவிர தொலைபேசிக்கான கொடுப்பனவு, விருந்துபசார கொடுப்பனவு ,எரிபொருள் கொடுப்பனவு போன்றவை அதனோடு சேர்க்கப்பட்டன. ஆனால் 2004ஆம் ஆண்டளவில் பாராளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத் தொகை ரூபா 22,500 ஆக அதிகரித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு எரிபொருள் கொடுப்பனவாக 7 ஆயிரத்து 500 ரூபாவும் ,விருந்துபசார கொடுப்பனவாக 1000ரூபாவும் , கைத்தொலைபேசி கட்டணமாக 2000 ரூபாவும் வழங்கப்பட்டன.

1982ம் ஆண்டிலிருந்து 2004ம் ஆண்டு வரை 22 வருடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் 95 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவுக்கான விலை அதிகரிக்கப்படாதது ஆச்சரியமான விடயமாகும்.

2004ம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினரின் காலை உணவு 6 ரூபா,பகல் உணவு 15ரூபாவாக காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டு காலை உணவு 60 ரூபாவாகவும், பகலுணவு 150 ரூபாவாகவும் பத்து மடங்காக அதிகரிக்கப்பட்டது. இவையெல்லாம் மக்களின் வரிப் பணம் ஆகும். தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணைந்ததாக அவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் நாம் இந்த விலை அதிகரிப்பு பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை.

பொதுமக்களின் சம்பளம் அதிகரிக்கப்படா விட்டாலும் பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் பொதுமக்களின் பிரதிநிதிகள் சம்பளம், கொடுப்பனவு மற்றும் வரப்பிரசாதங்கள் அதிகரித்துள்ளமை குறித்து மக்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும். பாராளுமன்றத்தில் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றாக கையை தூக்கும் ஒரே விடயம் என்னவென்றால் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் விடயம் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் .

**ஹர்ஷா சுகததாச...**
*தமிழில்: வீ.ஆர்.வயலட்*

---

## தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சை:

# மாணவர்கள் மீதான உள இம்சைக்கு இனிமேலாவது முடிவு காணப்படுமா?

**கல்விமுறையில் மாற்றம் மேற்கொள்ளப்படுவது அவசியமென கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு பொருந்தும் வகையில் சர்வதேச தரத்திற்கு அமைவாக பாடநெறிகளை நவீனமயப்படுத்துவது, பாடங்களின் எண்ணிக்கை மற்றும் பாடவிதானங்களின் தன்மை, கற்பித்தல் முறைமை தொடர்பில் கவனம்செலுத்தப்பட்டு மாற்றம் செய்யப்படுமெனத் தெரிகின்றது.

இதற்காக நாடளாவிய ரீதியில் அடுத்த மாதம் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டு மாற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

அதனடிப்படையில் முதலாம் தரத்தில் இருந்து 13 ஆம் தரம் வரை பாடத்திட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.நாட்டின் பொருளாதார முறைமை , தொழில் சந்தை ஆகியவற்றை உள்ளடக்கியதாக புதிய பாடத் திட்டம் தயாரிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கல்வித்துறைசார் வல்லுநர்கள், மாணவர்கள், வர்த்தகப் பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டார்.

தற்போதைய கல்வி முறையூடாக மாணவர்களுக்கு ஏற்படும் மனஅழுத்தத்தைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய பாடத் திட்டத்தை அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நீக்கப்படுமா?

இந்த நிலையில், பொதுப்பரீட்சைகளிலும் கல்வியமைச்சர் கவனம் செலுத்த வேண்டுமென கல்விச் சமூகம் எதிர்பார்க்கின்றது. பரீட்சைமையக் கல்வி என்ற ரீதியில்தான் கற்றல் நடவடிக்கைகள் தொடருவதாக அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

குறிப்பாக புலமைப்பரிசில் பரீட்சை பற்றி கடந்த காலங்களில் பல்வேறு விதமான எதிரலை விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு இப்பரீட்சை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பலவிதமான எதிர்மறைத் தாக்கங்களை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

இப்பரீட்சையானது இரு நோக்கங்களுக்காகவே உருவாக்கப்பட்டது.

1. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்களுக்கு ஒரு உதவித் தொகை வழங்குதல்.
2. பின் தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கு வளமுள்ள நகரப் பாடசாலையில் இடஒதுக்கீடு செய்தல்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மொத்த மாணவர்களில் 10 வீதமானவர்கள் மட்டுமே வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படுகின்றனர். இதன் காரணமாகவே ஒவ்வொரு ஆண்டும் வெட்டுப் புள்ளியும் அதிகரித்துச் செல்கிறது .

இந்த இரு நோக்கங்களும் இப்பரீட்சையினூடாக நிறைவேற்றப்படுகின்றனவா? என்பதையிட்டு சிந்திக்க வேண்டும். சமூகத்தில் இப்பரீட்சை எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்பது மட்டும் உண்மையாகும். இப்பரீட்சை தொடர்பாக கல்வியமைச்சு வெளியிட்ட சுற்று நிருபங்களை கல்வித் திணைக்களம் அமுல்படுத்த வேண்டும். சித்தியடைந்தோரைக் காட்சிப்படுத்துதல், ஆயிரக்கணக்கில் அறவிட்டு அன்பளிப்பு வழங்குதல் என்பவை நிறுத்தப்பட வேண்டும். ஏனைய தவறவிட்ட 90வீதமான பிள்ளைகளையிட்டு உளரீதியாகச் சிந்தித்தால் இது புரியும்.

இலங்கையிலுள்ள ஒரு பிரபலமான உளவள வைத்திய நிபுணர் ஒருவர் கருத்துரைக்கையில், 'இப்பரீட்சை கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டும். இதனால் மாணவர்கள் உள நோயாலும் மனஅழுத்தத்தாலும் மிகவும் பாதிக்கப்படுகின்றர்கள். அதைவி ட பெற்றோர் பாதிக்கப்படுகின்றார்கள்' எனக் கூறியுள்ளார்.

அதை விட முக்கியமானதொன்றை அவர் கூறியுள்ளார். "அதாவது இப்பரீட்சையால் யார் இலாபமடைகின்றார்கள்? பரீட்சைக்கு முன்பு ஆசிரியர்களும், பரீட்சைக்குப் பின்பு வைத்தியர்களும் பலனடைகின்றார்கள் அல்லது இலாபமடைகின்றனர்" என்று வைத்தியர் கூறியுள்ளார்.






பரீட்சை என்ற சொல்லை வைத்து முதல் இரு வருடங்களும் (தரம்4, தரம்5) மாணவர்களின் பெற்றோரிடம் பெரும் பணம் சுருட்டப்படுகின்றது. இப்பரீட்சையில் சித்தியடைபவர்களில் பெரும்பாலானோர் வசதி கூடிய குடும்பப் பிள்ளைகள்.

மறுபுறத்தில் மாதமொன்றுக்கு 500 ரூபா புலமைப் பரிசில் தொகை போதுமானதா என்பதையிட்டு சிந்திக்க வேண்டும். பல தசாப்த காலத்திற்குப் பிறகு இத்தொகை இம்முறை 750ருபாவாக மாறியிருக்கிறது. புலமைப்பரிசிலை அவமானப்படுத்தும் தொகையாகவே இதனைப் பார்க்க வேண்டிள்ளது.

இத்துணை கடினமான பரீட்சையொன்றில் சித்தியடைவது சாதாரணமானதல்ல. அதனையும் எமது பிள்ளைகள் எதிர்கொண்டு சாதனை படைக்கிறார்கள். அதற்காக அந்த சிறுவயதில் அவர்கள் படுகின்ற துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. மாணவர் மத்தியில் இப்பரீட்சை விரக்தியான கலாசாரத்தைத் தோற்றுவித்து வருகின்றது.

பிரத்தியேக வகுப்பில் மாதமொன்றுக்கு ஒரு மாணவனுக்கு 1000 ரூபா வீதம் அறிவிட்ட ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் மாணவர் சித்தியடைந்ததும் ஆசிரியர்களுக்கு பாராட்டும் அன்பளிப்பும் வழங்கப்படுகின்றன.

அதேசமயம் பாடசாலையில் கற்பித்த ஆசிரியரா அல்லது ரியூசனில் கற்பித்த ஆசிரியரா வெற்றிக்கு உரிமை கோருவதென்பதிலும் முரண்பாடு ஏற்படுவதுண்டு. மாணவன் ஒருவன் சித்தியடைந்ததும்

பெற்றோர் மகிழ்ச்சியினால் மனமுவந்து சிறு அன்பளிப்பு வழங்குவதென்பது வேறு விடயம். ஆனால் ஆயிரக்கணக்கில் அறவிட்டு தங்கச்சங்கிலி, தங்கக் காப்பு வழங்குவதென்பது சிந்திக்க வேண்டிய விடயம். இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் சுற்றுநிருபத்தை அமுல்படுத்த வேண்டிய அதிபர்கள் கல்வி அதிகாரிகளுக்கு முன்னிலையிலேயே இதனை வழங்குவதாகும். அவர்களுக்கும் ஒரு பொன்னாடை. இந்தக் கலாசாரம் தொடர்கிறது.

பாடசாலைகளில் நிதி அறிவிடுவது,புலமைப்பரிசில் சித்தி பெற்றவர்களின் படங்கள் காட்சிப்படுத்தல் கூடாது என்று கல்வியமைச்சு சுற்றுநிருபங்கள் கூறுகின்றன.ஆனால் அவை வெறும் சுற்றுநிருபங்களாக மட்டுமே இருக்கின்றனவே தவிர நடைமுறையில் இல்லை என்பது பெரும்பாலானோரின் குற்றச்சாட்டாகும்.

கல்வியமைச்சு இந்த விடயத்திலும் தலையிட்டு ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும்.

இலவசக் கல்வி என்று கூறிவிட்டு இவ்வாறான தவறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது கண்டும் காணாமலிருப்பது எதிர்காலத்தில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தலாம் என பெற்றோர் அஞ்சுகின்றனர்.

பரீட்சையில் தவறி விட்ட மாணவர் சிலர் பாடசாலைக்குச் செல்ல மறுத்த சம்பவத்தை அண்மையில் பத்திரிகையில் அறியமுடிந்தது. பத்திரிகைகளில் ஆசிரிய தலையங்கம் கூட எழுதப்படும் நிலைக்கு இப்பரீட்சை வந்திருக்கிறதென்றால் இன்னமும் தாமதிக்க முடியாது என்ற செய்தியை இப்பரீட்சை உணர்த்தி நிற்கிறது.

இதனை உளவியலாளர்களும் கல்வியலாளர்களும் தொடர்ச்சியாக கூறி வருகின்ற இந்நிலையில், இன்னும் இதனை மாற்றியமைக்க முற்படாதது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

புத்திஜீவிகளையோ சிந்தனைவாதிகளையோ அடையாளப்படுத்தும் பரீட்சை இதுவல்ல என்பதை விளங்குதல் வேண்டும் .

உண்மையில் இத்தனை ஆண்டு கால இலங்கையின் கல்வி வரலாற்றின் அனுபவம் என்னவென்றால் புலமைப்பரிசில் பரீட்சையில் 10 வீதம் சித்தியடைந்த மாணவர்களில் 4 வீதத்தினர் மட்டுமே க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தேர்வு அடைகின்றனர் .உயர்தரப் பரீட்சையில் அது 2 வீதமாக வீழ்ச்சி அடைகிறது .

இப்பரீட்சையை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்ற பொறிமுறை பற்றி கல்வித்துறை சார்ந்தோர் சிந்திக்க வேண்டியது அவசியம்.

இப்பரீட்சையின் முதல் நோக்கத்திற்காக அதாவது வசதி குறைந்த மாணவர்களுக்கு உபகாரப் பணம் வழங்குவது என்பதற்காக ஒரு பரீட்சையும் பெரிய பாடசாலையில் பயில வேண்டுமென்பதற்காக பிறிதொரு பரீட்சையும் நடத்தப்படுவது பொருத்தமாக இருக்கும்.

ஆனால் ஒரு மாணவன் ஒரு பரீட்சைக்கு மாத்திரமே தோற்ற வேண்டும். இந்த இடத்தில் வசதி குறைந்த என்ற பிரிவினை மாணவர் மத்தியில் ஏற்றத் தாழ்வை தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தாதா என்ற வினா எழுகின்றது.

உண்மையில் மேற்படி பரீட்சையில் சித்தியடையத்தவறும் 90வீதமானோர் அடையும் உளத்தாக்கத்தினை விட இது குறைவாகத்தான் தோன்றும். ஒரு மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட முதற்பரீட்சையில் தோற்றும் மாணவர்களுள் 10வீதமானவர்களை தேர்ந்தெடுக்கும் போது அனைவரும் பயன் பெறுவார்கள். புலமைப்பரிசில் பரீட்சையும் அதன் நோக்கத்தை அடையும்.

2வது பரீட்சையில் 5வீதமானோரைத் தெரிவு செய்கின்ற பட்சத்தில் அவர்களுள் முடியுமானோர் பெரிய பாடசாலைகளை நாட சந்தர்ப்பமுண்டு.

இப்பரீட்சைதான் மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றது என எண்ணி, மாணவர்களுக்கு பெற்றோர் அழுத்தம் கொடுக்கின்றனர்.எனவே, இப்பரீட்சை குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. அது மறுசீரமைப்புக்குட்படுத்தப்பட வேண்டும். இப்பரீட்சையை இரத்து செய்ய வேண்டும் என பலர் கூறுகின்றனர். எனவே, இந்த வருடத்துடனாவது இந்த கலாசாரத்தினை மாற்றி புதிய கலாசாரத்திற்கு வழியமைக்க வேண்டும்.

## 9 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு

# ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கை பிரகடன உரை

(05ஆம் பக்கத் தொடர்)



வேலை வாய்ப்பின்மை இன்று இளைஞர் தலைமுறை முகங்கொடுக்கும் ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாகும். இதற்காக நாம் குறுகிய கால, நீண்டகால பல தீர்வுகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம்.

நாம் தற்போது நாட்டில் வாழும் வறிய குடும்பங்களை இலக்காகக்கொண்டு ஒரு இலட்சம் தொழில்களை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம்.

அதனோடு இணைந்ததாக 50,000 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கும் அவர்களிடமிருந்து வினைத்திறனான சேவையை பெற்றுக்கொள்வதற்காக முறையான பயிற்சி ஒன்றை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரச தொழில்களை வழங்கும்போது நாட்டில் மிகுவும் வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று தொழில் வாய்ப்புகளை வழங்கும்போது அனைத்து மாகாணங்களுக்கும் சம வாய்ப்புகள் கிடைக்கும் வகையில் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அரச நியமனம் ஒன்றை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் நாட்டுக்கு வினைத்திறனான சேவையை வழங்க வேண்டும். எனவே எந்தவொரு அமைச்சுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் தேவையற்ற வகையில் ஆட்சேர்ப்புகள் செய்யப்பட மாட்டாது.

தத்தமது துறைகளில் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுமாறு அனைத்து அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களில் அந்தந்த துறைகளில் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று குறித்த துறைகளில் சுயதொழில் மேம்பாட்டுக்கும் தொழில் முயற்சிகளை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எமது பொறுப்பும் கடமையுமாக இருக்க வேண்டியது தொழில்களை உருவாக்குவதேயன்றி தொழில்களை வழங்குவதல்ல.

உள்நாட்டு மற்றும் பூகோள சவால்களை வெற்றிகொள்ளும் பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்த வேண்டுமானால் நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். இம்முறை இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உண்மையான பொருளாதார புத்தெழுச்சியை ஏற்படுத்துவதற்காக மக்கள் மைய பொருளாதாரம் ஒன்றின் தேவையை நாம் கண்டறிந்துள்ளோம். அமைச்சுக்களை ஒதுக்கும்போதும் அவற்றுக்கான விடயதானங்களை தீர்மானிக்கும் போதும் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மீது தாக்கம் செலுத்தும் விவசாயம். பெருந்தோட்டத் துறை, மீன்பிடிக் கைத்தொழில் அதேபோன்று பாரம்பரிய கைத்தொழில்கள், சுய தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவது சம்பந்தமாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதைப் போன்று ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் எமது அடிப்படை இலக்குகளாகும்.

தற்போது எமது ஏற்றுமதி பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, தென்னை, இறப்பர் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் திருப்திகரமான நிலையில் இல்லை.

தேயிலை பயிர்ச் செய்கையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் சிறிய மற்றும் நடுத்தர தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் அரசாங்கம் உதவிகளைச் செய்யும். மூடப்பட்டுள்ள தேயிலைச் தொழிற்சாலைகளின் காரணமாக அவர்கள் அதிக அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவற்றை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன். முறைகேடுகளை ஒழித்து உயர் தரங்களுடன் கூடிய தேயிலை ஏற்றுமதியை ஊக்குவிப்போம். 'Ceylon Tea' வர்த்தக சின்னத்திற்கு உள்ள அங்கீகாரத்தை பலப்படுத்துவோம்.

தென்னையை புதிதாக பயிரிடுவதற்கு ஊக்குவிப்புகளை வழங்குவோம். இறப்பருக்கு உரிய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இந்நாட்டில் தயாரிக்கப்படும் இறப்பர் பாவனை, இறப்பர் சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிப்போம். செம்பனை பயிர்ச் செய்கையை நாம் முற்றாக நிறுத்துவோம்.

மிளகு, கறுவா போன்ற ஏற்றுமதி பயிர் உற்பத்தியை நாம் ஊக்குவிப்போம். விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதன் ஊடாக விவசாயிகளுக்கு ஸ்திரமான விலையை பெற்றுக்கொடுப்பதுடன், பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.



அமைச்சுகளுக்கு பொறுப்புக்களை வழங்கும்போது நகர மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய பல்வேறு துறைகளை இனங்கண்டு அவற்றுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவும் அவர்களுக்கான விடயதானங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனித வள அபிவிருத்தியை நாம் முன்னுரிமைக்குரியதாக இனங்கண்டு இருப்பதால் அமைச்சுக்களை ஒதுக்கும்போது கல்வித் துறையை ஒரு அமைச்சின் கீழ் கொண்டு வந்து, அதில் வேறுபட்ட பொறுப்புகளுக்காக நான்கு இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளோம். முன்பள்ளிப் பாடசாலைகள், கல்வி மறுசீரமைப்பு, திறன் விருத்தி, அறநெறிப் பாடசாலைகள், பிக்குகளுக்கான கல்வி ஆகிய துறைகளுக்கு தனியான இராஜாங்க அமைச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது அவற்றில் உள்ள முக்கியத்துவத்தின் காரணமாகவே ஆகும்.

எமது எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டுமாயின் தொழிநுட்ப கல்விக்கு விசேட கவனம் செலத்த வேண்டும். 06ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரை கல்வி மறுசீரமைப்பில் நாம் இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

உயர் தரத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வியை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களின் கொள்ளளவை அதிகரிப்பதுடன், திறந்த பல்கலைக்கழக முறைமையை முன்னேற்றுவதற்கும் தொலைக்கல்வியை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பாடத்துறைகளை மறுசீரமைத்து இந்த பட்டப்படிப்புகள் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பு வழங்கக்கூடிய துறைகளாக உறுதி செய்யப்படும்.

மின்சாரத்தின் விலை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் ஒரு முக்கிய காரணியாகும். எனவே மீள் பிறப்பாக்க, சக்தி வள உற்பத்தி மார்க்கங்களை மேம்படுத்துவதற்காக தனியானதொரு இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெறுமதி சேர்ப்பதற்காக புதிய தொழிநுட்ப பாவனைக்கும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கத்திறன்வாய்ந்த வகையில் புதிய சந்தை வாய்ப்புகளை கண்டறிவதற்கும் வர்த்தகர்களுக்கு உதவுவதற்கும் குறித்த அமைச்சுக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

எமது நாடு இயற்கை வளம் நிறைந்த ஒரு வளமான நாடு என்ற போதிலும் பெறுமதி சேர்க்கும் கைத்தொழில்கள் இன்னும் சர்வதேச மட்டத்திற்கு முன்னேறவில்லை. இரத்தினக்கற்கள், கனிய மணல் போன்ற இயற்கை வளங்களை ஏற்றுமதி செய்யும் போது பெறுமதி சேர்த்து நாட்டுக்கு அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது பாரம்பரிய கைத்தொழில்களான பத்திக், சுதேச ஆடைகள், பித்தளை, பிரம்புகள், மட்பாண்டங்கள், மரப்பாண்டங்கள், இரத்தின கற்கள், ஆபரணங்கள் கைத்தொழிலை உரிய வகையில் முன்னேற்றுவதற்கும் சுயதொழில்களை ஊக்குவிப்பதற்கும் புதிய தொழில்களை உருவாக்குவதற்கும் வர்த்தக துறையை கட்டியெழுப்பி பெருமளவு வெளிநாட்டு வருமானத்தை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும்.



நாட்டு மக்களில் 1/3 பகுதியினர் விவசாயம், பெருந்தோட்டத்துறை, மீன்பிடிக் கைத்தொழில் ஆகியவற்றை ஜீவனோபாயமாக கொண்டுள்ளனர். நாம் இந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும். இந்த கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்காக சம்பிரதாய முறைமைகளை விஞ்சிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அனுகுமுறைகளின் தேவை உள்ளது. விவசாயத்துறை, பெருந்தோட்டத்துறை மற்றும் மீன்பிடி, கடற்றொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளை நேரடியாக இலக்காகக் கொண்டு அமைச்சுக்கள் ஒதுக்கப்பட்டிருப்பது இதற்குத் தேவையான உரிய கவனத்தை வழங்குவதற்கே ஆகும்.

உயர் தரம்வாய்ந்த விதைகளை உள்நாட்டில் உற்பத்திசெய்து, அவற்றை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைமைகளை அறிமுகப்படுத்தி வீண்விரயத்தை குறைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். பசும்பால் உற்பத்தி மற்றும் முட்டை உற்பத்தியையும் நாம் முன்னேற்றுவோம்.

நச்சுத்தன்மையற்ற உணவை உற்பத்திசெய்யும் நோக்குடன் அடுத்த தசாப்தத்திற்குள் இலங்கையின் விவசாயத் துறையை முழுமையாக சேதன பசளைப் பாவனைக்கு மாற்றும் வகையில் உள்நாட்டில் சேதன பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மீன்பிடித் கைத்தொழிலில் பாரிய முன்னேற்றத்தை கொண்டுவர நாம் எதிர்பார்க்கின்றோம். கடலினால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கு மீன் இறக்குமதியை நாம் நிறுத்த வேண்டும். மீன் பிடி கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு தேவையான புதிய தொழிநுட்பத்தையும் இயந்திரங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். ஆழ்கடலில் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பலநாள் படகுகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக அனைத்து மீன்பிடி துறைமுகங்களையும் நவீனமயப்படுத்துவதுடன், தேவைக்கு ஏற்ப புதிய துறைமுகங்களை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுப்போம்.

சட்டவிரோதமான சர்வதேச பலநாள் படகுகளின் மூலம் இலங்கை கடற்பகுதியில் மேற்கொள்ளப்படும் சுரண்டலை நிறுத்துவோம். நன்னீர் மீன்வளர்ப்பு கைத்தொழிலை முன்னேற்றுவதற்கும் புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்துவது எமது திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அனைத்து அமைச்சுக்களுக்கும் இராஜாங்க அமைச்சுக்களுக்கும் தமது விடயதானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தெளிவாக வேறுபடுத்தி வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர்களினால் குறித்த துறைகளின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதுடன், இராஜாங்க அமைச்சுக்களினால் செயற்பாடுகள், வினைத்திறன், கண்காணிப்பை மேற்கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை தமது அமைச்சுக்களுக்கு நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாலும் நிதிப் பொறுப்பு தம்மிடம் உள்ள காரணத்தினாலும் இராஜாங்க அமைச்சர்களுக்கு தடையின்றி தமது பொறுப்புக்களை நிறைவேற்ற முடியும்.

அரச சேவையின் மூலம் தாம் எதிர்பார்க்கும் சேவை வினைத்திறனாகவும் உரிய வகையிலும் கிடைப்பதில்லை என பொது மக்களிடம் குற்றச்சாட்டு உள்ளது. எனவே உங்களின் கீழ் உள்ள அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனாகவும் உடனடியாகவும் பெற்றுக்கொடுக்குமாறு நான் அமைச்சர்களிடமும் இராஜாங்க அமைச்சர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன். மக்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு எவ்வித பெறுமானத்தையும் கொண்டுவராத சில நிறுவன செயற்பாடுகளினால் ஏற்படுவது கால விரயம் மட்டுமே என நான் கடந்த காலத்தில் பல்வேறு அரச நிறுவனங்களுக்கு சென்ற வேலையில் கண்டுகொண்டேன். மக்களுக்கு சேவைகளை வழங்கும் போது பின்பற்றும் பாரம்பரிய முறைமைகளுக்கு பதிலாக நிறுவன செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொண்டு மக்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக புதிய முறைமைகளை நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இதற்காக முடியுமானளவு புதிய தொழிநுட்ப தீர்வுகளை கண்டறிய வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழிப்பதாக நாம் மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். இது எம் அனைவரினதும் முக்கிய பொறுப்பாகும். அனைத்து அமைச்சுக்கள், நிறுவனங்களில் வீண்விரயத்தையும் ஊழலையும் முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுப்போம். வீண்விரயம், ஊழலுடன் சம்பந்தப்படுபவர்களுக்கு அவர்களது தராதரங்களை பொருட்படுத்தாது சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் பின்னிற்க மாட்டேன்.

அரசாங்கம், அமைச்சு மற்றும் அரச துறையின் ஊடாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்வதன் முன்னேற்ற நிலைமைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படும். ஏதேனும் ஒரு அமைச்சு அந்த இலக்குகளை அடைவதில் பின்னிற்குமாயின், அரசாங்கத்தின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை செய்வதற்கு நான் ஒருபோதும் பின்னிற்க மாட்டேன்.

தற்கால அரசியல் கலாசாரத்தில் பெரும்பாலும் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் மக்களிடம் செல்வதை விட்டுவிடுகின்றனர் என்பது அண்மைக் காலத்தில் நான் நாடளாவிய ரீதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் மக்கள் முன்வைத்த மனக்குறைகளில் இருந்து தெரியவந்தது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி மக்களிடம் சென்று அவர்களது உண்மையான பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு ஜனநாயக நாட்டின் வெற்றிக்கு அதன் அரசியலமைப்பே அடிப்படையாகும். 1978 முதல் 19முறை திருத்தப்பட்டுள்ள எமது அரசியலமைப்பில் உள்ள உறுதியற்ற தன்மை, சிக்கல்கள் காரணமாக தற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் உறுவாகியுள்ளன. அரசியலமைப்பில் மாற்றத்தை செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள காரணத்தினால் எமது முதலாவது பணியாக நாம் மக்களுக்கு உறுதியளித்தவாறு, 19வது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்க நடவடிக்கை எடுப்போம். அதன் பின்னர் அனைவருடனும் இணைந்து நாட்டுக்கு தேவையானதும் பொருத்தமானதுமான புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

இதன் போது இந்நாட்டின் அனைத்து மக்கள் சம்பந்தமாகவும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவுக்கு முதலிடம் வழங்குவோம்.

தெளிவான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத, தீவிரவாதத்தின் அழுத்தங்களுக்கு தொடர்ச்சியாக அடிபணியும், நிலையற்ற பாராளுமன்றம் ஒரு நாட்டுக்கு பொருத்தமானதல்ல. புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் போது தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றங்களை செய்யவேண்டியது அவசியமாகும். விகிதாசார தேர்தல் முறைமையில் உள்ள சாதகமான பண்புகளை பாதுகாக்கும் அதேநேரம் பாராளுமன்றத்தின் ஸ்திரத்தன்மையையும் மக்களின் நேரடி பிரதிநிதித்துவத்தையும் உறுதிசெய்யும் வகையில் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

நான் எனது நாட்டை நேசிக்கின்றேன். நான் எனது நாடு குறித்து பெருமையடைகிறேன். எனக்கு எனது நாடு பற்றிய ஒரு தொலைநோக்குள்ளது. எமது நோக்கம் வினைத்திறன் மிக்க பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்கப்பண்பாடான சமூகத்தைக் கொண்ட சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதாகும். இதுவரை நாம் மேற்கொண்ட அனைத்து செயற்பாடுகளையும் போன்று, இதன் பின்னரும் செயற்படுவதற்காக எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை திட்டமிடுவதும் இந்த நோக்கங்களின் அடிப்படையிலேயாகும்.

நாம் வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வந்தடைந்துள்ளோம். மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு பெரும் மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். ஏந்தவொரு சக்திக்கும் அடிபணியாது இந்த நாட்டின் இறைமையையும் நாட்டு மக்களையும் பாதுகாத்து நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்கான பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்கால தலைமுறைக்காக தற்கால தலைமுறை அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.

இது எம் அனைவரினதும் தாய்நாடு. எனவே இனம், மதம், கட்சி பேதமின்றி நாம் அனைவரும் நாட்டுக்காக ஒன்றுபடவேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளது. மக்களுக்கு நாம் உறுதியளித்த சுபீட்சமான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக என்னுடன் ஒன்றிணையுமாறு நான் உங்கள் அனைவருக்கும் நட்புக் கரம் நீட்டி அழைப்பு விடுக்கின்றேன் என்றும் ஜனாதிபதி தனதுரையில் தெரிவித்தார்.



09ஆவது பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கன்னி அமர்வுக்கு செல்வதற்கு முன்னர், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் (20) கொழும்பு ஜாவத்தை பள்ளிவாசலில் கட்சியின் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் அடக்கஸ்தலத்திற்கு சென்று அன்னாருக்காக விசேட துஆ பிரார்த்தனையில் ஈடுபட்டபோது..

# இஸ்லாமியர்களின் புது வருடமும் இலங்கைவாழ் மக்களின் எதிர்பார்ப்பும்

## பிளவுகளை தடுக்க மரபுகளை பேணுவது அவசியம்

இன்று இஸ்லாமியர்களாகிய நாம் அனைவரும் 1442வது புது வருடத்தில் காலடி வைத்து மிக விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இன்று பலரும் இஸ்லாமிய புது வருடத்தினைக் கொண்டாடுவதற்குப் பதிலாக மாற்று மதத்தவர்களின் புது வருடத்தை கொண்டாடி வருவதை எம்மால் காண முடிகின்றது. இது முற்றிலும் நமது மார்க்கத்திற்கு முரணானது என்பதனை உணர்ந்து செயல்பட ஒவ்வொரு இஸ்லாமியனும் முன்வர வேண்டும். இப்படியான தவறான செயற்பாடுகளினால் நமது இஸ்லாமியச் சகோதரர்கள் பிளவுண்டு மார்க்கத்தில் குழப்பங்களை ஏற்படுத்தி ஒற்றுமையை இழக்க செய்கின்றனர். தன்மையை இழந்து வருகின்றனர் என்று கொழும்பு தெவட்டகஹ பள்ளி தலைவர் ஷாலி தெரிவித்துள்ளார்.

உலகை இன்று ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் பயங்கரவாதம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு. ஜனநாயகம், சோஷலிசம், கம்யூனிசம் என்ற பெயர்களில் நிலவும் அரசியல் அராஜகம். பொருளாதார வளர்ச்சி, உதவிகள், ஆண், பெண் சமத்துவம் என்ற பெயர்களில் சர்வதேச சுரண்டல். ஒட்டுமொத்தமாக உலகில் ஒழுக்கயீனம் தலைவிரித்தாடுகின்றது. கடந்த பல வருடங்கள் பற்பல வினோதங்களையும் விரோதங்களையும் அறிமுகப்படுத்திவிட்டு விடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் முஸ்லிம் சமூகத்தைக் காப்பதற்கு ஒரே வழி இஸ்லாம் கூறும் ஒற்றுமை தான்.

உலகம் 21 ஆம் நூற்றாண்டை நோக்கி நகர்ந்திருக்கும் இத்தருணத்தில், இஸ்லாமிய உலகின் சந்துபொந்துகளிலெல்லாம் சமாதானத்தின் அவசியம் குறித்து ஓங்கி முழங்கப்படுகின்றது. பகிரங்க மேடைகளிலெல்லாம் இதுவே பிரதான தலைப்புக்கள்.

அனைவர் நாவுகளும் ஒற்றுமைத்தாகத்தை வெளிப்படுத்தினும் இன்றும் அது வெற்றியளிக்கவில்லை. ஒற்றுமையை விரும்புகின்றனர், வலியுறுத்தப்படுகின்றனர். ஆனால் ஒற்றுமைப்பட்டனரா? என்றால் அதுதான் இல்லை. வார்த்தைகளோடு நின்று விடுகிறது.

ஒற்றுமை குலைந்திருந்த சமுதாயத்தில்தான் இஸ்லாம் உதயமானது. பகைமை முற்றி இரத்தக்கறை கண்ட மண்ணைத்தான் இஸ்லாம் சமாதானப் பசுமைப் பூங்காவாக மாற்றியது.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் சொற்பத்தொகை முஸ்லிம்களுக்குள்ளேயே எத்தனை பிரிவுகள். அத்தனை பிரிவினரும் ஒற்றுமைத் தாகம் கொண்டவர்கள்.

ஆனால், ஒற்றுமை பிறக்கவில்லை. ஒற்றுமையை விரும்பும் முஸ்லிம்கள் அதற்கென இஸ்லாம் சொன்ன வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமையே இதற்குக் காரணம் எனலாம். இதனை இலங்கை வாழ் ஒவ்வொரு முஸ்லிமினதும் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

# கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர் வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் கோரல்

**ஒலுவில் விசேட நிருபர்**

2021 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக நேற்று தெரிவித்தார்.

புதிய இடமாற்றங்கள் அனைத்தும் 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படும். அதற்கேற்ற வகையில் இடமாற்ற உத்தியோகத்தர்கள் விடுவிப்புச் செய்யப்பட வேண்டுமென திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விபரமடங்கிய சுற்றுநிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு நிலையத்தில் தொடர்ச்சியாக பல வருடங்களாக சேவையாற்றிவருகின்ற அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர், மொழி பெயர்ப்பாளர் சேவை, சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர் சேவை, தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை என்பவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

திணைக்களங்களில் காணப்படும் அனுமதிக்கப்பட்ட ஆளணியினருக்கு மேலதிகமாக ஆளணியினர் கவனத்தில் கொள்ளப்பட்டு இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவர், எனினும் இவர்களுக்கான பதிலீடுகள் வழங்கப்படமாட்டாது எனவும் அச் சுற்று நிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்திய குழு உறுப்பினர்களை இடமாற்றம் செய்வதாயின் தொழிற்சங்க செயலாளரின் சிபாரிசு கவனத்தில் கொள்ளப்படும், இது தொடர்பான விபரங்களையும் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் செப்டெம்பர் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

இடமாற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் செப்டெம்பர் 15ம் திகதிக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்), பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், கன்னியா வீதி வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இடமாற்றத் தீர்மானங்களை அமைச்சு, திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படவுள்ளதோடு, நவம்பர் 05 திகதி இடமாற்ற மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதுடன் டிசம்பர் 01ம் திகதி முன்முறையீடுகள் தொடர்பான இறுதித் தீர்மானங்கள் அறிவிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி முதல் டிசம்பர் 31 காலப்பகுதிக்குள் பரஸ்பர மற்றும் உள்ளக இடமாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படக் கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிற்றூழியருக்கு பதவி உயர்வு

**இறக்காமம் தினகரன் நிருபர்**

மாகாண சேவையிலுள்ள சிற்றூழியர்களை பதவி உயர்த்துவதற்கான அனுமதி பொது நிருவாக அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.வை.சலீம் தெரிவித்தார்.

பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் கடந்த 14.08.2020 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில், நூலகர் தரம் 3 மற்றும் முகாமைத்துவ உதவியாளர் தரம் 3 க்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. மாகாண அரச சேவையில் கடமையாற்றும் எவரும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்க முடியாதென சுட்டிக்காட்டப்பட்டது. கிழக்கு மாகாண சபையில், கடந்த பல வருடங்களாக நூலக உதவியாளர்களாகவும், பல்வேறு நிறுவனங்களில் சிற்றூழியர்களாகவும் சேவையாற்றுவோர், நூலகர்களாகவும் முகாமைத்துவ உதவியாளர்களாகவும், பதவி உயர்வு பெறுவதற்கு சகல தகைமைகளையும் கொண்டுள்ளனர்.

# சிறுவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சமூக சேவை குழு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கிராம மட்டத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், சமூக சேவைகள் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெண்கள் வலுவூட்டல் உத்தியோகத்தர்கள், உளவளத்துறை உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் 30 பேர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு கடந்த 2018 2019 காலப் பகுதியில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நொச்சிமுனை கிராம சேவகர் பிரிவில் செயற்படுத்தப் பட்டது.

இக்குழுவின் பரீட்சார்த்த செயற்பாடு வெற்றியளித்துள்ளன. இதன் அனுபவத்தைக் கொண்டு யுனிசெப் மற்றும் சர்வோதயம் ஆகிய தன்னார்வு நிறுவனங்களின் உதவியுடன் மட்டக்களப்பில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

8 கிராம சேவகர் பிரிவுகளில் தொடர்ச்சியாக ஆறு மாத காலத்திற்கு இப்பணிகளை மேற் கொள்ளத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையில் (18) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சமூக சேவைகள் பணி அணியினரின் நோக்கு நிலை விசேட கலந்துரையாடலில் இத்தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது. இப் பணியினரின் அர்பணிப்புடனான செயற்பாடுகள் எதிர்காலத்தில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் வீ. குகதாசனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், யுனிசெப் மற்றும் சர்வோதய அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மற்றும் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உளவளத்துறை உத்தியோகத்தர்கள், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

NLB
உத்தியோகபூர்வ முடிவுகள் 1047
2020.08.19
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 8 4 6 0 2 5

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | வென்றோர் |
| --- | --- | --- | --- |
| 01 | 8 4 6 0 2 5 | 2,000,000.00 | 1 |
| 02 | 4 6 0 2 5 | 100,000.00 | 2 |
| 03 | 6 0 2 5 | 10,000.00 | 29 |
| 04 | 0 2 5 | 1,000.00 | 342 |
| 05 | 2 5 | 50.00 | 3,291 |
| 06 | 5 | 20.00 | 31,825 |
| 07 | 8 4 6 0 2 | 10,000.00 | 3 |
| 08 | 8 4 6 0 | 1,000.00 | 37 |
| 09 | 8 4 6 | 100.00 | 347 |
| 10 | 8 4 | 50.00 | 3,355 |
| 11 | U | 20.00 | 14,566 |
| 12 | | 200.00 | 274 |

ரூ. 4,248,620.00
ரூ. 11,887,246.50

19.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 722,996
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 30,838,160.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 33

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
2514 19.08.2020
A 24 30 36 49
ரூ. 1,000,000.00 | 100,000.00 08 | 2,000.00 181 | 1,000.00 439 | 100.00 10943 | 40.00 7217 | 20.00 180654 | 20.00 32786
232,228
ரூ. 7,252,780.00
ரூ. 60,532,336.40

சீட்டிழுப்பு இலக்கம் : 4219 உத்தியோகபூர்வ முடிவுகள்
மஹஜன சம்பத
திகதி: 19-08-2020
G 4 7 3 2 2 5

| இலக்கங்கள் | பரிசுத்தொகை | வென்றோர் |
| --- | --- | --- |
| 4 7 3 2 2 5 | 2,000,000/- | 01 |
| 7 3 2 2 5 | 100,000/- | 11 |
| 3 2 2 5 | 10,000/- | 107 |
| 2 2 5 | 1,000/- | 1,077 |
| 2 5 | 100/- | 10,656 |
| 5 | 20/- | 105,825 |
| 4 7 3 2 | 10,000/- | 10 |
| 4 7 3 2 | 1,000/- | 108 |
| 4 7 3 | 100/- | 1,071 |
| 4 7 | 50/- | 10,552 |
| G | 20/- | 42,397 |

ரூ. 10,119,740.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.22,732,354.00
தேசிய லொத்தர் சபை

சீட்டிழுப்பு இலக்கம்: 586
Mega POWER
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 19/08/2020
X 12 25 44 54 59

| பரிசு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
| --- | --- | --- |
| 1 | 1,000,000.00 | 01 |
| 2 | 100,000.00 | 09 |
| 3 | 1,000.00 | 169 |
| 4 | 500.00 | 372 |
| 5 | 100.00 | 8,922 |
| 6 | 40.00 | 5,888 |
| 7 | 20.00 | 146,697 |
| 8 | 20.00 | 26,942 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ.229,522,284.75
ரூ.10,625,919.60 ரூ.24,047,742.40
ரூ. 6,855,500.00

உத்தியோகபூர்வ முடிவுகள்
செவண
திகதி 2020/08/19
சீட்டிழுப்பு இலக்கம் 288
W 09 25 66 67

| பரிசு | பரிசுகள் | வெற்றியாளர் எண்ணிக்கை |
| --- | --- | --- |
| 1st | ரூ. 1,000,000/- | - |
| 2nd | ரூ. 100,000/- | 03 |
| 3rd | ரூ. 1,000/- | 93 |
| 4th | ரூ. 200/- | 170 |
| 5th | ரூ. 100/- | 4,368 |
| 6th | ரூ. 50/- | 2,426 |
| 7th | ரூ. 20/- | 59,508 |
| 8th | ரூ. 20/- | 9,313 |

ரூ. 14,000,000/-
ரூ. 2,361,520/-
www.nlb.lk

# பெறுகை அறிவித்தல்

## பிரதான செயலகம்

## வடமத்திய மாகாணம்

## விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

வடமத்திய மாகாண விவசாயத் திணைக்களத்திற்குத் தேவையான பின்வரும் விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகைமைகளை பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து வடமத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் தலைவர் / பிரதான செயலாளர் ஆகிய என்னால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | உருப்படி | தேவையான அளவு | மீளளிக்கப் படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) | சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனுப் பிணை (ரூபா) | விலைமனுப் பிணை முறிகளின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | கையால் இயக்கப்படும் விதைக்கும் இயந்திரம் (உரம் இடும் பகுதி சகிதம்) (Manual Seeder cum Fertilizer Applicator) | 450 | 3,500.00 | 250,000.00 | 105 நாட்கள் |
| 02 | பல நோக்கு கலைநாசினி இயந்திரம் Multi-Purpose Cultivator (Back-pack type) | 450 | | | |
| 03 | சூட்டுக்கள விரிப்பு (Tarpaulin Sheet - 20'x20') | 450 | 1,000.00 | 50,000.00 | 105 நாட்கள் |

02. 2020-08-21ஆம் திகதி முதல் 2020-09-10ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரையான காலத்தினுள் வடமத்திய மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு வருகை தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களை 025-2222189 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

03. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்தி மாகாண விவசாயத் திணைக்களத்தின் நிதி உதவியாளருக்குச் செலுத்துவதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்களை 2020-08-21ஆம் திகதி முதல் 2020-09-10ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

04. பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனு ஆவணங்களை 'மூலப் பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையில் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய கொள்வனவைக் குறிப்பிட்டு, 2020-09-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் வடமத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது செயலாளர் / தலைவர், கௌரவ ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு, பிரதான செயலகம், 4வது மாடி, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, அனுராதபுரம் எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2020-09-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

05. 2020-09-11ஆம் திகதி முதல் 105 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் வடமத்திய மாகாண பிரதான செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுப் பிணை முறியொன்றை இயைபுடைய விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. இந்த பெறுகை தொடர்பில் வடமத்திய மாகாண ஆளுநரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பிரதான செயலாளர் / தலைவர்,**
**கௌரவ ஆளுநரினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**பிரதான செயலகம், 4வது மாடி,**
**மாகாண சபை நிர்வாகக் கட்டிடத்தொகுதி,**
**வடமத்திய மாகாணம்.**

# பெறுகை அறிவித்தல்

## கேகாலை பிரதேச சபை

## மொரொன்தொட்ட பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியின் இரண்டாம் கட்டத்தை நிர்மாணிக்கும் செயற்றிட்டம்

01. கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரிவில் மொரொன்தொட்ட பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக கேகாலை பிரதேச சபையின் தலைவராகிய என்னால் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கேள்விதாரர்கள் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (CIDA) கட்டிடத் துறையில் C7 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் கடந்த மூன்று வருடங்களினுள் உத்தேச வேலையின் தன்மைக்கும் மற்றும் சிக்கல் தன்மைக்கும் சமனான குறைந்தபட்சம் அவ்வாறான ஒன்றையாவது வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் குறைந்தபட்சத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

03. **கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்தல்**

தகைமை வாய்ந்த ஒப்பந்ததாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை (ஒரு மூலப் பிரதி மற்றும் ஒரு நகல் பிரதி) 2020-08-24ஆம் திகதி முதல் 2020-09-11ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) கேகாலை பிரதேச சபைக்கு எழுத்து மூலமான வேண்டுகோளொன்றுடன் மீளளிக்கப்படாத 3000.00 ரூபா கட்டணமொன்றைச் செலுத்திய பின் கொள்வனவு செய்யலாம். CIDA பதிவுப் புத்தகம் மற்றும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து தமது தகைமையை உறுதி செய்யும் கேள்விதாரர்களுக்கு மட்டுமே கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். பிரதிநிதியொருவரை முற்படுத்துவதானால் அதிகாரம் வழங்கப்பட்ட கடிதமொன்றை கட்டாயம் அனுப்புதல் வேண்டும்.

04. **கேள்விப் படிவங்களை ஒப்படைத்தல்**

**முகவரி: தலைவர், கேகாலை பிரதேச சபை, கேகாலை**

2020-09-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மட்டுமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகளை தபால் மூலம் அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன் உள்ளிட்டு கிடைக்கச் செய்யலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. **கேள்விகள் திறக்கப்படுதல்**

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளலாம்.

06. நிர்மாண இடத்தைப் பரீட்சித்துப் பார்த்தல், கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் உட்பட கேள்விதாரருக்கு ஏற்படும் செலவுகள் தொடர்பில் கேகாலை பிரதேச சபை பொறுப்புக்கூற மாட்டாது. ஏற்படும் எந்தவொரு முரண்பாடுகள் தொடர்பிலும் கேகாலை பிரதேச சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

07. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் பிரதேச சபையின் செயலாளரிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 035-2222631.

திகதி: 2020-08-18

**ஐ. ஜகத் ரவீந்திர ஜயசிங்க,**
**தலைவர்,**
**கேகாலை பிரதேச சபை.**

# கேள்வி அறிவித்தல்

## 2021ஆம் ஆண்டு

## தங்கல்ல நகர சபை

தங்கல்ல நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2021.01.01 முதல் 2021.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக 02 பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2020.09.11 மு.ப. 10.00 வரை தங்கல்ல நகர சபையின் கேள்விகள் உள்ளிடுவதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம் அல்லது அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு தங்கல்ல நகர சபைக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

கேள்விப் படிவங்கள் 2020.09.09ம் திகதி பி.ப. 3.00 மணி வரை தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு அங்கீகரிக்கக் கூடிய அடையாள அட்டையை சமர்ப்பித்து கீழ்க்காணும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவர்களுக்கு மாத்திரம் கீழ்க்காணும் கட்டணங்களை அறவிட்டதன் பின்பு இவ் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும்.

கேள்விப் படிவத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்பு கேள்விகளை பெற்றுக்கொள்பவரின் தேவைப்பாட்டை உறுதி செய்தல் வேண்டும். நிரந்தர வதிவை உறுதி செய்வதற்காக கிராம சேவகர் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வருடாந்தம் ரூ. 240000/- இற்கு மேற்பட்ட வருமானம் உள்ளதாக பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் வருமான சான்றிதழ் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்டல் வேண்டும். 25 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மாத்திரம் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

2020.09.11 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும் சகல கேள்விப் பத்திரங்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தங்கல்ல நகர சபையின் கேள்விச் சபைக்கு உரித்தாவதுடன் கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விசாரித்து அறியலாம்.

தொலைபேசி இலக்கம்: 047-4931945 அல்லது 047-4934275

**அட்டவணை**

| தொடர் இல | விடயம் | விண்ணப்பிக் கக்கூடிய குறைந்த பட்ச கேள்விப் பெறுமதி ரூ. சதம் | கேள்விப் பிணைத் தொகை ரூ. சதம் | கேள்விப் படிவக் கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 01 | தங்கல்ல மக்கள் சந்தை, மீன் மார்கட் மற்றும் நகர சபை எல்லைக்குள் மேலதிக வரி சேகரிக்கும் உரிமையை குத்தகைக்கு விடல் | 6245954.00 | 25000.00 | 1500.00 |
| 02 | தங்கல்ல பொதுச் சந்தை மாட்டிறைச்சி கடையை குத்தகைக்ககு விடல் | 1642500.00 | 15000.00 | 1500.00 |
| 03 | புதிய பொது மலசலகூடத்தை குத்தகைக்கு விடல் | 660500.00 | 10000.00 | 500.00 |
| 04 | பறைவெல்ல கடற்கடை பூங்காவின் கட்டணம் அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடல் | 1710100.00 | 25000.00 | 1500.00 |

**ரரவிந்து வெத ஆரச்சி**
**தலைவர்**
**தங்கல்ல நகர சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுற்றுலா அமைச்சு

## தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்

## சீருடைகள் மற்றும் சப்பாத்துகள் வழங்கல் – 2020

**விலைக்கோரல் இல. DNZG/A/07/20/97**

1. தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்திற்கு சீருடைகள் மற்றும் சப்பாத்துக்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

| உருப்படி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | விலைமனு பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|
| | **லொட் இல. 01** | | |
| I. | அஸ்பாரகஸ் (Asparagus) நிற காற்சட்டைத் துணி (65/35) நீளம் 58"/60" (RGB Code: 140:145:79, Hex Code: #8C914f) | 55 மீற்றர் | 20,000/= |
| II | திஸ்ட்டில் பச்சை (Thistle Green) சேர்ட் துணி (80/20) நீளம் 44"/45" (RGB code: 198:198:153, Hex code # C6C699) | 65 மீற்றர் | |
| III | செருலீன் (இளம் நீலம்) ஓவர்கோட் துணி Cerulean (Light Blue) Overcoat material (65/35) நீளம் 58"/60" (RGB code: 0:165:219, Hex code: #00A5DB) | 60 மீற்றர் | |
| IV | கறுப்பு காற்சட்டைத் துணி (65/35) நீளம் 58"/60" | 1,250 மீற்றர் | |
| V | அரைக் காற்சட்டைக்கான கறுப்பு காற்சட்டை துணி (100% பருத்தி) நீளம் 58"/60" | 950 மீற்றர் | |
| VI | கடும் பச்சை காற்சட்டைத் துணி (65/35) நீளம் 58"/60" | 65 மீற்றர் | |
| VII | இளம் பச்சை சேர்ட் துணி (80/20) நீளம் 44"/45" | 80 மீற்றர் | |
| VIII | கடும் பழுப்பு நிற (Shade 1) காற்சட்டைத் துணி (65/35) நீளம் 58"/60" | 45 மீற்றர் | |
| IX | மணல் நிற (Shade 1) சேர்ட் துணி (80/20) நீளம் 44"/45" | 65 மீற்றர் | |
| X | கடும் பழுப்பு நிற (Shade 2) காற்சட்டைத் துணி (65/35) நீளம் 58"/60" | 30 மீற்றர் | |
| XI | மணல் நிற (Shade 2) சேர்ட் துணி (80/20) நீளம் 44"/45" | 37 மீற்றர் | |
| XII | வெள்ளை சேர்ட் துணி (80/20) நீளம் 44"/45" | 67 மீற்றர் | |
| XIII | காக்கி துணி (65/35) நீளம் 58"/60" | 540 மீற்றர் | |
| XIV | கடும் நீல நிற காற்சட்டைத் துணி (65/35) நீளம் 58"/60" | 5 மீற்றர் | |
| XV | இளம் நீல நிற சேர்ட் துணி (80/20) நீளம் 44"/45" | 6 மீற்றர் | |
| XVI | போடருடனான பருத்தி சாறிகள், தலைப்புத் துண்டு மற்றும் ரவிக்கை துண்டு (அலங்கரிப்பு அல்லது அலங்கரிப்பு இல்லாமல்) பச்சை சார்ந்த நிறம் | 42 துண்டுகள் | |
| | **லொட் இல. 02** | | |
| XVII | டீ-சேர்ட் (காட்டுப் பச்சை நிறம்) (R18:G64:B38) crocodile material – Sizes : S, M, L, XL, XXL | 1,050 | 10,000/= |
| XVIII | டீ-சேர்ட் (பழுப்பு நிறம்) crocodile material. Sizes – S,M,L,XL,XXL | 290 | |
| | **லொட் இல. 03** | | |
| XIX | பாதுகாப்பு சப்பாத்துகள் (கறுப்பு நிறம்) | 12 சோடிகள் | 20,000/= |
| XX | கறுப்பு தோற் சப்பாத்துகள் | 500 சோடிகள் | |
| XXI | பாதுகாப்பு அதிகாரிகளுக்கான கறுப்பு தோற் சப்பாத்துகள் | 60 சோடிகள் | |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் (உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது துணி மற்றும்/அல்லது சப்பாத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்கள்) மேலதிக தகவலை மஹரகம, வத்தேகெதர சந்தி, 251/2A, 251/2B என்ற இலக்கங்களிலுள்ள தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்திலிருந்து (தொலைபேசி: 2712752/53) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2020 ஆகஸ்ட் 21ஆம் திகதி முதல் 2020 செப்டெம்பர் 09ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. மீளளிக்கப்படாத கட்டணமான இரண்டாயிரம் ரூபாவைச் (2,000.00) செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக் கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்ய இயலும். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

5. 2020 செப்டெம்பர் 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2020 செப்டெம்பர் 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம்,**
**அநகாரிக தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**

# துணை ஜனாதிபதி வேட்பாளர் தேர்வை ஏற்றார் கமலா ஹரிஸ்



அமெரிக்க செனட்டர் கமலா ஹரிஸ் ஜனநாயகக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதி வேட்பாளருக்கான நியமனத்தை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

துணை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் முதல் கறுப்பின, ஆசிய அமெரிக்க வேட்பாளராக அவர் உள்ளார்.

நியமனத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய அவர், பொதுத் தேர்தலில் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை அதிகாரபூர்வமாக்கிய சட்டத்தைப் போற்றினார்.

மகளிர் உரிமைகளுக்காகப் போராடிய பெண்களை நினைவு கூர்ந்த ஹரிஸ், தம்முடைய தாயார் ஷியாமளா கோபாலன் அவர்களுள் ஒருவர் என்றார்.

கொரோனா நோய்ப் பரவல், பாதுகாப்பு அதிகாரிகளால் ஏற்பட்ட ஜோர்ஜ் புளோய்ட், பிரியானா டேலர் ஆகியோரின் மரணம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டிய அவர், இனப் பாகுபாட்டை முறியடிக்க வாக்காளர்கள் தங்கள் கடமையைச் செய்யவேண்டும் என்றார்.

எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் டொனால்ட் டிராம்ப் மற்றும் அவரின் துணை ஜனாதிபதி மைக் பென்ஸை எதிர்த்து ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹரிஸ் போட்டியிடவுள்ளனர்.

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் விஷம் அருந்தி உயிராபத்து

ரஷ்ய எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல் தலைவர் அலெக்ஸி நவல்னி நேற்றுக் காலை நஞ்சூட்டப்பட்டதால் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடினின் அரசை தொடர்ந்து விமர்சித்து வந்த 44 வயதான நவல்னி நேற்றுக் காலை சைபீரியாவில் உள்ள டாம்ஸ்க் நகரிலிருந்து மொஸ்கோவுக்கு சென்ற விமானத்தில் பயணித்தார். திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் விமானம் ஓம்ஸ்கில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இது குறித்து நவல்னியின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், விஷம் அருந்தியதால் மயக்கமடைந்த நவல்னி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் சூடான திரவத்தில் விஷம் கலந்து குடித்ததாக கூறினார்கள். அவர் நேற்றுக் காலை தேநீர் மட்டுமே அருந்தியதால், அதில் கலந்து குடித்திருக்கலாம் எனத் தெரிவித்தார்.



நவல்னி உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளார் என மருத்துவமனையின் தலைமை மருத்துவரின் அறிக்கையை இணைத்து ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## தென் சூடானில் அந்நிய செலாவணி இருப்பு தீர்ந்தது



தென் சூடானின் எண்ணெய் வருவாய் வீழ்ச்சி கண்டிருக்கும் நிலையில் நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு தீர்ந்துவிட்டதாகவும் பௌண்டின் தேய்மானத்தை நிறுத்த முடியாதுள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தென் சூடானின் கிட்டத்தட்ட மொத்த வருவாயும் எண்ணெயில் தங்கி இருப்பதோடு தற்போது அது நாளொன்றுக்கு சுமார் 180,000 பீப்பாய் எண்ணெய்யையே உற்பத்தி செய்கிறது. இந்நிலையில் எண்ணெய் விலை குறைந்திருக்கும் சூழலில் நாட்டின் வருவாய் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. "எம்மிடம் கையிருப்பு இல்லாத காரணத்தால் வேகமாக அதிகரிக்கும் வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தை எம்மால் தற்போது நிறுத்துவது கடினமாக உள்ளது" என்று மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டானியல் கெச் பௌச் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஆறு ஆண்டுகள் நீடித்த சிவில் யுத்தம் மற்றும் ஊழல் ஆகியவையும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளது.

# லிபியாவில் அகதிப் படகு மூழ்கி 45 பேர் உயிரிழப்பு

லிபிய கடல் எல்லையில் கப்பல் ஒன்று மூழ்கியதில் அதில் இருந்த ஐந்து குழந்தைகள் உள்பட 45 குடியேறிகள் மற்றும் அகதிகள் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா அகதிகள் உயர் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு நடந்த மிகவும் மோசமான கப்பல் விபத்து இதுவாகும். ஸ்வாரா நகரின் கடற்கரையோரம் எஞ்சின் வெடித்து இந்த கப்பல் விபத்துக்குள்ளானபோது, அதில் 80க்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

விபத்திலிருந்து உயிர் தப்பிய 37 பேர் உள்ளூர் மீனவர்களால் மீட்கப்பட்டனர்.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று ஐ.நா அகதிகள் உயர் ஆணையம் மற்றும் ஐ.நாவின் சர்வதேச குடிப்பெயர்வு அமைப்பு ஆகியவை வலியுறுத்தியுள்ளன.

இதற்கென தனியான தேடுதல் மற்றும் மீட்பு பொறிமுறை இல்லா



விட்டால் மத்தியத் தரைக்கடல் பகுதியில் மேலும் பல உயிரிழப்புகள் நிகழும் என்றும் இந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன.

லிபியாவில் இருந்து கடல் கடந்து ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 300க்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆண்டு உயிரிழந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் உயிரிழப்புகளின் உண்மையான எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக்கூடும்.

லிபியாவில் ஆட்சியிலிருந்த முஅம்மர் கடாபி 2011ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த நீக்கப்பட்டு கொல்லப்பட்ட பின்னர், குடியேறிகள் ஐரோப்பாவுக்குள் நுழைய முயலும் முக்கிய நாடாக லிபியா உள்ளது.

# இஸ்ரேலுடன் உறவுக்கு சவூதி முன்நிபந்தனை



பலஸ்தீனத்துடன் சர்வதேசம் அங்கீகரிக்கும் அமைதி உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும் வரை இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட மாட்டாது என்று சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

முதல் வளைகுடா நாடாக இஸ்ரேலுடன் ஐக்கிய அரபு இராச்சியம் இராஜதந்திர உறவை ஏற்படுத்த உடன்பாடு எட்டப்பட்டிருக்கும் நிலையில் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் அதனை பின்பற்ற வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் கடந்த ஒருசில நாட்களாக அமைதி காத்து வந்த சவூதி அரேபியா அது பற்றி முதல் முறை மௌனம் கலைந்துள்ளது. பலஸ்தீன விவகாரம் தீர்க்கப்படும் வரை இஸ்ரேலுடனான உறவுக்கு சாத்தியம் இல்லை என்று சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் குறிப்பிட்டுள்ளார்.

உறவை ஏற்படுத்துவதற்கான முன்நிபந்தனையாக சர்வதேச உடன்பாடுகளின் அடிப்படையில் பலஸ்தீனத்துடன் அமைதி எட்டப்பட வேண்டும் என்று பெர்லின் நகருக்கு விஜயம் மேற்கொண்ட இளவரசர் தெரிவித்தார்.

## உலகெங்கும் ஜிமெயில் பயன்பாட்டில் சிக்கல்



உலகம் முழுவதும் ஜிமெயில், கூகுள் டிரைவ் பயன்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக பயனர்கள் புகார் தெரிவித்துள்ளனர்..

கூகுளின் பல்வேறு சேவைகளை கோடிக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், நேற்று சில மணி நேரங்களாக ஜிமெயிலில் இணைப்புகளை அனுப்பும் போது பல சிக்கலை எதிர்கொள்வதாகப் பயனர்கள் தெரிவித்திருந்தனர்.

கூகுள் ஆப்ஸ் பக்கத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டதை அடுத்து சேவையில் பின்னடைவு ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் ஜிமெயில் சேவை முடங்கியது குறித்து கூகுள் நிறுவனம் ஆய்வு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கூகுள் மீட், கூகுள் வொய்ஸ் மற்றும் கூகுள் டெக்ஸ் ஆகியவற்றில் உள்ள சிக்கல்கள் குறித்தும் பயனர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். அதேபோன்று ஜிமெயில் சேவை முடங்கியது குறித்து பலர் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

# ஆப்பிள் நிறுவனத்தின் சந்தை மதிப்பு 2 இலட்சம் கோடி டொலராக உயர்வு



ஆப்பிள் நிறுவனம் 2 இலட்சம் கோடி டொலர் சந்தை மதிப்பை அடைந்த முதல் அமெரிக்க நிறுவனமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

பல்வேறு தொழில்நுட்பப் போட்டிகள் நிலவும் உலகில் 20 இலட்சம் கோடி டொலர் சந்தை மதிப்பைப் பெற்ற இரண்டாவது நிறுவனமாக ஆப்பிள் நிறுவனம் வளர்ந்துள்ளது. மாறி வரும் தொழில்நுட்ப சூழலிலும் அதிக அளவிலான முதலீட்டாளர்களை இந்நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

கொரோனா பரவல் சூழ்நிலையில் பல்வேறு நிறுவனங்களும் நிதிச்சுமையில் சிக்கியுள்ளன. ஆனால் உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான ஆப்பிள், மைக்ரோசொப்ட், கூகிள், பேஸ்புக் போன்ற நிறுவனங்கள் தங்களது சந்தை மதிப்பில் குறிப்பிடத்தக்க உயர்வை அடைந்துள்ளன.

ஆப்பிள் நிறுவனம் தனது 1 இலட்சம் கோடி அமெரிக்க டொலர் சந்தை மதிப்பை கடந்த 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அடைந்தது. அதனைத் தொடர்ந்து 2 வருட இடைவெளியில் 2 இலட்சம் கோடி டொலர் சந்தை மதிப்பைத் தொட்டுள்ளது.

ஆப்பிள் நிறுவனத்தின் பங்கு இந்த ஆண்டு கிட்டத்தட்ட 60 வீதம் உயர்ந்துள்ளது. கடந்த ஜூலை மாதம் இந்நிறுவனம் மூன்றாம் காலாண்டில் 59.7 பில்லியன் டொலர் வருவாயை ஈட்டியுள்ளது.

2 இலட்சம் கோடி அமெரிக்க டொலர் சந்தை மதிப்பை அடைந்த முதல் நிறுவனமாக சவூதி அரேபியாவின் அரம்கோ உள்ளது.

# ஜெர்மனியில் நாய்களுக்கு நடைப் பயிற்சி கட்டாயம்; புதிய சட்டத்தால் குழப்பம்

செல்லப்பிராணியாக நாய் வளர்ப்போர் தங்கள் நாய்களைத் தினமும் இரு முறை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று ஜெர்மனியில் புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.


ஒரு நாளைக்கு இருமுறை என மொத்தம் 1 மணி நேரம் நாய்களை உடற்பயிற்சிக்காக வெளியே கூட்டிச் செல்ல வேண்டும் என்று புதிய சட்டம் குறிப்பிட்டுள்ளது.

நிபுணர்களின் ஆலோசனைக்குப் பின்னரே அந்தச் சட்டத்தை அறிமுகம் செய்ததாக ஜெர்மானிய வேளாண்மைத்துறை அமைச்சர் கூறினார்.

"செல்லப் பிராணிகள் மனிதர்கள் அணைத்துக்கொள்ளும் விளையாட்டுப் பொருள்கள் அல்ல. அவற்றின் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

நாய்களுக்குப் போதுமான உடற்பயிற்சி தேவை, அவற்றை அதிக நேரம் தனிமையில் விடக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெர்மனியில் சுமார் 9.4 மில்லியன் நாய்கள் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படுகின்றன. அவற்றுக்கு



எது சிறந்தது என்பதை அரசாங்கம் முடிவெடுக்கலாமா என்று சிலர் கேள்வி எழுப்பினர். ஜெர்மனியர்கள் ஐவரில் ஒருவருடைய வீட்டில் நாய் உள்ளது. இந்நிலையில் புதிய சட்டம் எப்படி நடைமுறைப் படுத்தப்படும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

# ஹொங்கொங்குடனான உடன்பாடு: அமெ. அதிகாரபூர்வமாக விலகல்

ஹொங்கொங் உடனான 3 உடன்படிக்கைகளிலிருந்து விலகியவிட்டதாக அமெரிக்கா அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளது. அது குறித்து ஹொங்கொங் அதிகாரிகளுக்கு முறைப்படி தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய குற்றவாளிகளை சரணடையச் செய்வது, தண்டனை விதிக்கப்பட்டவர்களைத் திரும்ப ஒப்படைப்பது, சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு இருதரப்பு வருமான வரி விலக்கு ஆகியன அந்த மூன்று உடன்படிக்கைகள் ஆகும்.

ஹொங்கொங்கில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்களை முடக்கும் வகையில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைச் சீனா அறிமுகம் செய்தது.

அதனால் ஹொங்கொங்கிற்குக் கொடுக்கப்பட்டிருந்த வர்த்தக முன்னுரிமை அங்கீகாரத்தை நீக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கூறியிருந்தார். சீனாவுடன் ஒப்பிடுகையில், ஹொங்கொங்கைச் சிறப்பாக நடத்துவதற்கு தகுந்த காரணம் ஏதும் இல்லை எனும் நிர்வாக உத்தரவில் ஜனாதிபதி டிரம்ப் கடந்த மாதம் கையெழுத்திட்டார். பிரிவினைவாதம், பயங்கரவாதம், வெளிநாட்டுச் சக்திகளுடன் இணைந்து செயல்படுவது போன்றவற்றைத் தேசியப் பாதுகாப்புச் சட்டம் குற்றச் செயல்களாக வகைப்படுத்தியுள்ளது.

# பெண் செயற்பாட்டாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை



ஒரு வாரத்திற்குள் மூன்றாவது சம்பவமாக ஈராக்கின் பஸ்ரா நகரில் பெண் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உள்ளூர் அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடும் மருத்துவர் ஒருவரான ரிஹாம் யாகூப் என்பவர் கடந்த புதன்று அடையாளம் காணப்படாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

டஹ்சீம் ஓசாமா என்ற மற்றொரு செயற்பாட்டாளர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பஸ்ரா நகரில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பிறிதொரு சம்பவத்தில் கார் வண்டியில் சென்றுகொண்டிருந்த மற்றொரு செயற்பாட்டாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பஸ்ரா பொலிஸ் பிரதானி மற்றும் ஏனைய பாதுகாப்பு அதிகாரிகளை பிரதமர் முஸ்தபா அல் காதிமி பணி நீக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இரத்தினம் அறக்கட்டளையினால் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையானது பாடசாலை அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தசிவத்தால் திறந்து வைக்கப்படுவதையும், பாடசாலையின் பிரதி அதிபர் கற்றல் நடவடிக்கை பற்றி தெளிவுபடுத்துவதையும், பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.
படங்கள் மானிப்பாய் தினகரன் நிருபர்

## பூநகரி பிரதேசத்துக்கு நாளாந்தம் 45,000 லீற்றர் குடிநீர் விநியோகம்

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பூநகரி பிரசேதத்தில் நிலவும் வரட்சி நிலமையினை கருத்திற்கொண்டு நாளாந்தம் 45 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை தெரிவித்தார். கிளிநொச்சி பூநகரிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் வரட்சி நிலமையினால் பல பகுதிகளிலும் குடிநீர் தேவை அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறு குடிநீர் தேவையுள்ள பகுதிகளுக்கான குடிநீர் விநியோகம் பூநகரி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், குடிநீர் நெருக்கடி அதிகம் எதிர்கொள்ளும் பகுதியாக பூநகரிப் பிரதேசம் காணப்படுகின்றது. இவ்வாறான பகுதிகளுக்கு பிரதேச சபையினால் நாளாந்தம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, ஆலங்கேணி செட்டியகுறிச்சி பரமன்கிராய் கறுக்காய் தீவு சித்தங்குறிச்சி பள்ளிக்குடா உள்ளிட்ட பகுதிகளுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் தினமும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது 113 நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு நான்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விநியோகிப்பதற்கு தேவையான குடிநீரை பெற்றுக்கொள்வதில் பாரிய நெருக்கடி காணப்படுகின்றது.

15 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முட்கொம்பன் பகுதியிலிருந்து தற்போது தண்ணீரைப்பெற்று நாளாந்தம் சுமார் 45 ஆயிரம் லீற்றர் தண்ணீரை விநியோகித்து வருகின்றோம் என்றார்.

## உள்ளூராட்சி சபைகளினால் விடப்படும் தவறே மக்கள் சட்டவிரோதமாக செயற்படக் காரணம்

### சாவக்சேரி நகரசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

த.சுபேசன்

நகரசபை விடும் தவறு தான் பொதுமக்கள் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடக் காரணமாகின்றது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் குற்றஞ்சாட்டியுள்ளார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் நடைபெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

நகரசபை மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் ஓர் அமைப்பு. அதில் நாம் மக்கள் சேவகர்கள். வீடுகள் மற்றும் மதில்கள் உள்ளிட்ட கட்டடங்களைக் கட்டுவதற்கான விண்ணப்பங்களை பொதுமக்கள் நகரசபையிடம் சமர்ப்பிக்கின்றனர். குறித்த விண்ணப்பங்கள் நகரசபைக்குள் இருக்கும் ஆதனப் பகுதி, தொழில்நுட்ப உத்தியோகத்தர், சுகாதாரப் பரிசோதகர் உள்ளிட்ட அலுவலர்களின் பகுதிகளுக்கு உரிய அனுமதிகளுக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை நகரசபைக்குள் இயங்கும் மேற்குறித்த பகுதியினர் இவ்வளவு காலத்திற்குள் பரிசீலித்து மீள சமர்ப்பிக்க வேண்டும் என்ற கால வரையறை உள்ளதா? அல்லது அவர்கள் விரும்பிய நேரம் சமர்ப்பிக்க முடியுமா என்பதனை நகரசபை நிர்வாகம் சபை உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்களை நகரசபையிடம் சமர்ப்பிப்பவர்கள் பல மாதங்கள் காத்திருந்து அனுமதி கிடைக்காத நிலையில் சட்டவிரோதமாக கட்டடங்களைக் கட்டுகின்றனர். குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வருவோர் நகரசபையின் தவறினால் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே நகரசபை நிர்வாகம் தமக்கு கிடைக்கும் கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்களை சுகாதாரப் பரிசோதகர்,தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற நகரசபை உத்தியோகத்தர்களிடம் அனுமதிக்காக அனுப்பி வைக்கும் போது இவ்வளவு நாட்களுக்குள் மீள சமர்ப்பிக்க வேண்டும் என்ற வரையறையை விதித்து பொதுமக்களுக்கு சிறப்பான சேவையாற்ற வேண்டும். சட்டவிரோதச் செயல்களில் பொது மக்கள் ஈடுபட நாம் காரணமாகி விடக்கூடாது என்றார்.

## மாதகலில் கடற்படையினருக்கு காணி சுவீகரிக்க முயற்சி

### மக்களின் எதிர்ப்பினையடுத்து கைவிடப்பட்டது

பருத்தித்துறை விசேட நிருபர்

மாதகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமிற்கு மேலதிகமாக தனியார் காணிகளை சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று வருகை தந்த போது அப்பகுதி மக்கள் பெரும் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படையினருக்கு அளப்பதற்கு சென்றுள்ளனர். இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து நில அளவைப் பணியை கைவிட்டு விட்டு திரும்பி சென்றனர். இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பதட்டமான சூழ்நிலை காணப்பட்டது. குறித்த மக்களின் போராட்டத்தின்போது ஏராளமான பொலிசாரும் கடற்படையினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இவ் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றிய பொலிசார் குறித்த காணி உரிமையாளரை அழைத்து பேசியிருந்தனர்.

காணி உரிமையாளர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான கனகரட்னம் சுகாஷ் சென்று கடற்படை மற்றும் பொலிசாருடன் பேசியிருந்தார்.

இதன்போது காணி உரிமையாளர்கள் காணியை வழங்க மறுத்த நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.

இதன் பின்னர் சுகாஸ் மற்றும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் அனந்தி சசிதரன் மற்றும் அப் பகுதி பிரதேச சபை உறுப்பினரும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

மேலும் காணி உரிமையாளர்களுடன் கடற்படையினரும் பொலிசாரும் நடத்திய பேச்சுக்களின் போது ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானைகளினால் நெற் செய்கை பாதிப்பு

முல்லைத்தீவு குறூப் நிருபர்



கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இரவு வேளைகளில் கிராமத்திற்குள் வருகை தரும் யானைகள் பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன.

இதளால் காலபோக, சிறுபோக நெற்செய்கைகள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள நிலையில் தற்போது வன்னேரிக்குளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இடைபோக நெற்செய்கையும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

குறித்த யானைகளை விரட்டுவதற்கு யானை வெடிகளை கூடுதலாக வழங்குங்கள் என பொது மக்களினால் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் பல கிராமங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக கூடுதலான யானைகள் வன்னேரிக்குளம் காட்டில் தங்கி நிற்பதாகவும் இவையே இரவில் கிராமங்களுக்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானைகளை கிராமத்தில் இருந்து நீண்ட நேரம் கலைத்து சென்று விடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

## மன்னார் பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக்கூட்டம்

தலைமன்னார் நிருபர்

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக்கூட்டமும் ஆளுநர் சபை உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் 26.09.2020 சனிக்கிழமை காலை 9 மணிக்கு தலைமன்னார், மன்னார் வீதியில் அமைந்துள்ள கலையருவி மண்டபத்தில் நடைபெற இருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆளுநர் சபையில் உறுப்பினர்களாக இணைய விரும்புவோர் மூன்று மாதங்களுக்கு முன் உறுப்புரிமை பெற்றவர்கள் இத் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் இதில் போட்டியிட விரும்புவோர் தேர்தலுக்கான வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தினை அதன் அலுவலகத்தில் பெற்று விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து 2020.09.10 ஆம் திகதி மாலை 2 மணிக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அலுவலகத்தில் சமர்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## பேருந்துக்கு காத்திருந்த மூதாட்டியிடம் சங்கிலி பறிப்பு

த.சுபேசன்

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் மூதாட்டி ஒருவரின் தங்கச் சங்கிலியை கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வீரசிங்கம் வீதியின் ஊடாக நடந்து வந்து பஸ்ஸில் ஏறுவதற்காக சாவகச்சேரி கச்சாய் வீதியில் காத்திருந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மூதாட்டியிடம் முகவரி ஒன்றைக் கேட்டு விட்டு அவர் அணிந்திருந்த சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சங்கிலியை பறிகொடுத்த மூதாட்டி பொலிஸ் நிலையம் சென்று முறையிட ஆள் உதவி இல்லாத நிலையில் பஸ்ஸில் ஏறி வீடு சென்றிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியில் கடந்த காலங்களிலும் வழிப்பறி மற்றும் களவு சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அதன் பின்னர் கச்சாய் வீதியில் இராணுவச் சோதனைச் சாவடி அமைந்திருந்த காலத்தில் இவ்வாறான களவுச் சம்பவங்கள் குறைந்திருந்ததாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வவுனியாவில் ஆணின் சடலம் பொலிஸாரால் மீட்பு

கோவில்குளம் குறூப் நிருபர்

வவுனியா பறையனாலங்குளம் பகுதியில் ஆணின் சடலம் ஒன்று நேற்று காலை பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா மன்னார் வீதி, மதவாச்சியிலிருந்து மன்னார் செல்லும் பிரதான வீதிகளை இணைக்கும் பறையனாலங்குளம் முச்சந்தியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் குறித்த ஆணிண் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபரிடமிருந்து மதவாச்சியிலிருந்து மன்னார் வரையிலான பயணச்சீட்டு மீட்கப்பட்டுள்ளதுடன் வேறு எந்த ஆவணமும் இல்லாமையால் குறித்த நபரை அடையாளம் காணுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பறையாலங்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒரு வாரமாக அடையாளம் காணப்படாத நிலையில் உள்ள பெண்ணின் சடலம்

தலைமன்னார் நிருபர்

மன்னார் உப்பளப் பகுதியில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட இளம் யுவதியின் சடலம் ஒரு வாரத்துக்கு மேற்பட்டும் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மன்னார் பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி காலை மன்னார் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து காயங்கள் இருந்த நிலையில் ஒரு இளம் பெண்ணின் சடலம் ஒன்று மன்னார் உப்பளப் பகுதியில் உள்ள தண்ணீர் ஓடைக்குள் கண்டு பிடிக்கப்பட்டது.

இச் சடலம் மன்னார் பொலிசாரால் மீட்கப்பட்ட நிலையில் தற்பொழுது மன்னார் பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனையின் பின் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

எனினும் சடலம் மீட்கப்பட்டு ஒருவாரம் கடந்துள்ள போதும் சடலம் தொடர்பான எந்த தகவல்களும் கிடைகப்படவில்லை என பொலிசார் தெரிவித்தனர். இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா உள்ளக வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தல்

வவுனியா நிருபர்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் அஞ்சலா கோகிலகுமாரின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் தனது வட்டாரத்திலுள்ள உள்ளக வீதிகளுக்கு 60 மின் விளக்குகள் நேற்று பொருத்தி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினரின் 2020 வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் மின் விளக்குகள் அற்ற நிலையில் காணப்படும் ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் பாலமோட்டை, கிழவிகுளம் உட்பட 15 கிராமங்களிலுள்ள வீதிகளுக்கு இவ்வாறு 60 மின் விளக்குகள் பொருத்தி முடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.



## கால்நடைகளுக்கான கேணிகளை புனரமைக்க கோரிக்கை

மானிப்பாய் தினகரன் நிருபர்

குடிநீரைத் தேடி அலைந்து திரியும் கால்நடைகளின் நலன் கருதி நவாலி பகுதியில் வீதியோரத்தில் முன்னோர்களால் அமைக்கப்பட்ட சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்த இரு கேணிகள் தூர்ந்து போகும் நிலையில் உள்ளன.

கேணிகளின் நிலைப்பாடு குறித்து பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் தெரியப்படுத்திய போதிலும் இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து விசனம் தெரிவித்துள்ள இப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் கால்நடைகளின் நலன் கருதி கேணிகளை அபிவிருத்தி செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் நவாலி பகுதியில் கட்டி வளர்க்கப்படும் கால்நடைகள் காலபோக நெல் அறுவடைக்குப் பின் மேய்ச்சலுக்காக வெளியே விடுவது வழக்கம். வயல் வெளியில் அலைந்து திரியும் கால்நடைகளின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு நவாலி வடக்கு நவாலி தெற்கு ஆகிய இடங்களில் வீதியோரங்களில் 1883ஆம் ஆண்டு முன்னோர்களால் இரு கேணிகள் அமைக்கப்பட்டிருந்தன.

## இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்க நிறைவு நாள் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் (Zoom) செயலி வாயிலாக முன்னெடுத்து வரும் 20 நாட்கள் இணையவழி ஆய்வு மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வுகள் இன்று (21.08.2020) பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளன.

உலகத் தமிழ்ச்சங்க இயக்குநர் கலாநிதி ப.அன்புச்செழியன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ்ச்சிற்றிதழ்கள் என்ற பொருளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் ஆய்வுரை ஆற்றுவார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் நிறைவுரையாற்றுவார். உலகத் தமிழ்ச்சங்கத்தின் ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் ஐ.ஜான்சிராணி நிகழ்வுகளை நெறிப்படுத்துவார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். Zoom meeting ID : 477 159 8996pass word : wts

# கொவிட் 19: பீ.சி.ஆர் பரிசோதனை, வெற்றிகரமாக முன்னெடுப்பு

## அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இஸ்மாயில்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கொவிட் 19 (கொரோனா வைரஸ்) நாடளாவிய ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில், பீ.சி.ஆர். பரிசோதனை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிலுள்ள பிரதேசங்களில் சந்தேகத்திற்கிடமானோரின் மாதிரிகள் பெறப்பட்டு, பீ.சி.ஆர். பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வெளியூர் தொடர்புகளைப் பேணுபவர்கள், வெளிநாடுகளிலிருந்து அண்மைக்காலத்தில் பிரதேசத்திற்குத் திரும்பியவர்கள், பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளவர்கள், ஆகியோருக்கு பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, ஆகஸ்ட் மாதத்தில் மொத்தம் 82 பீ.சி.ஆர் பரிசோதனைகளை நிறைவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை சுமார் 20 பீ.சி.ஆர் பரிசோதனைகளே நிறைவடைந்துள்ளன.

எதிர்வரும் நாட்களில் மீதி பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி இஸ்மாயில் மேலும் குறிப்பிட்டார். இதுவரை பீ.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டவர்களில் எவருக்கும் கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொவிட் 19 தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள். விழிப்பூட்டும் நடவடிக்கைகள், கண்காணிப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த சுகாதார வைத்திய அதிகாரி இஸ்மாயில், இவ்விடயத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

## பல்கலைக் கழகங்களில் மாணவர் வரவு குறைவு

கொரோனா வைரஸ் பரவலின் பின்னர் மூடப்பட்ட பல்கலைக்கழகங்கள் இம்மாதம் (17) திகதி திறக்கப்பட்டபோதும் மாணவர்களின் வரவு குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொரோனா அச்சுறுத்தலால் சுமார் மூன்று மாதங்களாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்தன. இந்நிலையில் கடந்த 17 இல் மீண்டும் இவை திறக்கப்பட்டும் மாணவர் வரவு குறைவாகவே காணப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கையின் பேரிலே பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டன.

கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று நாட்கள் கடந்துள்ள போதிலும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் வரவு வீதம் குறைவடைந்துள்ளது.

(பாறுக் ஷிஹான்)

# அபிவிருத்திகள் தேவை என்பதற்காக அடையாளங்களை இழக்க முடியாது

## பிரதேச சபை அமர்வில் தவிசாளர் ஜெயசிறில்



(காரைதீவு குறூப் நிருபர்)

அபிவிருத்திகள் தேவை என்பதற்காக தமிழ்பேசும் மக்களின் தொல்பொருள் வரலாற்றுச் சான்றுகள், அடையாளங்களை அழிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

சபையின் 30வது மாதாந்த அமர்வு கடந்த (17) திங்கட்கிழமை தவிசாளர் தலைமையில் நடைபெற்றது.இதில் உரையாற்றிய போதே அவர்,இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தவிசாளர் மேலும் பேசுகையில்:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தந்தையான இரா.சம்பந்தன் ஐயா 87வயதில் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செயய்யபட்டுள்ளார். இதற்காக அவரை வாழ்த்துகிறேன். அதேபோல் சிறையிலிருந்தவாறு, அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சிவநேசதுரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சரான வியாழேந்திரன் பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், இரா.சாணக்கியன் மற்றும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள த.கலையரசன் ஆகியோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

நாட்டில் ஆட்சிபீடமேறியுள்ள பிரதான கட்சியின் பங்காளராகவுள்ள சு.கட்சி சார்பில் இங்கு வந்துள்ள புதிய உறுப்பினர் ச.ஜெயதாசனுக்கும் வாழ்த்துக்கள். கட்சிக்கு அப்பால் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் சிறந்த சேவையாற்ற வாழ்த்துகிறேன்.

நாட்டின் தேசியக் கொடியில் சிறுபான்மையினரின் அடையாளங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. கிழக்கு தொல்பொருள் செயலணியில் தமிழ் பேசும் பிரிதிநிதிகள் இன்னும் நியமிக்கப்படவில்லை. எனவே அநீதிக்கு எதிராக ஆளும் கட்சியிலுள்ள தமிழ் பேசுவோர் குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் மு.காண்டீபனுக்குப் பதிலாக கட்சியினால் நியமிக்கப்பட்ட புதிய உறுப்பினர் கந்தசாமி ஜெயதாசன் இந்த அமர்வில் சபைக்கு சமுகமளித்தார். அவரை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள், ஊழியர்கள் மாலை சூட்டி வரவேற்றனர். சபையிலும் அனைத்து உறுப்பினர்களும் அவரை வாழ்த்தி உரையாற்றியதுடன் அவரது கன்னியுரையும் இடம்பெற்றது.

# தேசிய ரீதியில் இரண்டாம் இடம்பெற்ற மாணவி றம்மியா கௌரவிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

கல்வி அமைச்சினால் 2019 இல் நடாத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் தரம் 13 ஐச் சேர்ந்த மூதூர், தி/ புனித அந்தோனியார் மகா வித்தியாலய மாணவி ஆர். றம்மியா தேசிய ரீதியில் 2ம் இடம் பெற்றுள்ளார். இவரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் ஜே.கே.பி. திலீப்குமார் தலைமை வகித்தார்.

155 வது வருடத்தை பூர்த்தி செய்துள்ள இப்பாடசாலையில், கடந்த பல வருட காலமாக பல்வேறு போட்டிகளிலும் பங்கு கொண்டு வலய, மாகாண மற்றும் தேசிய ரீதியிலும் பல வெற்றிகளையும் இம்மாணவி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்மாணவியை வழிப்படுத்திய பொறுப்பாசிரியர் எஸ்.எச். எம். அனீஸ் வழிகாட்டல் செய்த ஆசிரியை வை.சியாமா மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். லாபீர் ஆகியோரையும் அபிவிருத்திக் குழுவினர் பாராட்டி கௌரவித்தனர். இந்நிகழ்வில் கல்வி அதிகாரிகள், பாடசாலை அபிவிருத்திக்குழுவினர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அறுவடையான வயல் நிலங்களில் காட்டு யானைகள் தொல்லை



(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

மாவடிப்பள்ளிப் பிரதேசத்தில் வயல் அறுவடைகள் முடிந்துள்ளதால், வயல்நிலங்களில் யானைத் தொல்லைகள் அதிகரித்துள்ளன. இதனால் ஊர்மக்களும் பயணிகளும் அச்சமடைந்துள்ளனர்.

பிற்பகல் வேளைளில் வரும் இந்தக் காட்டுயானைகள் பிரசித்தி பெற்ற மாவடிப்பள்ளி தாம்போதியூடாக அம்பாறை, கல்முனை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளுக்குச் செல்கின்றன. மாவடிப்பள்ளி தாம்போதி அருகில் பிற்பகலில் கூட்டாக வருகை தரும் யானைகளையும் பொது மக்கள் அதனை பார்வையிடுவதையும் காணலாம்.

# மாகாண அமைச்சு, ரயில்வே திணைக்கள வெற்றிடங்களை நிரப்ப போட்டிப் பரீட்சைகள்

(இறக்காமம் தினகரன் நிருபர்)

பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் உள்ளுராட்சி அமைச்சு மற்றும் புகையிரத திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இதன் பொருட்டு பல்வேறு பதவிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முகாமைத்துவ சேவையில் 3 ஆம் தரத்திற்கு திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்கும், இலங்கை அரசாங்க நூலகர் சேவையில் தரம் 3 இற்கு திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளுக்கும், புகையிரத நிலைய அதிபர் தரம் 3 இற்கு திறந்த போட்டிப் பரீட்சைகளும் நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

திறந்த போட்டிப் பரீட்சைகளுக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருப்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட சகல விண்ணப்பங்களும் எதிர்வரும் 2020.08.24 மற்றும் 31 ஆம் திகதிகளுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் திட்டமிடல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை த.பெ.இல. 1503 கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு வயது கட்டுப்பாடு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. எனினும் மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான பூரண விபரங்கள் 14.08.2020ஆம் திகதிய இலங்கை ஜனநாயகசோசலிச குடியரசு வர்த்தமானியில் வெளியிப்பட்டுள்ளது.

## கசிப்பு போத்தல்களை வைத்திருந்தவருக்கு அபராதம்

(றொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் 33 கசிப்பு போத்தல்களை, வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு ரூ 45,000 ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் ரந்திக லக்மால் ஜெயலத் முன்னிலையில் நேற்று (20) இச்சந்தேக நபர் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே நீதவான், இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

# பாடசாலைகளுக்கு போசனை பொதிகள்

(றொட்டவெவ குறூப் நிருபர் அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாணத்தில் 320 பாடசாலைகளுக்கு போசனை பொதிகள் வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம்.சி.எம். ஷரீப் தெரிவித்துள்ளார்.

மத்திய கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிழக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக 320 பாடசாலைகளைச் சேர்ந்த 24660 மாணவர்களுக்கு இப்பொதிகள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் 102 பாடசாலைகளைச் சேர்ந்த 7773 மாணவர்களுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 92 பாடசாலைகளைச் சேர்ந்த 6981 மாணவர்களுக்கும் அம்பாறை மாவட்டத்தில் 73 பாடசாலைகளைச் சேர்ந்த 5427 மாணவர்களுக்கும், கல்முனை கல்வி வலயத்தில் 55 பாடசாலைகளைச் சேர்ந்த 4479 மாணவர்களுக்கும் முதல் கட்டமாக இப்போதைக்கு வழங்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்பொதியில் 200 கிராம் சமபோஷா ஆறு பெக்கெட்டுகளும், 350 கிராம் நூர்லிஸ் 01 பெக்கட்டும், 75 கிராம் பிஸ்கட் 03, கடலை 01 கிலோ மற்றும் 10 முட்டைகள் வழங்கப்பட உள்ளதாகவும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எம். சி. எம். ஷரீப் தெரிவித்தார்.

இதேவேளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக அதிபர்களுக்கு இப்பொதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# காட்டுயானை தாக்கி ஒருவர் மரணம் மற்றொருவர் காயம்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி சந்தணமடு ஆற்றுப்பகுதியில், காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் காயமடைந்தார். இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை (20)காலை 5.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சித்தாண்டிப் பகுதியில் வசிக்கும் இந்நபர், தனது நண்பருடன் கால்நடைகளைப் பார்வையிடச் சென்ற வேளையிலே காட்டு யானை தாக்கியுள்ளது. யானைக்கு அஞ்சி ஓரமாக ஒதுங்கியிருந்த இவ்விருவரையும் யானை தாக்க முற்பட்டது. இதையடுத்து தப்பியோடிய இவர்களைத் துரத்திச் சென்ற யானை,

பொன்னுத்துரை வசந்தகுமார் (வயது52) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையை துரத்திப்பிடித்து காலால் மிதித்துள்ளது. பலமாக தாக்கப்பட்ட நபரை, நண்பர் மீட்டெடுத்து மாவடிவேம்பு வைத்தியசாலையில் அனுமதித்தார். பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சிசிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிசிச்சை பலன்றி உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் குகதாசன் (வயது 35) என்பவரும் படுகாயமடைந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேதவறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் விவசாயம், விலங்கு வேளாண்மைக்காகச் சென்று வருவோரை, காட்டு யானைகள் தொடர்ச்சியாக தாக்கி வருகின்றன.எனவே பொதுமக்களை பாதுகாக்க எல்லைப்பகுதியில் யானைவேலி அமைக்குமாறு பாதிக்கப்படவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அக்கரைப்பற்று கல்வி வலயம் கிழக்கில் முன்னணியாகத் திகழும்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயம் கிழக்கு மாகாணத்தில் முன்னணி வலயமாக மிளிரும் எனத் தெரிவித்த, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.காசிம் இதற்கேற்றவகையில் மாணவர் கல்வி அபிவிருத்திக்கு முக்கியத்துவமளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஏ.எல். எம்.காசிமை வரவேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்; (நிர்வாகம்) ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் காசிம் மேலும் கூறுகையில்: கடந்த மூன்று வருடங்கள் மூதூர் கல்வி வலயத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் நாம் பல்வேறு முன்னணிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வெற்றி கண்டோம். தேசிய மட்டத்தில் 96 ஆவது நிலையிலிருந்த மூதூர் கல்வி வலயத்தை, 71வது நிலைக்கு உயர்த்தினோம். அத்துடன், கடந்த



2018ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் தொகை 89 ஆக இருந்ததை 2019ம் ஆண்டு 187 ஆக அதிகரித்து 120 வீத அதிகரிப்புக்கு வழிகாட்டினோம். மூதூர் கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவுகளை முன்னேற்றினோம். வெளியூர்களில் உயர்தரப் பிரிவுகளில் கல்வி கற்றுவந்த மூதூர் மாணவர்கள், தமது சொந்த ஊரில் கல்வி கற்பதற்கும் உயர் பெறுபேறுகளைப் பெறுவதற்கும் வழிகாட்டினோம்.

2019ம் ஆண்டு க.பொ.த உயர்தர கலைப்பிரிவு தேசியமட்ட தரப்படுத்தலில்,கிழக்கு மாகாண மட்டத்தில் முன்னிலை வகித்த முதல் மூன்று பாடசாலைகளும் மூதூர் கல்வி வலயத்திலே தெரிவாகின. இது மற்றொரு சாதனையாகும்.

மூதூர் கல்வி வலயம் இன்று கிழக்கு மாகாணத்தில் முன்னணி கல்வி வலயமாக உருவாகியுள்ளது. இதற்கு பல பணிப்பாளர்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர். இவ்வலுவலகப் பணிகளை வேறு அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் வருகை தந்து பார்வையிடுமளவிற்கு இவ்வலயம் முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

சேவையின் இறுதிக் காலப்பகுதியில் உள்ள நான், அக்கரைப்பற்று கல்வி வலயத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென ஆவலாகவுள்ளேன்.

இது எமக்கு பாரியதொரு சவாலல்ல. அனைவரும் ஒத்துழைத்தால் இதை இலகுவாக சாதிக்க முடியும். அதற்கான ஒத்துழைப்பை ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கின்றேன். குறிப்பாக கல்விசார் உத்தியோகத்தர்கள் இவ்விடயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

## முஹர்ரம் (ஹிஜ்ரி 1442)

# இஸ்லாமிய புத்தாண்டு உதயம்

அல்லாஹ் தான் நாடியதை படைக்கின்றான். தான் நாடியதை சிறப்புக்குரியதாக தெரிவு செய்கின்றான். அவனது நாட்டத்தில் யாரும் தலையிட முடியாது. அந்த வகையில் வானவர்களில் ஜிப்ரீல் (அலை) சிறப்புக்குரியவர். நபிமார்களில் எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் சிறப்புக்குரியவர்கள். மர்யம் (அலை) அவர்களை அல்லாஹ் உலகில் சிறந்த பெண்மணியாக தெரிவு செய்தான்; மக்கா, மதீனா, பாலஸ்தீன் போன்ற இடங்கள் அல்லாஹ் தெரிவு செய்த புனித இடங்களாகும். காலங்களில் சிறந்தது புனிதமான நான்கு மாதங்கள். மாதங்களில் சிறந்தது ரமழான் மாதம். நாட்களில் சிறந்தது வெள்ளிக்கிழமை. நேரங்களில் சிறந்தது ஸஹர் வேளை. இவை இறைவன் தெரிவு செய்து தந்துள்ள சிறப்புக்குரிய காலங்களாகும். அல்குர்ஆன் கூறும் புனித மாதாங்களில் ஒன்று முஹர்ரம் மாதமாகும். முஹர்ரம் இஸ்லாமிய மாதங்களில் முதல் மாதம். அது சாந்தி சமாதானத்தின் அடையாளம். அமைதி என்ற சுப செய்தியோடு இஸ்லாமிய புத்தாண்டு (ஹிஜ்ரி 1442) பிறந்துள்ளது. அதன் சிறப்புக்களையும், அது ஏன் புனிதம் பெற்றுள்ளது, அந்த மாதங்களை கௌரவிப்பது எவ்வாறு என்பதையும் விளக்குவதே இந்த ஆக்கம்.

### முஹர்ரம் மாதத்தின் சிறப்புகள்:

அல்குர்ஆன் சூரா தௌபாவில் மாதங்கள் குறித்து பின்வருமாறு கூறுகிறது. 'நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு என அவனது பதிவுப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. அந்த நான்கு மாதங்களில் மோதல்களை ஹராமாக்கிய இந்த தீனுல் இஸ்லாம் தான் சீரான, நேரான மார்க்கமாகும். ஆகவே அம்மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள். இணைவைப்பவர்கள் புனித மாதங்களை கண்ணியப்படுத்தாது உங்கள் அனைவருடனும் போர் புரிவது போல் நீங்களும் அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் இறைபயம் கொண்ட தக்வா உள்ளவர்களுடனே இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்' (9:36)

நபி (ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜுப் பேருரையில் பின்வருமாறு கூறியதாக அபூபக்கர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். 'வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த நாள் முதல் அவனது விதிப்படியே காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு வருடத்தில் 12 மாதங்கள் உள்ளன. அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. மூன்று மாதங்கள் தொடராகவும் ஒன்று இடையில் தனியாகவும் அமைந்துள்ளது. தொடராக வரும் மாதங்கள் துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் என்பனவாகும். தனியாக வருவது ரஜப் மாதம் ஆகும். அது ஜமாதுல்ஆகிர் மாதத்திற்கும் ஷஃபான் மாதத்திற்கும் நடுவில் அமைந்துள்ளது'. **(புகாரி, முஸ்லிம்).**

அஷ்ஷெய்க்
மொஹம்மத் பகீஹுத்தீன்

கண்ணியமிக்க இக்காலப்பகுதியை உரியமுறையில் பயன்படுத்தி இறை திருப்தியை பெற முயற்சிக்காமலிருப்பது மிகப் பெரும் அநியாயமும் கைசேதமும் ஆகும் என அல்குர்ஆன் சூறா தவ்பா 36ம் வசனத்தில் குறிப்பிடுகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'நீங்கள் நோன்பு நோற்பதற்கு ரமழான் மாதத்தை அடுத்து மிகச் சிறந்த மாதம் முஹர்ரம் மாதமாகும். தொழுகையில் பர்ழான தொழுகையை அடுத்து மிகச் சிறந்த தொழுகை இரவு நேர (கியாமுல்லைல்) தொழுகையாகும்'. (முஸ்லிம்)

### புனித மாதங்கள்; ஏன்? எதற்கு?

இனி, ஏன் இந்த நான்கு மாதங்களும் கண்ணியப்படுத்தப் பட்டுள்ளன? அதற்கான காரணங்கள் யாது என்பதை பின் வருமாறு சுருக்கமாக விளக்களாம்.

1. பாதுகாப்பு மனித வாழ்வின் அடிப் படை தேவையாகும். வாழும் இடம், பயணிக்கும் பாதை, தங்குமிடம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை போலவ அவனது உயிர் உடமைகள் பாதுகாப்பாக இருப்பது அவசியத் தேவையாகும். மனித வாழ்வின் பாதுகாப்பிற்கும், இஸ்திரத்தன்மைக்கும் உத்தரவாதமளிக்கப்படுவது இன்றியமையாததாகும்.

அந்த வகையில்தான் புனித மக்கா நகர் பாதுகாப்பு வலயமாகவும், ஒரு வருடத்தின் மூன்றிலொரு பகுதி பதுகாப்பு உத்தரவாதம் மிக்க புனித காலப்பகுதியாகவும் ஆக்கப்பட்டுள்ளது. அதாவது நான்கு மாதங்கள் யுத்தங்கள் இல்லாத சமாதான காலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதில் எந்தவிதமான சண்டைகளும் கிடையாது. முஹர்ரம் வருடத்தின் முதல் மாதம். அதன் பொருள் உலக சமாதானத்தின் அடையாளமாக இஸ்லாமிய புத்தாண்டு பிறக்கிறது.

2. உலகில் பரந்து வாழும் மனிதர்கள் தூரப்பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பாக இறையில்லத்தை நோக்கி வந்து ஹஜ், உம்ரா கடமைகளை நிறைவேற்றிவிட்டுச் செல்வதற்கான உத்தரவாதம் வழங்கும் நோக்கில் இந்த நான்கு மாதங்களிலும் மோதல் தவிர்ப்பு கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது. முதலில் துல்கஃதாவில் போராட்டங்கள், வன்முறைகள், அத்து மீறல்கள், அநீதிகள், பாவச்செயல்கள் போன்றவற்றிலிருந்து முற்றாக விலகி விடுபடுவதன் மூலம் மனிதர்கள் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் இறையில்லத்தை நோக்கி வர முடியும். அவ்வாறே துல்ஹஜ் மாதத்தில் அதே பாதுகாப்பு உணர்வுடன் ஹஜ் கடமைகளை நிறைவேற்றவும் பின்னர் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் முஹர்ரம் மாதம் முழுவதும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லவும் முடிகிறது. இங்கு இறை அடியார்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக காலமும் இடமும் முழுப்பாதுகாப்பு உள்ளவைகளாக உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே இடைப்பட்ட காலப்பகுதியில் உம்றா கடமையை நிறைவேற்ற வருவோருக்கு பாதுகாப்பு உத்தரவாதமாக ரஜப் மாதம் புனிதமாதமாக ஆக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk

## பல்லின சமூகத்துடனான முஸ்லிம்களின் உறவு

முஸ்லிம் சமூகம் தமக்கிடையே ஒற்றுமையும், ஒருங்கிணைப்பையும் உருவாக்கி குழப்பமற்ற சூழலை ஏற்படுத்தி, சமாதான பூமியாக இவ்வுலகைக் காண அழைப்பு விடுக்கும் இஸ்லாம், முஸ்லிமல்லாதவர்களுக்கிடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான சிறந்த வழி காட்டல்களை எமக்குச் சொல்லித் தந்திருக்கிறது. இவ்வுலகில் வாழும் மனிதர்கள், பல்வேறு குழுக்களாகவும் பிரிவுகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தம்மை கல்வி, செல்வம், குடும்ப அந்தஸ்து நாடு, இன, மத, நிற பிரதேசம் போன்ற பல்வேறு அடிப்படைகளில் தராதரப்படுத்தி வாழ்கின்றனர். இவ்வாறு பிரிந்து வாழ்வது பிரபஞ்ச ரீதியாக இருப்பினும், மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள் மனிதர்கள் மனிதர்களைப் பிரித்து நோக்குவது கவலைக்குரியது.

ஆனால் மதம் என்ற வகையில் இஸ்லாம், மனிதர்களை இவ்வாறு பிரித்து நோக்கவில்லை. முழு மனித இனத்திற்குமான தூதாகவே தம்மை அறிமுக்கப்படுத்திக் கொள்கை அடிப்படையில் மாத்திரம் மனித சமூகத்தை இரண்டாக நோக்குகிறது. அதாவது இஸ்லாத்தை ஏற்றோர் அனைவரும் ஒரு பிரிவினராகவும் அதனை ஏற்காதோர் அனைவரும் மறுபிரிவினராகவும் கணிக்கப்படுவர். அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

“அவன்தான் உங்களைப் படைத்தான். உங்களில் நிராகரிப்போரும் இருக்கின்றனர். நீங்கள் செய்பவற்றை அவன் நன்கு விளங்கிக் கொள்வான். (அல்குர்ஆன்)

இவ்விரு பிரிவினரும் ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தில் வாழும் போது ஒரு பிரிவினருக்கிடையிலான தொடர்புகள் எவ்வாறு அமைய வேண்டுமென இஸ்லாம் தெளிவாக விளக்கியுள்ளது.

மனிதர்களே! உங்களை நாம் ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்காக உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்” (அல்குர்ஆன் 49:13)

மேலும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லிமல்லாதோரின் உரிமைகளைச் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. முஹம்மத் நபியவர்கள் முழுமனித சமுதாயத்துக்கும் அருளாக வந்தவர்கள் என்ற வகையில், இன, மத, மொழி பிரதேச வேறுபாடுகளையோ பாகுபாடுகளையோ பாராட்டாது எல்லோருக்கும் சமநீதியை வழங்க வேண்டுமென் பதில் உறுதியாக இருந்தார்கள். இதற்கு சான்றாக பின்வரும் நபிமொழியைக் கொள்ளலாம்.

“எவர் முஸ்லிமல்லாத சிறுபான்மை இனத்தை சேர்ந்த ஒருவரை இம்சிக்கின்றாரோ நான் அவரது எதிரியாவேன். நான் எவரது எதிரியாக இருக்கின்றேனோ மறுமையில் அவருக்கெதிராக வாதிடுபவனாக இருப்பேன்.”

(தாரீகு பக்தாத் அல் கதீபுல் பக்தாதி)

“எவர் உடன்படிக்கை செய்து வாழும் ஒரு முஸ்லிமல்லாத ஒருவரைக் கொலை செய்கிறாரோ அவர் சுவனத்தின் வாடையைக்கூட நுகரமாட்டார். அவரைப் பொறுத்தவரையில் சுவனத்தின் வாடை நாற்பது ஆண்டுகள் தொலைவில் இருக்கும்” (புகாரி)

இவ்வாறு முஸ்லிமல்லாதோரின் உரிமையில் கைவைப்பதனை அல்லது அவர்களுக்கு அநீதி இழைப்பதனை ஒரு பெரும் குற்றச்செயலாகவும் பெரும் பாவச் செயலாகவும் கருதுகின்ற தனித்துவமான மார்க்கமாக இஸ்லாம் விளங்குகின்து.

இஸ்லாமிய வரலாற்றில் குறிப்பாக நபியர்களின் வாழ்வில் அவர்கள் பிறசமயத்தவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணியும் அவர்களை மதித்தும் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

ஏ.எம். முஹம்மத் ஸப்வான்
சீனன்கோட்டை, பேருவளை




## சகோதரத்துவத்தின் தேவை...

முஸ்லிம் சமூகத்திற்கெதிரான பல்வேறுபட்ட சவால்கள் தோன்றிய போது அவற்றுக்கு முகம்கொடுப்பதற்காக இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஒவ்வொரு இயக்கமும் தனக்கென்று ஓர் இலக்கு, நோக்கம், வழிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டது. அதற்கேற்ப தனது உறுப்பினர்களையும் பயிற்றுவிக்க முனைந்தது. இதையே இயக்கச் சிந்தனை என்போம்.

ஒவ்வொரு இஸ்லாமிய இயக்கமும் எப்போதும் தனது உறுப்பினர்களை தஃவா, செயல் ரீதியான பயிற்றுவிப்பு, அர்ப்பணம், கட்டுப்பாடு, தியாகம் போன்ற பகுதிகளில் புடம் போட்டெடுக்க முனையும். இஸ்லாமிய இயக்கம் மற்றும் அதன் உறுப்பினர்களிடம் ஒரு சிந்தனை இருக்கும். அந்த சிந்தனை இயக்கத்திற்கு பணிவிடை செய்யக்கூடியதொரு சிந்தனை. அது இயக்கம் வரைந்த கோட்டை பாதுகாக்கக் கூடியது. அச்சிந்தனை இயக்க நிலைப்பாடுகளையும் அதன் தேர்வுகளையும் நியாயம் காணக்கூடியதாக இருக்கும். இயக்க நலன்களுக்கே அது முன்னுரிமை கொடுக்கும்.சிந்தனை இயக்கம் என்பது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டது. இப்பிரிவினர் சிந்தனைகளை உருவாக்குவதிலும் அதனை வளர்த்தெடுப்பதிலும் மும்முரமாக இருப்பர். காலத்திற்கேற்ற புதிய சிந்தனைகளை உருவாக்குவதும் இஸ்லாத்தை அதன் மூலம் முன்வைக்க முனைவதும் இவர்களது போக்கு.

இந்தியாவிலும் இலங்கையிலும் இஸ்லாமிய இயக்கங்களில் அண்மைக் காலமாக சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை பார்க்க முடிகிறது. சிந்தனை இயக்கத்தை இலக்காக வைத்து சிலர்கள் உருவாகியுள்ளனர் என்பது ஆரோக்கியமான நகர்வு. குறிப்பாக இளைஞர்களை உள்ளடக்கிய ஆய்வு மன்றங்கள் தோன்றி இருப்பது வரவேற்கத்தக்கது.

அஷ்ஷெய்க்
ரிஷாத் நஜ்முதீன்

## குடும்ப வாழ்வில் கணவன், மனைவி...

ஒரு பெண்ணை திருமணம் செய்வது எதற்காக என்றால் அவளோடு மௌத்து (மரணம்) வரைக்கும் மட்டுமின்றி மறு உலகிலும் இருவரும் நிம்மதியாக சந்தோசமாக வாழ்வதற்கே. ஆனால் சில கணவர்களின் தவறுகளினால் அந்த மனைவி அக்கணவனை வெறுக்க நேரிடுகிறது. சில சமயம் விவாகரத்தும் இடம்பெறுவதை நாம் சமூகத்தில் காணலாம்.

கணவன் என்பவன் சில சந்தர்ப்பங்களில் தெரியாமல் தவறுகள் செய்ய நேரிடுகிறது. அப்படி தெரியமால் கூட பிழைகள் இன்றி தன் மனைவியோடு நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கு சில ஆலோசனைகள்....

01) மனைவியை சந்திக்கும் போது எப்போதும் மலர்ந்த முகத்துடன் இருங்கள்.அதுசதகாவகும்.

02) வீட்டினுள் நுழையும் போது ஸலாம் சொல்ல மறந்துவிட வேண்டாம். ஸலாம் சொல்வது நபிமொழி மட்டுமல்லாது உங்கள் மனைவிக்கு நீங்கள் செய்யும் பிரார்த்தனையும்கூட. அது ஷைத்தானை வீட்டிலிருந்து விரட்டிவிடும்.

03) நேர்மறையான நல்ல வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பேசுங்கள். நாவைப் பேணுவது அவசியம். அதன் தீய விளைவுகளே அதிகமானது.

04) எதிர்மறையான வார்த்தைகளைத் தவிர்ந்து கொள்ளுங்கள். விவாதம் வேண்டாம். அது திருமண வாழ்க்கைக்கு நஞ்சு போன்றது.

05) உங்களின் வார்த்தைகளுக்கு மனைவி பதில் கொடுக்கும்பொழுது செவிதாழ்த்துங்கள். மனைவியின் கருத்துக்களை செவிசாயுங்கள்.

06) தெளிவான வார்த்தைகளைக் கொண்டு பேசுங்கள். அவள் புரிந்து கொள்ளவில்லையெனில் மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்.

07) மனைவியைச் செல்லமாக அழகிய பெயர்களைக் கொண்டு அழையுங்கள். நபியவர்கள் தனது மனைவி ஆயிஷா நாயகியை “ஆயிஷ்” என்று செல்லமாக அழைத்தார்கள்.

08) நல்ல விடயங்களை அவளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

09) நகைச்சுவையுடன் கலகலப்பாகப் பேசி அவளின் பிரச்சினைகளை மறக்கடியுங்கள்.

10) அவளது இன்பத்தில் மட்டுமல்லாது துன்பத்திலும் பங்கு கொள்ளுங்கள்.

11) பிள்ளைகளை பராமரிக்கும் விடயங்களில் அவளுக்கு உதவியாய் இருங்கள்.சிலர் பிள்ளை பெறும்வரைதான் நமது கடமை அதன் பின் மனைவிதான் பொறுப்பு என அலட்சியமாய் இருக்கின்றனர். அதனால் நம் மீதும், பிள்ளை பெறுவதிலும் மனைவிக்கு வெறுப்பு ஏற்படலாம்.

12) இஸ்லாம் அனுமதித்த விடயங்களை பார்ப்பதற்கு வெளியில் அழைத்துச் செல்லுங்கள்.

## ஸாலிஹான பிள்ளைகளின் உருவாக்கம்

நவீன காலத்தை பொருத்தமட்டில் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் பிரதானமானது தான் தன்னுடைய பிள்ளைகளை எவ்வாறு ஸாலிஹான பிள்ளைகளாக உருவாக்குவதென்பதாகும். ஏனெனில் நவீன கால கண்டுபிடிப்புகளுக்கும் சமூக வலைத்தளங்களுக்கும் இன்று முஸ்லிம் சமுதாயம் எவ்வித வயது வித்தியாசமுமின்றி அடிமையாகியுள்ளது.

ஒவ்வொரு பெற்றோர்களதும் ஆசையும் கனவும் தனக்கு பிறக்கயிருக்கின்ற குழந்தையை இறுதி வரைக்கும் நல்ல பிள்ளையாக வாழ வைக்க வேண்டுமென்பதாகும். ஆனால் கவலைக்குறிய விடயம் முஸ்லிம் வாலிபர்களும் முஸ்லிம் யுவதிகளும் தங்களுடைய பெறுமதியான இளமைப் பருவத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று அதிகமான முஸ்லிம் வாலிபர்களும் யுவதிகளும் சினிமாவினை கடுமையாக நேசித்துக் கொண்டிருக்கின்றார்கள். எந்தளவிற்கென்றால் வீடுகளில் பார்த்து வந்த இந்த சினிமாவை தியேட்டர்கள் என்று சொல்லப்படுகின்ற ஷைத்தானுடைய இல்லத்துக்கு சென்று பார்க்கின்ற அளவுக்கு சமூகத்தில் உள்ள இளைஞர்களும் யுவதிகளும் மாறிவிட்டனர்.

இது தவிர மதுபோதைக்கு அடிமையான சமூகமாகவும் இசை கலாசாரத்தை அல்குர்ஆனை விரும்புவதை விடவும் பன்மடங்கு விரும்பக்கூடிய சமூகமாக எம்முஸ்லிம் சமூகம் இருப்பது மிகவும் வேதனை தரக்கூடிய உண்மையாகும்.

பல்கலைக்கழகம் சென்று என்னுடைய பிள்ளை உயர் கல்வியை கற்க வேண்டும் என்று எத்தனையோ பெற்றோர்கள் சந்தோஷமாக அங்கு அனுப்புகின்றார்கள். ஆனாலும் குறிப்பாக முஸ்லிம் வாலிப பெண்கள் அங்கு மாற்று மத ஆண்களுடன் மோசமான தொடர்புகளை வைத்துக் கொள்கின்றார்கள். எப்படி ஒரு ஆண் இன்னுமொரு ஆணுடன் தொடர்பு வைத்திருப்பானோ அதே போன்ற தொடர்பினையே முஸ்லிம் வாலிப பெண்கள் மாற்று மதத்தவர்கள் என்று கூட பார்க்காது அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றனர்.

இப்படிப்பட்ட ஒவ்வொரு சீர்கேடுகளும் சமூகத்திலிருந்து கழற்றி எறியப்பட்டு எதிர்கால தலைமுறையினரை இஸ்லாத்துக்கு பொறுத்தமானவர்களாக மாற்றுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

அஷ்ஷெய்க்
பர்ஹான் அஹமட் (ஸலபி)

ஒரு வீட்டைக் கட்டுகின்ற போது எப்படி அதன் அத்திவாரத்தை பலமாகக் கட்ட வேண்டுமோ அதே போன்று குழந்தைகளை பெறுவதற்கு முன் தனக்கு தேடுகின்ற துணைவியை ஸாலிஹான ஒருவராகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு ஆண் எப்படிப்பட்ட பெண்ணை திருமணம் செய்ய வேண்டுமென்ற அழகிய உபதேசத்தை தந்திருக்கின்றார்கள். அந்தவகையில்தான் மார்க்கமுள்ள பெண்ணை திருமணம் செய்யுமாறு சொல்லித் தந்திருக்கின்றார்கள்.

ஒரு மனிதன் மார்க்கப்பற்றுள்ள பெண்ணை திருமணம் செய்வதன் மூலம் தனக்கு பிறக்கயிருக்கின்ற குழந்தையையும் ஸாலிஹான பிள்ளையாக மாற்றமுடியும். இந்த உண்மையை வரலாற்று நிகழ்வுகளில் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நீண்ட காலமாக பிள்ளைகளில்லாமல் இருந்தார்கள். இக் காலப்பகுதியில் தான் இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை குழந்தையாகக் கொடுத்து சிறிது நாட்களிலேயே பாலைவனத்தில் தாயுடன் விட்டு விட்டு வருமாறு அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

சிறு வயதிலிருந்து தாயின் அரவணைப்புடன் மாத்திரம் வளர்கின்றது. அறிகின்ற பருவத்தை இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அடைந்த உடன் அல்லாஹ் இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அறுக்குமாறு கனவின் மூலம் காட்டுகிறான். இந்த விடயத்தைப் பற்றி மகனிடத்தில் தந்தை கூறியவுடன் எந்தவித தயக்கமுமின்றி அல்லாஹ்வுடைய கட்டளையை நிறைவேற்றுங்கள் என்று துணிந்து சொல்கின்றது என்றால் அவர் வளர்கின்ற போது ஈமானை சுமந்த தாயிடம் வளர்ந்தார்கள். ஈமானை சுமந்த தாய் தன்னுடைய பிள்ளையையும் ஈமானிய பண்புள்ள பிள்ளையாக வளர்த்திருக்கிறார்கள். எனவே தாயினுடைய அரவணைப்பில் தான் பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் தங்கியுள்ளமையை காணலாம்.

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் இல 77/1A, பான்ஸ் பிளேஸ், கொழும்பு 07 தற்போது இல 19ஹாஸ்பிடல் ரோடு, கொன்கோட் NSW 2138 அவுஸ்திரேலியாவில் வசிக்கும் லக்ஷ்மன் குணவர்தன ஆகிய நான், அறிவித்து கொள்ளும் விடயம் என்னவெனில், இல 77 / 1A , பான்ஸ் பிளேஸ், கொழும்பு 07 தற்போது இல 19 ஹாஸ்பிடல் ரோடு, கொன்கோட் வெஸ்ட், NSW 2138 அவுஸ்திரேலியாவை சேர்ந்த திருமதி பௌலிணி ஜெனி.ஃபர் குணவர்தன திருமணத்திற்கு முன் டீ சில்வா என்பவருக்கும் இல 45 ப்ரேப்ஷெருக் வீதி, கொழும்பு 2 சேர்ந்த டவ்ன் திரேஸ் ஏக்கநாயக்க என்பவருக்கும் என்னால் பெப்ரவரி ஆறாம் திகதி எம். எப் ஸ்ப்ரோல் பிரசித்த நொத்தாரிசுவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல 3974 சிறப்பு அற்றோணித்தத்துவ பத்திரத்தால் வழங்கப்பட்டதுமாகிய அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கை சோசலிச குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திகதி: 14ம் திகதி ஆகஸ்ட் மாதம். 2020**

**லக்ஷ்மன் குணவர்தன**

## வெற்றிடங்கள்

*கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்*

**திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆய்வுகள் மற்றும் புத்தாக்கங்கள் ராஜாங்க அமைச்சு**

**பிரதான ஆய்வு நிபுணர்**

**(அதி நவீன மருத்துவ பரிசீலனை ஆய்வுகூடம் மற்றும் அதி நவீன, மசகு எண்ணெய் மற்றும் உராய்வு நீக்கி, ஆய்வு கூடம்)**

**நிறுவன செயலாளர்**

**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

**சிரேஷ்ட ஆய்வு நிபுணர்**

**(அதி நவீன மருத்துவ பரிசீலனை ஆய்வுகூடம் மற்றும் அதி நவீன மசகு எண்ணெய் மற்றும், உராய்வு நீக்கி ஆய்வு கூடம்)**

**ஆய்வு நிபுணர் (அதி நவீன மருத்துவ பரிசீலனை ஆய்வுகூடம்)**

**உள்ளக கணக்காய்வாளர்**

**சிரேஷ்ட நிர்வாக அதிகாரி (நிர்வாகம்)**

**உள்ளக கணக்காய்வு அதிகாரி**

பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2020.09.04
மேலதிக விபரங்களுக்கு 2020.08.21
Daily News பத்திரிகையை பார்க்கவும்.
பணிப்பாளர் நாயகம்/ பி.நி.அ.
கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### சலவை உபகரண வழங்கலுக்கான கேள்வி

# கேள்வி திருத்த அறிவித்தல்

பின்வரும் உபகரணங்களின் பெறுகைக்காக 2020.03.10 ஆம் திகதியன்று இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

| கேள்வி இல. | உபகரணம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|
| Q 191/20 | Roller Ironer Machine | 01 | 3,000 ரூபா |
| Q 192/20 | Press Ironer Machine | 01 | 2,500 ரூபா |

மேலேயுள்ள விளம்பரத்திற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவு செய்து கவனிக்கவும்.

**பந்தி இல. 1** : திகதியானது 2020.09.03 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

**பந்தி இல. 5** : கேள்வி ஆவணத்தை பெற்றுக் கொள்ளும் திகதியானது 2020.09.02 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

**பந்தி இல. 6** : விலைமனுக்களின் மூடல் மற்றும் திறத்தல் ஆகியன 2020.09.03 ஆம் திகதி மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள விளம்பரத்தின் ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**



# சியபத பினான்ஸ் பீஎல்சீ

## 2020 ஜூன் 30 இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்கள்

### வருமானம் பற்றிய கூற்று

இலங்கை ரூபாய் ஆயிரங்களில்

| முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | 30-ஜூன்-2020 (கணக்காய்வு செய்யப்படவில்லை) | 30-ஜூன்-2019 (கணக்காய்வு செய்யப்படவில்லை) | மாற்றம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 3,526,476 | 3,460,080 | 66,396 |
| கழிக்க: வட்டிச் செலவுகள் | (2,090,254) | (2,143,462) | (53,208) |
| தேறிய வட்டி வருமானம் | 1,436,222 | 1,316,618 | 119,604 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 138,303 | 148,298 | (9,995) |
| கழிக்க: கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள் | - | - | - |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 138,303 | 148,298 | (9,995) |
| வியாபாரத்தின் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறிக்கப்பட்ட நிதிசார் சாதனங்களிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - |
| நிதி முதலீடுகளின் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 150,382 | 158,427 | (8,045) |
| மொத்த தொழிற்பாட்டு வருமானம் | 1,724,907 | 1,623,343 | 101,564 |
| கழிக்க: கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களின் இழப்பு | | | |
| தனிப்பட்ட இழப்பு | (85,246) | (268,643) | (183,397) |
| கூட்டு இழப்பு | (524,893) | (282,784) | 242,109 |
| ஏனையவை | - | - | - |
| தேறிய தொழிற்பாட்டு வருமானம் | 1,114,768 | 1,071,916 | 42,852 |
| கழிக்க: தொழிற்பாட்டு செலவுகள் | | | |
| ஆளணியினர் செலவுகள் | (419,363) | (366,451) | 52,912 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன்தீர்ப்பு | (42,834) | (39,461) | 3,373 |
| ஏனைய செலவுகள் | (258,430) | (298,529) | (40,099) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகளுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | 394,141 | 367,475 | 26,666 |
| நிதிசார் சேவைகள் மீதான வரிகள் | (108,721) | (146,208) | (37,487) |
| நிதிச் சேவைகள் மீதான வரிகளுக்குப் பின்னரான தொழிற்பாட்டு இலாபம் | 285,420 | 221,267 | 64,153 |
| இணைந்த மற்றும் கூட்டு முயற்சிகளுக்கான இலாபங்களின் பங்கு | - | - | - |
| வரி விதிப்புக்கு முன்னரான இலாபம் | 285,420 | 221,267 | 64,153 |
| வரிச் செலவுகள் | (84,156) | (89,403) | (5,247) |
| காலப்பகுதிக்கான இலாபம் | 201,264 | 131,864 | 69,400 |
| பங்கொன்றிற்கான சம்பாத்தியங்கள் (ரூ.) | 2.73 | 1.82 | 0.91 |

### தெரிவுசெய்யப்பட்ட செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள்

| விடயம் | 2020 ஜூன் 30ல் உள்ளவாறாக | 2019 ஜூன் 30ல் உள்ளவாறாக |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதனத்தின் போதியதன்மை** | | |
| பிரதான மூலதனம் (வரிசை I மூலதனம்) ரூ. '000 | 3,472,305 | 3,146,244 |
| மொத்த மூலதன ஆதாரம் ரூ. '000 (வரிசை I மூலதனம் + வரிசை II மூலதனம்) | 5,475,123 | 4,200,126 |
| பிரதான மூலதன போதியதன்மை விகிதம், இடர் நிறைந்த சொத்துக்களின் சதவீதமாக (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 2020-6.5% / 2019- 6%) | 8.71% | 8.54% |
| மொத்த மூலதன போதியதன்மை விகிதம், இடர் நிறைந்த சொத்துக்களின் சதவீதமாக (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 2020 - 10.5% / 2019-10%) | 13.74% | 11.40% |
| வைப்புப் பொறுப்புகளுக்கான மூலதன நிதிகளின் விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு, 10%)* | 43.70% | 36.92% |
| * [illegible] | | |
| **சொத்துக்களின் தன்மை** | | |
| முழு மொத்த செயலாற்றுகையற்ற கடன்கள் ரூ. '000 | 4,538,110 | 3,496,632 |
| முழு மொத்த செயலாற்றுகையற்ற கடன்களின் விகிதம், % | 11.00% | 9.22% |
| தேறிய செயலாற்றுகையற்ற கடன்கள் விகிதம், % | 3.36% | 3.22% |
| **இலாபத்தன்மை (%)** | | |
| தேறிய வட்டி விளிம்பு | 7.31% | 7.67% |
| வருமான விகிதத்துக்கான செலவு | 41.78% | 43.39% |
| சராசரி மொத்த சொத்துக்களின் மீதான திரும்பல் (வரிக்கு முன்) | 1.32% | 1.15% |
| சராசரி மொத்த சொத்துக்களின் மீதான திரும்பல் (வரிக்குப் பின்) | 0.93% | 0.69% |
| சராசரி மொத்த உரிமைப் பங்கின் மீதான திரும்பல் (வரிக்குப் பின்) | 9.74% | 7.36% |
| **ஒழுங்குபடுத்தும் திரவத்தன்மை (ரூ. '000)** | | |
| தேவையான ஆகக்குறைந்த திரவச் சொத்துக்களின் தொகை | 1,106,079 | 1,899,324 |
| தேவையான ஆகக்குறைந்த அரசாங்கப் பிணைப்பொறுப்புக்களின் தொகை* | 1,701,063 | 2,254,033 |
| கிடைக்கக்கூடிய திரவச் சொத்துக்களின் தொகை | 1,909,009 | 2,488,015 |
| கிடைக்கக்கூடிய அரசாங்கப் பிணைப்பொறுப்புக்களின் தொகை | 1,709,699 | 2,361,519 |
| ** அரசாங்கப் பிணைப்பொறுப்புக்களின் ஆகக்குறைந்த தேவைப்பாட்டுத் தொகையானது மாத முடிவின் சராசரியின் 5% (7.5% - 2019) விதத்துக்கும் முன்னைய நிதியாண்டின் பன்னிரெண்டு மாதங்களின் வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் கடன் பெறுகைகளுக்கும் சமமாகும் | | |
| **குறிப்பறிக்கைத் தகவல்கள்** | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 751 | 636 |
| கிளைகளின் எண்ணிக்கை | 37 | 32 |
| சேவை நிலையங்களின் எண்ணிக்கை | - | - |
| அடகு பிடிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை | - | - |
| பணிப்பாளர்களின் எண்ணிக்கை | | |
| - நிறைவேற்றுநர் | 1 | 1 |
| - நிறைவேற்றுநர் அல்லாதோர் | 8 | 8 |

சொத்தாண்மை- சம்பத் வங்கி பீஎல்சீ பூரணச் சொத்தாண்மையுடைய துணைநிறுவனம்

### நிதிசார் நிலைமைக் கூற்று

இலங்கை ரூபாய் ஆயிரங்களில்

| திகதியன்று உள்ளவாறானவை | 30-ஜூன்-2020 (கணக்காய்வு செய்யப்படவில்லை) | 30-ஜூன்-2019 (கணக்காய்வு செய்யப்படவில்லை) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 2,725,392 | 352,918 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்த பிணையங்கள் | 1,710,946 | 2,371,771 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - குத்தகைகள் | 30,547,240 | 27,988,794 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - வாடகைக் கொள்வனவு | 3,860 | 13,092 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் - ஏனையவை | 7,098,848 | 7,434,345 |
| ஏனைய எல்லாமடங்கிய வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட ஒப்புரவுச்சாதனங்கள் | 56 | 56 |
| கடன் தீர்ப்புச் செலவில் கடன் சாதனங்கள் | 45,619 | 4,327 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1,147,834 | 845,906 |
| பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் | 406,390 | - |
| அருவச் சொத்துக்கள் | 46,129 | 67,739 |
| ஏனைய கடனாளிகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 835,550 | 583,354 |
| மொத்தச் சொத்துக்கள் | 44,567,864 | 39,662,302 |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 15,523,406 | 16,436,773 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 15,886,561 | 13,095,739 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 1,641,988 | 2,757,070 |
| செலுத்தப்பட வேண்டிய வருமான வரி விதிப்பு | 401,811 | 172,329 |
| பிற்போடப்பட்ட வரி விதிப்புப் பொறுப்பு | 153,662 | 491,687 |
| ஏனைய பொறுப்புக்கள் | 3,891,541 | 854,060 |
| இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் | 79,759 | 50,278 |
| துணைநிலையாக்கப்பட்ட தவணைக் கடன்கள் | 2,772,047 | 2,136,600 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 40,350,775 | 35,994,536 |
| **உரிமைப் பங்கு** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 1,522,881 | 1,379,922 |
| நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | 164,000 | 139,000 |
| மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்கு | 117,951 | 107,763 |
| வைத்திருக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | 2,412,257 | 2,041,081 |
| மொத்த உரிமைப் பங்கு | 4,217,089 | 3,667,766 |
| மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமைப் பங்கு | 44,567,864 | 39,662,302 |
| எதிர்பாராப் பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கங்கள் | 712,169 | 632,276 |

### எல்லாமடங்கிய வருமானக் கூற்று

இலங்கை ரூபாய் ஆயிரங்களில்

| முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது | 30-ஜூன்-2020 (கணக்காய்வு செய்யப்படவில்லை) | 30-ஜூன்-2019 (கணக்காய்வு செய்யப்படவில்லை) |
|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம் | 201,264 | 131,864 |
| ஏனைய எல்லாமடங்கிய வருமானம் / தேறிய நிகர வரிச் செலவுகள் நீங்கலாக | - | - |
| காலப்பகுதிக்கான எல்லாமடங்கிய வருமானத்தின் மொத்தம் | 201,264 | 131,864 |

### சான்றுப்படுத்தல்

கீழே கையொப்பமிட்ட சியபத பினான்ஸ் பீஎல்சீயின் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிதித்தலைவர் ஆகிய நாம் கூட்டாகப் பின்வருமாறு சான்றுப்படுத்துகின்றோம்:

(அ) மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்கும் வரைவிலக்கணங்களுக்கும் இணங்கியொழுகத் தயாரிக்கப்பட்டுள்ளன;

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டாலன்றி, உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களில் இருந்து பெறப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
ஆனந்த செனவிரத்ன
முகாமைப் பணிப்பாளர்
சியபத பினான்ஸ் பீஎல்சீ
திகதி: 2020 ஜூலை 28

(ஒப்பம்)
ருவன் வண்ணிஆராச்சி
நிதித்தலைவர்
சியபத பினான்ஸ் பீஎல்சீ
திகதி: 2020 ஜூலை 28

இல: 46/12, சயுரு செவண, நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: 011-7605605 பெக்ஸ்: 011-7605606
கம்பனிப் பதிவு இல. PB 917 PQ

பிச் தரப்படுத்தல் : 'A' நிலையான நோக்கு

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

## ஊவா மாகாண சபை

### பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை கட்டிடத்தொகுதி சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குதல் 2020 – 2021ஆம் வருடங்கள்

01. ஊவா மாகாண சபை கட்டிடத் தொகுதியினுள் சுமார் 500 ஊழியர்கள் மற்றும் நாளாந்தம் சேவைகளைப் பெற்றுக்கொள்ள சுமார் 100 பேர்கள் வரையில் உள்ளனர் என்பதுடன் இவர்களுக்கும் மற்றும் உற்சவங்கள், கூட்டங்கள் போன்றவற்றுக்காக வருபவர்களுக்கு உணவு, பானங்களை வழங்குவதற்காகவும் ஊவா மாகாண சபை கட்டிடத்தொகுதியின் தரை மாடியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை நடாத்திக் கொண்டு செல்லப்படுகின்றது.

02. பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் 2020-10-04ஆம் திகதி முதல் 2021-10-03ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு அந்த சிற்றுண்டிச்சாலையைக் குத்தகைக்கு வழங்குவதற்காக குறித்த துறையில் 01 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவம் மற்றும் இது தொடர்பிலான வியாபார பெயர்ப் பதிவைக் கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மற்றும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

03. இதன்பொருட்டு மீளளிக்கப்படாத படிவக் கட்டணமாக இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில் 1000.00 ரூபாவை 2020-08-21ஆம் திகதி முதல் 2020-09-11ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் ஊவா மாகாண சபை பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்குச் செலுத்திப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை முறியாக இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில் 15,000.00 ரூபாவை பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது அதற்குச் சமமான பெறுமதிக்கு பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) பெயரில் 02 மாதங்களுக்குச் செல்லுபடியாகக் கூடிய இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட அரச வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை பெறுகைக் குழுவுக்கு 2020-09-14ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அக்கேள்விகள் 2020-09-14ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பின் உடனடியாக பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையற்ற விலைக்கோரல் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. மேலதிக விபரங்கள் மற்றும் நிந்தனைகளை பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தின் 055-2229393 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு அல்லது www.up.gov.lk எனும் இணைத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

07. பெறுகை தொடர்பான இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழ தன்னகத்தே கொண்டுள்ளது.

**டீ.ஜீ.சீ. ஜயதுங்க,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு.**

**பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்) அலுவலகம்,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**
2020-08-19.

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**லீப்ஸ்டிட்ச் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம் :
**PV 00225747**

கூட்டிணைக்கப்பட்ட திகதி :
**11.08.2020**

பதிவு முகவரி : **இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, ராஜகிரிய.**

**கம்பனி செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டது.**

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**சிகோ சன்ஜொயின்ட் வென்சர் (பீவிடீ) எல்டீடி**

பதிவிலக்கம் :
**பிவீ 00213062**

பதிவு முகவரி :
**கலாவெவ, விஜித்தபுர.**

**கம்பனி செயலாளர் மூலம் வழங்கப்பட்டது.**

## 1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. அம்கோ/3/5/அ/146**
**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல: 4/3/2/2011//FR/82**

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக் கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2184/6 மற்றும் 2020.07.13ஆம் திகதி வெளியான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் III பகுதியினைப் பார்க்கவும்.

**அட்டவணை**

i. மாவட்டம் : நுவரெலியா
ii. பிரதேச செயலகம் : அம்பகமுவ கோரளை
iii. கிராமம் : ஹற்றன் பூல்பேங்க் தோட்டம்
iv. கிராம உத்தியோகத்தர் பிரிவு : 319பி ஹற்றன் வடக்கு
v. காணியின் பெயர் : ஹற்றன் தோட்டம்
vi. வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும்: ஆரம்ப வரைபட இலக்கம் 3351இன் துண்டிலக்கம் 01, 03
vii. பரப்பளவு : ஹெக்டயார் 0.0626

**சித்தாரா ருவினி கமகே**
**பிரதேச செயலாளர்,**
**அம்பகமுவ கோரளை.**

2020.08.11ஆம் திகதி
**பிரதேச செயலகம்,**
**அம்பகமுவ கோரளை.**

# பெறுகை அறிவித்தல்

## பொது வைத்தியசாலை அம்பாறை

## மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

மருத்துவ உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவுவதற்கு 2020.09.15 பி.ப. 2.00 மணி வரை முதன்மையானவர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்றவர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை அம்பாறை பொது வைத்தியசாலை பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

| இல. | உருப்படி | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| 01 | High end Ultrasound Scanner | 01 | 1000.00 |
| 02 | Dialysis Machine | 02 | 1000.00 |
| 03 | C Pap Machine (Adult) | 04 | 1000.00 |
| 04 | Neonatal C Pap Machine | 02 | 1000.00 |
| 05 | Centrifuge | 01 | 1000.00 |
| 06 | Wheel Stretcher Cart | 15 | 1000.00 |
| 07 | Electric Three Functiion Hospital Bed | 02 | 1000.00 |

01. ◆ அம்பாறை, பொது வைத்தியசாலை, பணிப்பாளருக்கு எழுத்து மூல விண்ணப்பத்தை, மற்றும்
   ◆ அம்பாறை, பொது வைத்தியசாலை, பணிப்பாளர், கணக்காளருக்கு மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 1000.00 ஐ காசாகச் செலுத்துவதன் பேரில் மற்றும்
   ◆ வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி மற்றும்
   ◆ தயாரிப்புக்காக முகவர்களினால் வழங்கப்படும் ஒரு சான்றிதழ் கடிதத்தை

   சமர்ப்பிப்பதன் பேரில் எந்த ஆர்வமுள்ள தகைமையுள்ள கேள்விதாரர்கள், முகவர்கள் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர்களால் 2020.08.25 முதல் 2020.09.14 மு.ப. 9.00 இற்கும் பி.ப. 2.30 இற்கும் இடையில் வேலை நாட்களில் அம்பாறை பொது வைத்தியசாலை, பணிப்பாளரிடமிருந்து நகல்களுடனான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

02. பொறியிடப்பட்ட கேள்விகளை அம்பாறை, பொது வைத்தியசாலை பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 2020.09.15 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் அம்பாறை பொது வைத்தியசாலை, கணக்காளரின் அலுவலக அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதக் கேள்விகள் நிராகரிக்கப்படும். உறையில் மருத்துவ உபகரணங்கள் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. கேள்விதாரர்கள் அல்லது அவர்கள் சார்பாக கலந்துகொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அவர்களது தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களது தொழில் தருநரிடமிருந்து அங்கீகாரக் கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் பேரிலும், அவர்களது பங்குபற்றுதலிலும் 2020.09.15ம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கீழ்க்காணும் முகவரியில் கேள்விகள் திறக்கப்படும்.

04. சகல கேள்வியுடனும், மொத்தக் கேள்விப் பெறுமதியின் 1% பிணையொன்றை இணைத்தல் வேண்டும்.

05. பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதியானதாகும்.

**டொக்டர். உபுல் விஜேநாயக்க**
**பணிப்பாளர்**
**2020.08.18**

# பெறுகை அறிவித்தல்

மேல் மாகாணத்தின் கழிவு காமைத்துவ அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் கரதியான நிலவள முகாமைத்துவ நிலையம் தொடர்பாக வாடகை அடிப்படையில் (வருடமொன்றிற்கு) கனரக இயந்திராதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சீருடைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் கரதியான பொஹொரவத்த மற்றும் திக்ஓவிட்ட செயற்றிட்டம் தொடர்பாக உர வகைகளைப் பொதி செய்யும் உறைகளை அச்சிடுவதற்காக உள்நாட்டு வழங்குநர்களிடமீருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

| இலக்கம் | உருப்படி | | விபாரம் | | அலகுகளின் எண்ணிக்கை | விலைமனு ஆவணத் தொகுதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | கனரக இயந்திராதி (வாடகை அடிப்படையில்) | | Long Arm Excavator | | 01 | A |
| | | | Short Arm Excavator | | 01 | |
| 02 | சீருடைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | சீருடைகள் | T-shirt | Long | 90 | B |
| | | | | Short | 304 | |
| | | | Shirt | Long | 36 | |
| | | | | Short | 34 | |
| | | | Bottom | | 304 | |
| | | | Trousers (Denim) | | 112 | |
| | | பாதுகாப்பு உபகரணங்கள் | கம்பூட்ஸ் | மஞ்சள் நிறம் | 08 | C |
| | | | | கறுப்பு நிறம் | 115 | |
| | | | பாதுகாப்பு பாதணிகள் | | 70 | |
| | | | பாதுகாப்பு கையுறை | Soft Rubber | 772 | |
| | | | | Soft Cloth | 1899 | |
| | | | | Heavy Rubber | 1041 | |
| | | | பாதுகாப்பு கண்ணாடி | | 91 | |
| | | | மழைக் கவசம் | | 98 | |
| | | | குடை | | 123 | |
| | | | தலைக்கவசம் | | 13 | |
| | | | தொப்பி | | 132 | |
| | | | மூக்குக்கவசம் (எக்டிவேட்டர் கபன் லேசர் சகிதம்) | | 3118 | |
| 03 | உரத்தைப் பொதியிடும் உறைகள் | | 50 kg (60x105) cm | | 12,500 | D |
| | | | 20 kg (50x70) cm | | 26,000 | |
| | | | 10 kg (36x65) cm | | 20,000 | |
| | | | 5 kg (45x30) cm | | 26,000 | |

இது தொடர்பான விபரக் குறிப்புகள் அடங்கிய பெறுகை ஆவணத் தொகுதியை 2020.08.21 முதல் 2020.09.14 அன்று பி.ப. 2.00 வரை மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் செயற்படுத்தப்படும் "மிஹிசறு வியமண" வளங்கள் முகாமைத்துவ நிலையம், கரதியான, தும்போவில, பிலியந்தல என்ற முகவரியில் அமைந்துள்ள கரதியான வளங்கள் முகாமைத்துவ நிலையத்திலிருந்து 1,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணமொன்றைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்களுடன் பெறுகை ஆவணங்கள் முத்திரை பொறிக்கப்பட்டு 2020.09.14 அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக மேலே முகவரியிலுள்ள "மிஹிசறு வியமண" வளங்கள் முகாமைத்துவ நிலையம், கரதியான, தும்போவில, பிலியந்தலவில் அமைந்துள்ள கரதியான வளங்கள் முகாமைத்துவ நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படவோ அல்லது அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ வேண்டும். மேற்படி அனைத்து வழங்கல்கள் தொடர்பான முன்னோடி விலைமனுக் கூட்டம் (Pre-Bid Meeting) கரதியான வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் முகாமையாளர் அலுவலக வளவில் 2020.09.03 அன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

விலைமனுக்கள் திறக்கப்படுவது 2020.09.14 அன்று பி.ப. 2.15 மணிக்கு கரதியான வளங்கள் முகாமைத்துவ நிலைய அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அது தொடர்டபாக விலைமனுதாரருக்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் (மே.மா.)**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0113056703/ பெக்ஸ்: 0112613317**
2020.08.21

## இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## சிற்றுண்டிச்சாலைகளுக்கான கேள்விமனுக் கோரல் – 2020

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில், சம்மாந்துறை வளாகங்களில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்படும் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்துவதற்கு அனுபவமும், தேர்ச்சியும் பெற்ற சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து இத்தால் அதற்கான கேள்விகள் தனித்தனியே கோரப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கேள்விச்சபைத் தலைவரினால் 04.09.2020ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) பி.ப. 03.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.


1. **உத்தியோகத்தர் சிற்றுண்டிச்சாலை**
2. **கலை மற்றும் கலாசாரபீட சிற்றுண்டிச்சாலை**
3. **வர்த்தகம் மற்றும் முகாமைத்துவபீட சிற்றுண்டிச்சாலை**
4. **பிரயோக விஞ்ஞானங்கள்பீட சிற்றுண்டிச்சாலை, சம்மாந்துறை**
5. **இஸ்லாம் மற்றும் அரபுமொழிபீட சிற்றுண்டிச்சாலை**
6. **பொறியியல்பீட சிற்றுண்டிச்சாலை**
7. **தொழில்நுட்பபீட சிற்றுண்டிச்சாலை**
8. **பெண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை (FVG 01)**
9. **பெண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை (FVG 04)**
10. **ஆண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை (FVB 01)**
11. **ஆண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை (FVB 03)**
12. **ஆண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை (FVB 04)**
13. **ஆண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை பிரயோக விஞ்ஞானங்கள்பீடம், சம்மாந்துறை**

இதற்கான கேள்விப்படிவங்களை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ நலன்புரி பிரிவிடமிருந்து **ரூபா. 1,000 ஐ மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாகவும், ரூபா. 500 ஐ மீளளிக்கப்படாத கட்டுப்பணமாகவும் பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பதன்** மூலம் 03.09.2020 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பெறப்பட்ட கேள்விப்பத்திரத்தினைப் பூரணப்படுத்தி உரிய திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிப்பதன் மூலம் இதற்கான தகுதியினைப் பெறலாம். பொருத்தமான சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களை தெரிவு செய்வதில் பல்கலைக்கழகத்தின் தீர்மானமே இறுதியானதாகும் என்பதை கேள்விமனுக்களை சமர்ப்பிக்கும் மனுதாரர்கள் கவனத்தில் கொள்ளவும். இவ்விதம் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களுக்குக் குறித்தொதுக்கப்படுகின்ற சிற்றுண்டிச்சாலையில் உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளை வழங்குதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி மனுக்கள் 04.09.2020ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் "சிரேஷ்ட உதவிப்பதிவாளர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா, ஒலுவில் #32360" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் இரு பிரதிகளை அனுப்புதல் வேண்டும். அல்லது பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விமனுப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சிற்றுண்டிச்சாலைக்கான கேள்விமனு-2020"** எனவும் **தாங்கள் விண்ணப்பிக்கும் குறித்த சிற்றுண்டிச்சாலையின் தொடரிலக்கம், பெயரையும் குறிப்பிட்டு** அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வைப்புப் பணத்தையும், கட்டுப்பணத்தையும் காசுக் கட்டளையாக அனுப்புவதனால் அக்காசுக் கட்டளைகள் நிதியாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்றும் மாற்றப்பட வேண்டிய தபாலகம் ஒலுவில் என்றும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழகப் பூங்கா,**
**ஒலுவில் #32360**
21.08.2020

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE








இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் நூறாவது நிறைவாண்டை முன்னிட்டு சங்கத்தின் அங்கத்தினர்களுக்கிடையில் வலைப்பந்தாட்டப்போட்டி இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் மைதானத்திலும் கரப்பந்தாட்டப்போட்டி ஹற்றன் தரவலை மைதானத்திலும் போட்டிகள் இடம்பெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வில் மங்கல விளக்கேற்றவுடன் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. வலைப்பந்தாட்டப் போட்டியில் அவிசாவளை கிளையைச் சேர்ந்த பெண்கள் வெற்றிபெற்றதுடன், கரப்பந்தாட்டப் போட்டியில் தலவாக்கலை கிளையைச் சேர்ந்த ஆண்களும் போட்டியில் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற இரண்டு குழுவினர்களுக்கும் சங்கத்தின் தலைவர் சத்துர சமரசிங்க பொதுச்செயலாளர் நாத் அமரசிங்க ஆகியோர் கேடயங்களை வழங்குவதை படங்களில் காணலாம். படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# நீர் நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்பு தாவரங்களை அழிக்க நடவடிக்கை

அக்குறணை குறூப் நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் நீர் நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்புத் தாவர இனங்களை அழிப்பதற்கு பேராதனை கன்னொறுவா விவசாய திணைக்கள தாவரப் பாதுகாப்புப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாத்தளை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் காரியாலயம் ஊடாக கலேவலை கமநல சேவைப் பிரிவிலுள்ள குளங்ளை ஆக்கிரமித்துள்ள நீர் தாவர இனங்களையே அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடாவெவ, ரலரொட்டவெவ ஆகிய குளங்களில் முதற்கட்டமாக இவை அழிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான ரீதியில் அறியப்பட்ட 'ஜப்பான் ஜபர' மற்றும் 'சல்வீனியா' பூண்டுகளே அழிக்கப்பட்டுள்ளன. மாத்தளை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தில்ருக்சி விஜேரத்ன மற்றும் தம்புள்ள உதவி விவசாயப் பணிப்பாளர் ஜயந்த சுமனரத்ன ஆகியோர் இதன் ஆரம்ப வைபவத்தில் பங்குகொண்டனர்.





இறக்குவானை தேர்தல் தொகுதியில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவான முதிதா பிரஷாந்தனி தெ சொய்சாவிற்கு நேற்றுமுன்தினம் இறக்குவானை நகர ஆதரவாளர்கள் நடத்திய வரவேற்பு நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். படங்கள்: இறக்குவானை தினகரன் நிருபர்

## மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில்

# ஆளணி, வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு போதிய ஆளணி, வளப்பற்றாக்குறை நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

1969ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையானது நவீன வடிவமைப்பில் பாரிய இடவசதியுடன் கட்டப்பட்ட வைத்தியசாலையாக விளங்குகின்றது.

அந்த வகையில் இவ்வைத்திய சாலையில் சுமார் 167 கட்டில்கள் கொண்ட விசாலமான இடவசதியும் காணப்படுகின்ற போதிலும் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு போதியளவிலான வைத்தியர்கள் இன்மையால் மக்கள் அவதியுறுகின்றனர்.



மகப்பேற்று வைத்தியர்; ஒரு நாளும், விசேட வைத்தியர் ஒரு நாளும், சத்திரசிகிச்சை வைத்தியர் ஒருநாளும்,பொது வைத்திய நிபுணர் ஒருநாளும், கண்,காது விசேட வைத்தியர் ஒருநாளைக்கும் காலை 9மணி முதல் நண்பகல் 12மணிவரையில் வாரத்திற்கு ஒருமுறை நியமிக்கப்படுவார்களானால், இங்கு வசிக்கும் 100,000ற்கும் மேற்பட்ட மக்கள் தமது நோய்களுக்கான தீர்வை பெற்று சுகாதாரத்தினை பேண கூடியதாக இருக்கும்.

மேலும், சிவனொளிபாதமலையில் பருவ காலத்தில் தரிசிக்க வருவோருக்கும் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றது. எனினும் போதுமான அளவு இடவசதிகள், உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுகின்றது.

மேலும் வைத்தியசாலையில் மகப்பேறு இடம்பெறுவதும் முற்றாக இல்லாது போயுள்ளதுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட அறைகள் வெறுமையாக காட்சியளிப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

எனினும், ஆரம்ப கட்டத்தில் அதிகளவிலான மகப்பேறுகள் இடம்பெற்றமை குறிப்பிடதக்க விடயமாகும். எனவே, அரசானது இதனை கவனத்தில் எடுத்து தேவையான உபகரணங்களை வழங்குவதன் ஊடாக வைத்தியசேவைகளை தடையின்றி வழங்க உதவ வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர்.

எனவே, தற்போது கடமைகளை ஏற்றுள்ள புதிய சுகாதார அமைச்சானது இவற்றை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மலையக அரச வைத்தியசாலைகளில்

# முறையான கர்ப்பகால ஸ்கேன் இயந்திரங்கள் இன்மையால் கர்ப்பிணிகள் அவதி

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மலையகத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு கர்ப்பகாலத்தில் மேற்கொள்ளப்படும் ஸ்கேன் (Ultra sound scan) பரிசோதனைக்கான இயந்திரங்கள் அரசாங்க மருத்துவமனைகளில் முறையாக இல்லாமையால் தனியார் மருத்துவமனைகளை நாடி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கருத்தரித்த நாளில் இருந்து மகப்பேறு வரையிலான காலப்பகுதியில் மாதந்தோறும் பரிசோதனை மேற்கொள்கின்றனர். எனினும் அரசாங்க மருத்துவ மனைகளில் சரியான இயந்திரங்கள் இன்மையால் தாம் தனியார் மருத்துவமனைகளை நாடி செல்வதாக கர்ப்பிணி தாய்மார்கள் தெரிவிக்கின்றனர்.

தனியார் மருத்துவமனைகளில் ஒரு முறை ஸ்கேன் பரிசோதனைக்கு 3000 ரூபாவிற்கு அதிகமாக பணம் அறவிடப்படுகிறது என கர்ப்பிணி தாய்மார்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனால் கர்ப்பிணி தாய்மார்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர் எனவும் கூறுகின்றனர்.

அதுமட்டுமின்றி கர்ப்பகாலத்தில் தாம் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவிக்கின்றனர். வசதியானவர்கள் பரிசோதனைக்கான பணத்தை இலகுவாக செலுத்தி சிகிச்சை பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு பணம் செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

இதன் காரணமாக தற்காலத்தில் பெண்கள் இவ்வாறான செலவுகளுக்கு பயந்து குழந்தை பெற்றுக் கொள்ள முன்வர தயங்குகின்றனர். எனவே அரசாங்கம் அரச வைத்திய சாலைகளில் இவ்வாறான பரிசோதனைகளுக்கான சரியான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமானால் அது கர்ப்பிணி பெண்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

எனவே அரசாங்கமானது மலையக அரச வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்தி அதற்கு தேவையான



சகல பரிசோதனை கருவிகளையும் வழங்குவதனூடாக இவர்களுடைய நெருக்கடியை போக்க வேண்டும் என கர்ப்பிணிதாய்மார்கள் தெரிவிக்கின்றனர்.

# தீயினால் பொலிஸ் நிலையம் பகுதியளவில் சேதம்

## 25 பொலிஸ் அதிகாரிகள் நிர்க்கதி

## சீருடைகள் ஆவணங்கள் இன்மையால் நெருக்கடி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

வெலிகபொல பொலிஸ் நிலையத்தின் தங்குமிட விடுதி மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தங்குமிடம் ஆகியவை எரிந்து நாசமானதால் அதிகாரிகள் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட விடுதியில் தங்கியிருந்த 24 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்குமிட வசதியின்றி தனியார் இடங்களில் இருந்து சேவைக்கு வருவதாகதெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17ஆம் திகதி ஒரே நேரத்தில் மின்சார துண்டிப்பு ஏற்பட்டதையடுத்து மீண்டும் திடீரென மின்சாரம் விநியோகிக்கப்பட்டதால் இத்தீ சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலைமையினால் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடைகள், உபகரணங்கள், ஆவணங்கள் தங்குமிட விடுதி உட்பட பொலிஸ் நிலையப் பொறுப்பாளரின் இருப்பிடமும் பாதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் தற்போது கணக்கிடப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



பன்விலை விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலய அதிபர் பொன் இராஜகோபால் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியர் சமூகமும் மாணவர்களும் இணைந்து உணர்வு பூர்வமான பிரியாவிடை வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது எடுக்கப்பட்ட நிகழ்வுகளை இங்கு படங்களில் காணலாம். படங்கள்: புசல்லாவை தினகரன் நிருபர்

# கற்பாறை சரிந்து விழுந்ததில் பெண்ணொருவர் பலி

பதுளை தினகரன் விசேட நிருபர்

தமது வீட்டை புனர்நிர்மாணம் செய்வதற்காக கருங்கற்களை எடுத்துக் கொண்டிருந்த போது கற்பாறை சரிந்து விழுந்ததில் படுகாயமடைந்த பெண்ணொருவர் உடபுசல்லாவை அரசினர் மருத்துவமனையில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் உடபுசல்லாவை பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய டபிள்யு.டி.பேபி நோனா என்ற மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் சட்ட வைத்திய பிரேத பரிசோதனைக்காக உடபுசல்லாவை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் வீட்டை புனரமைப்பதற்காக கருங்கற்களை எடுத்துக் கொண்டிருந்த போதே கற்பாறையொன்று சரிந்து விழுந்து அவர் உயிரிழந்துள்ளார்.

உடனடியாக கற்பாறை அகற்றப்பட்டு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்ற போதும் சிகிச்சை பலனின்றி அப் பெண் உயிரிழந்துள்ளார்.

ஊவா – பரணகமைப் பொலிஸார் இச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மாகாண சபை முறை நாட்டிற்கு தேவையற்றது

## அஸ்கிரிய விகாரையின் பீடாதிபதி வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர்

எம்.ஏ,அமீனுல்லா



மாகாண சபை முறை நாட்டிற்கு தேவையற்றது என அஸ்கிரிய விகாரையின் பீடாதிபதி சங்கைக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சடடத்தரணி உதயன கிரிந்திகொட நேற்று முன்தினம் காலை அஸ்கிரிய மகா விஹாரைக்குச் சென்று அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொர்டர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கில் பயங்கரவாதம் தீவிரமாக இருந்த காலகட்டத்தில் அரசியல் தீர்வை வழங்குவதற்கான நோக்கத்துடன் மாகாண சபைகள் நிறுவப்பட்டன. இப்போது நாட்டில் பயங்கரவாதம் இல்லாததால் இதுபோன்ற ஒரு விஷயம் அவசியமில்லை.

பொதுமக்களில் யாரும் மோசமாக பாதிக்கப்படவில்லை என்பதே யதார்த்தம் எனவே அதை பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதாக தான் கருதுவதாகவும் பீடாதிபதி தெரிவித்தார்.

மேலும், தேர்தல் முறைமை சட்டம் உட்பட தொல்பொருள் மற்றும் விஹார தேவாலகம் என்பன போன்ற சட்டங்கள் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அணிக்கு பாரிய பொறுப்பினை பொதுமக்கள் வழங்கியுள்ளனர். இந்நிலையில் அவ்வாறு, பொதுமக்களினால் வழங்கப்பட்டிருக்கும் ஆணையை நிறைவேற்ற மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் முழு மனதுடன் பொறுப்பாக நின்று, செயற்பட வேண்டும் எனவும் பீடாதிபதி கேட்டுக்கொண்டார்.

## 1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. அம்பகோ/3/4/அ/137**
**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல: LD/05/2004/PC/200**

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக் கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 2184/6 மற்றும் 2020.07.13ஆம் திகதி வெளியான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் III பகுதியினைப் பார்க்கவும்.

**அட்டவணை**

- i. மாவட்டம் : நுவரெலியா
- ii. பிரதேச செயலகம் : அம்பகமுவ கோரளை
- iii. கிராமம் : பொகவந்தலாவ
- iv. கிராம உத்தியோகத்தர் பிரிவு : 319ஈ பொகவந்தலாவ
- v. காணியின் பெயர் : பொகவான தோட்டம் (பிரிட்வெல் பிரிவு)
- vi. வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் : ஆரம்ப வரைபட இலக்கம் 2838இன் துண்டிலக்கம் 01
- vii. பரப்பளவு : ஹெக்டயார் 0.0712

**சித்தாரா ருவினி கமகே**
**பிரதேச செயலாளர்,**
**அம்பகமுவ கோரளை.**

2020.08.11ஆம் திகதி
**பிரதேச செயலகம்,**
**அம்பகமுவ கோரளை.**




## TRINCOMALEE CAMPUS, EASTERN UNIVERSITY, SRI LANKA

### WALK-IN INTERVIEW

Suitable candidates are invited for walk-in interview for the following temporary posts on 25th August, 2020 (Tuesday) in the Board Room, Office of the Rector, Trincomalee Campus, Konesapuri, Nilaveli, Trincomalee.

- Post of Temporary Assistant Lecturer
- Post of Temporary Demonstrator
- Post of Temporary Research Assistant

For more details refer the website www.tc.esn.ac.lk

**Registrar**
**Eastern University, Sri Lanka.**
19.08.2020

## தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

தென் மாகாண அரச சேவையில் வெற்றிடமாக உள்ள நெசவு மட்பாண்ட உலோக கைத்தொழில் ஆலோசகர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பதற்கெனதகைமை தென்மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் கீழ்வரும் தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கல்வித் தகைமை :**
க.பொ.த(சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் / ஆங்கிலமொழி கணிதம் உட்பட மூன்று திறமைச்சித்திகளுடன் ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தொழிற்தகைமை :**

- மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு
  தென் மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் உரிய கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் இரண்டு வருட சேவை அனுபவத்துடன் கூடிய நிரந்தர ஊழியராக இருத்தல்.
- **திறந்த விண்ணப்பதாரிகளுக்கு**
  தேசிய சிற்பக்கலை சபை அல்லது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் அல்லது தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் ஆறுமாத கால அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சிப்பாடநெறி ஒன்றினை மேற்கொண்டிருத்தல்.
  அல்லது
  குறித்த துறையில் இரண்டு வருட கால அனுபவத்தை பெற்றிருத்தல்.

தென்மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.psc.sp.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட தங்களது விண்ணப்பப்படிவத்தினை 2020.09.18ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு கிடைக்கக்கூடிய விதமாக பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**செயலாளர்**
**தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு**
**6ம் மாடி**
**மாவட்ட செயலக கட்டடத் தொகுதி**
**காலி**

**மேலதிக விபரங்களுக்கு 091-2248450**

**கே.எல். தயானந்த**
**செயலாளர்**

## இலங்கைச் சுங்கம்

## கையகப்படுத்தப்பட்ட பொருட்களின் விலைமனு விற்பனை

கையகப்படுத்தப்பட்ட தங்கம், தங்க/வெள்ளி ஆபரணங்கள், மின்சார/ இலத்திரனியல் பாவனைப் பொருட்கள் மற்றும் நானாவித உருப்படிகளின் விலைமனு விற்பனையானது, இலங்கை சுங்கத்தின் மத்திய அகற்றல் பணிமனையில் 2020 ஓகஸ்ட் 27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

மீளளிக்கப்படாத தொகையான ரூ. 25/= செலுத்தப்படுவதன் மூலம் 2020 ஓகஸ்ட் 24, 25, 26ஆம் திகதிகளில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.30 வரை இலங்கைச் சுங்கம், 3ஆம் மாடி, மத்திய அகற்றல் பணிமனையிலிருந்து விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் பட்டியலைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் பட்டியல் 2020 ஓகஸ்ட் 21ஆம் திகதி முதற்கொண்டு சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.customs.gov.lk** இலும் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு **011-2221300/ 011-2430795/ 011-2143434** நீடிப்பு **7300** என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைச் சுங்கம்,**
**சுங்க இல்லம்,**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

## கேள்வி அழைப்பு

**நிதியமைச்சு**
**கொழும்பு-01**

### நிதி அமைச்சின் வாகனங்களில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டயர் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்கள் விற்பனைக்கான விலைமனுக்கள் கோரல்


**IFB No: MF06/22/07/2020**

நிதியமைச்சின் வாகனங்களில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டயர் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இந்த டயர்களை 2020.08.24 முதல் 2020.08.28 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் கொழும்பு-01, லோட்டஸ் வீதி, நிதியமைச்சு வளாகத்தில் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன், மீளளிக்கப்படாத ரூ. 500.00 வைப்புத் தொகையை செலுத்தி விலைமனுக்களைச் சமர்ப்பிக்கின்ற மாதிரிப் பத்திரங்களை நிதியமைச்சின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "டயர் இற்கான விலைமனுக்கள் கோரல்" என்று தெளிவாக எழுதி பிரதான கணக்காளர், கணக்குப் பிரிவு, நிதியமைச்சு, மேல் தரை மாடி, புதிய கட்டிடம், கொழும்பு-01 என்ற முகவரிக்கு 2020.08.28ஆம் திகதி பி.ப. 2.30 இற்கு முன் பொறியிட்டு ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் அந்த நேரத்திலேயே கேள்விகள் திறக்கப்படுவதால் அவ்வேளையில் உங்களுக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**சிறிய அளவிலான பெறுகைக்குழு,**
**நிதியமைச்சு,**
**லோட்டஸ் வீதி, கொழும்பு-01.**
2020.08.21




## லங்கா இலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவட்) லிமிட்டட்

## தொழில்நுட்பவியலாளர் பதவி தரம் III

லங்கா இலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவட்) லிமிட்டட் என்பது நீர்கொழும்பு முதல் காலி வரையான நாட்டின் கரையோரப் பிரதேசத்தை செயற்பாட்டுத் தளமாகக் கொண்டியங்கும் ஏழு கிளைகளைக் கொண்டமைந்த 500,000 இற்கும் மேற்பட்ட பாவனையாளர்களுக்கு சேவையை வழங்கும் மற்றும் 1500 இற்கும் மேற்பட்ட ஊழியர் பலத்தைக் கொண்டுள்ள இலங்கையிலுள்ள ஒரு விநியோக அலகாகும். அது கம்பனியின் மேற்படி பதவி தொடர்பாக எந்தவொரு செயற்பாட்டுப் பிரதேசத்திலும் கடமையாற்ற விரும்பும் தகுதியுள்ள ஆட்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

| | | |
|---|---|---|
| **கல்வித் தகைமைகள்** | : | க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணித பாடங்கள் உள்ளிட்டதாக ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| **துறைசார்ந்த தகைமைகள்** | : | உரித்தான துறையில் TV/EC மூலம் அங்கீகரிக்கப்படும் NVQ மட்டம் 4 சான்றிதழ் பாடநெறி. |
| **மேலதிக தகைமைகள்** | : | மென்பொருளில் அறிவு மற்றும் தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ள மற்றும் / அல்லது "D" வகுப்பு வாகன அனுமதிப் பத்திரத்துடன் வாகனம் செலுத்திய அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| **வயது** | : | 2020.09.01 அன்று 40 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும். |

விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவது, ஒரு நேர்முகத் தேர்வு மற்றும் ஒரு துறை சார்ந்த பரீட்சார்த்தம் அடிப்படையிலானதாகும்.

உறவினரல்லாத சிபாரிசு செய்யும் நடுவர்கள் இருவரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு கொள்ள முடியுமான தொலைபேசி இலக்கங்களுடன் சான்றிதழ் பிரதிகளுடன் கூடிய உங்கள் விரிவான சுயவிபரக் கோவையை 2020 செப்டெம்பர் 01 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

**மனிதவள மற்றும் நிர்வாகத் தலைவர்,**
**லங்கா இலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிறைவட்) லிமிட்டட்**
**3ஆம் மாடி, ஈ.எச். குறே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**



This service is now implemented Island-wide.
Lake House is proud to partner this intiative.

LAKE HOUSE
For classified advertisements and for replies received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**நிதி அமைச்சு**

## இலங்கை சுங்கம்

### Procurement of 600,000 Nos. of Bottled shaped Bolt Security Seals

1. திணைக்களத்திற்காக 600,000 Bottled shaped Bolt Security Seals இன் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுங்கத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விளக்கம் | விலைமனுப்பிணைத் தொகை (இலங்கை ரூபாவில்) மற்றும் செல்லுபடியாகும் காலப்பகுதி | விலைமனு மூடல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| Log/T/02/01/2020 | 600,000 Bottled shaped Bolt Security seals இன் பெறுகை. | 500,000 2021.02.25 ஆம் திகதி வரையும் | 2020.09.15ஆம் திகதியன்று | பி.ப. 2 மணிக்கு |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 2020 செப்டம்பர் 15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் இலங்கை சுங்கம், 2 ஆம் மாடியின் பிரதான சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. 2020 செப்டம்பர் 15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள 'சுங்க இல்லம்'', இலங்கை சுங்கம், 6 ஆம் மாடி, லொஜிஸ்டிக்ஸ் பணியகம், லொஜிஸ்டிக்ஸ் இற்கான சுங்க பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை சுங்க லொஜிஸ்டிக்ஸ் இற்கான சுங்க பணிப்பாளரிடமிருந்து பெற்று 2020 ஓகஸ்ட் 21 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்', இல.: 40, பிரதான வீதி, கொழும்பு-11.**
**தொலைபேசி: 011-2221680.**
**2020 ஓகஸ்ட் 21 ஆம் திகதியன்று.**

## கொழும்பு மாநகர சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் சேவைகளின் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| | குறிப்பீட்டிலக்கம் | விளக்கம் |
|---|---|---|
| 1. | CPD/16/ சுகாதார சுத்திகரிப்பு சேவை/01/2020 | மாநகர இடப்பரப்புகளின் கொழும்பு மாநகர எல்லையினுள் சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்கல் - 01 (ஒன்பது அமைவிடங்களில்) |

* ஒன்பது அமைவிடங்களுக்கும் தனித்தனியான விலைமனு உத்தரவாதங்கள் தேவை.

